
# தேனருவி

· தை ஹற்று ·




thenaruvi

30 சதம்

இலங்கை எங்கிலும் இணையில்லாது

விளங்கும் ஒரே ஒரு பீடி

# ராஜபீடி ஸ்பெசல்




ராஜபீடி ஸ்பெசலை

இன்றே வாங்கி உபயோகியுங்கள்.

"ராஜபீடி கம்பெனி"

399 பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவின்யூ,

கொழும்பு-14.


நிறைந்த கூந்தல் வளர்ச்சிக்கு
நிகரற்றது
கேசவர்த்தினி
விநியோகஸ்தர்கள்
ஜுபிட்டர் ஏஜன்ஸி
7. புதிய சோனகத்தெரு, கொழும்பு-12
R. VARATHARAJAN MDU

# பீடிகளிலே ஒரு புதுமை!

பாவிப்பவர்களுக்கெல்லாம்

பூரண திருப்தியை அளிப்பது

# கமலா பீடி

நீங்களும் இன்றுமுதல் எங்கள் கமலா

பீடியை பாவித்து மனத்திருப்தியடையுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்:

## ச. வெ. பொன்னம்பலம்

"கமலா ஸ்டோர்ஸ்"

15, செட்டியார் தெரு, :: கொழும்பு-11

தொலைபேசி: **3597 — 6522** தந்தி: *தாமரை*

சுபகிருது வருஷம்
தை மாதம் 19 உ

# தேனருவி

[தேமதுரத் திங்களிதழ்]

பெப்ருவரி 1-1963

## பொருளடக்கம்

நாடும் ஏடும் —
வருந்துகிறோம் —
சிவகாமி சரிதம் — வெ. கனகசுந்தரி எம். ஏ.
சிரித்தது மல்லிகை — க. திருச்செல்வம்
கடவுளரும் மனிதரும் (மதிப்புரை) — கே. எஸ். சிவகுமாரன்
மலரும் வண்டும் — ''முகிலன்''
பாக்கியசாலி — ''பிரமன்''
குறுவட்டம் — பளீல் காரியப்பர்
பொருளியல் தத்துவம் — வி. நடேசு B. A. Hons.
பரஸ்பர உதவி — ''தீவான்''
உபதேசம் — ''செம்பியன் செல்வன்''
இயக்கமும் இலக்கியமும் — கா சிவத்தம்பி பி ஏ.
கவிதை பிறந்த கதை 8 — ''பரமஹம்சதாசன்''
புதிய பரம்பரை 3 — ''மகேசன்''
தேனருவி பாயவேண்டும் — ''ஜீவா. நாவுக்கரசன்''
பழிக்குப் பழி(அட்டைப்படக் கதை)— செ. இராசதுரை M. A.
அவள் நினைவு — ''பாண்டியூரன்''
''கறை'' — ''செங்கையாழியன்''
ஈழத்து இலக்கியமும்
இன்றைய விமர்சனம் — க. கைலாசபதி
வளரும் கலை — ''ஆனந்த பைரவி''
பயனற்ற பாண்டித்யம் —

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

EDITOR:-
" ARUNMOLI "

ASSITANT EDITOR:
B. MAHENDIRAN

ART:
" SANA "
" SATCHI "

ADVERTISING MANAGER:
K. KANAGARATNAM B. Sc.

MANAGING EDITOR:
S. ARUNMOLITHEVAN

# கொழும்பில்

# 1

முதல்தரமான

சாப்புச்

சாமான்களுக்கு

## எஸ். வி. பொன்னம்பலம் அன் சன்ஸ்

345, பிரதான வீதி, கொழும்பு.

இங்கிலீஷ் மருந்துகளும்
நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரின் சகலவிதமான
தயாரிப்புகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## S. V. Ponnampalam & Sons

**345, Main Street, Colombo.**

டெலிபோன்: 4475
3597 தலைமை அலுவலகம்
6522 இல்லம்

கிளை 1 { நாடும் மொழியும் நமதிரு கண்கள் } ஊற்று 10

# நாடும் ஏடும்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இலக்கியம், கலை, நாகரிகம் பண்பாடு ஆகியன அதிமுக்கியமான நான்கு தூண்களெனச் சொல்லலாம். இந்நான்கும் எவ்வளவு தூரம் - நாட்டு மக்களால் கட்டிக் காக்கப்படுகின்றதோ, காலவேறு பாட்டிற்கேற்ப வளர்ச்சியடைகின்றதோ - அவ்வளவிற்கு மக்கள் அறிவினாலும் - அதன்மூலம் பொருளாதாரத்தினாலும் மேம்படலாம். இதனை உணர்ந்தோ உணராமலோ இன்று இலக்கியத்திற்காகவும் - கலைக்காவும் சேவைசெய்யப் பலர் முன்வந்துள்ளார்கள். இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டியது, தின, வார, மாத இதழ்களின் முக்கியமான கடனாகும்.

இதேவேளை - ஏடுதேடினால் புகழ் கிடைக்குமென்று தெரிந்துகொண்டு அதற்காகப் பேனா பிடிக்க முயல்கின்றவர்களும் உண்டு. இதேபோல் ஏட்டிலே ஆசிரியராக இருக்கவேண்டும் - அதன் மூலம் சம்பாதிக்க வேண்டுமென எண்ணி ஏடு நடாத்த முன்வருபவர்களும் உண்டு. இவர்களிடத்திலே இலக்கிய, இலக்கணப் பற்றில்லாத காரணத்தாலோ என்னவோ இவைகளின் முக்கியத்தைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் - நாட்டு மக்கள் எல்லோரையும் ஆட்டு மந்தைகள் என எண்ணிக்கொண்டு தங்கள் பத்திரிகையின் மூலம் பல 'ஸ்ரண்ட்' விளையாட முனைகின்றார்கள். இப்படியான பத்திரிகைகளுக்கு உடந்தையாக இருக்கின்றார்கள். புகழ் விரும்பும் எழுத்தாளர்கள். இவ்விரு கூட்டத்தினருக்கும் இடம் கொடுத்துக்கொண்டு ''நாங்கள்'' ஆட்டு மந்தைகள்தான் நீங்கள் மேய்ச்சுக் கட்டுங்கள்!'' என்று வாசகர் இருப்பார்களேயானால் - நாட்டிலே நல்ல பல எழுத்தாளர்களோ தரமான சஞ்சிகைகளோ தோன்றவும் முடியாது - நாடு முன்னேறவும் முடியாது. இதனை உணர்ந்துதான் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்

" இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான்
ஏடெழுதல் கேடு நல்கும்
தலைக்கணையில் நெருப்பிட்டுத் தலைவைத்துத்
துயில்வதுபோல் பகைவனைப் போய்
நிலைப்புற்ற தமிழ் ஏட்டில் ஆசிரியனாக்குவது
நீங்கவேண்டும்
கலைப்பண்பும் உயர்நினைப்பும் உடையவரே
ஏடெழுதும் கணக்காயர்கள்!

என்று பாடினார். எனவே,

இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு நாட்டின் நன்மைக்காகச் சேவைசெய்யும் ஏடுகளை ஆதரித்து அதன் வளர்ச்சிக்கு உதவவேண்டியது மக்களின் தலையாய கடமையாகும் இதேபோன்று மக்களிடத்திலே - தரமான பத்திரிகைகள் எதுவென்பதை எடுத்துக்கூறி அதன் முக்கியத்துவத்தை உணர்த்தவேண்டியது பரந்துகிடக்கும் எழுத்தாளர்கள் ஒவ்வொருவரினதும் கடனாகும்.

---


நாகரீக நங்கையர்களே!

● வண்ண கழுத்தணிகளுக்கு!
● மின்னும் காதணிகளுக்கு!
● ஜொலிக்கும் கையணிகளுக்கு!
● ஒலிக்கும் காலணிகளுக்கு!

தரம் குறையாத இமிட்டேசன் நகைகள் தேவையா?

விஜயம் செய்யுங்கள்........

களஞ்சியம் பிரதர்ஸ்

14, சைனா பஜார், சென்னை-1.

(நாடோடி மன்னன், கட்டபொம்மன், தங்கப்பதுமை, மன்னாதி மன்னன், பார்த்திபன் கனவு, வஞ்சிக்கோட்டை வாலிபன் முதலிய படங்களுக்கு நகைகள் சப்ளை செய்தவர்கள்)

தலைமை காரியாலயம்:

161/11. பேங்ஷால் வீதி, கொழும்பு.

கடிதத் தொடர்புகள் சென்னை முகவரிக்கு மட்டும் வைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.


# வர்த்தக நேயர்களே! தேனருவியில்



கே. கனகரட்னம் B. Sc.

உங்கள் பொருட்களை நல்ல முறையில் விளம்பரம் செய்ய வேண்டுமானால் இன்றே கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்,

கே. கனகரட்னம் B. Sc.
மே/பா தேனருவி
441, புளூமெண்டால் வீதி,
கொழும்பு-13.

அன்னை அஞ்சுகம் அம்மையாருடன் கலைஞர் கருணாநிதி அவர்கள் இருக்கும் காட்சி.

## வருந்துகிறோம்!

தென்னகத்தின் வீரர் தி. மு. க. தோழர், கலைஞர் கருணாநிதி அவர்களின் தாயார் அவர்கள் மரண முற்றதை அறிந்து வருந்துகிறோம். அன்னையைப் பறிகொடுத்திருக்கும் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், அன்னாரது குடும்பத்தினருக்கும் நமது அனுதாபங்கள்.

## " தேனருவி "

அலுவலகத்தின் புதிய முகவரி

V

## " தேனருவி "

**441, புளூமெண்டால் வீதி**

**கொழும்பு-13**

---


# அன்றும்



# இன்றும்




பழங்காலத்தில் கைகளினால் தான் களை பிடுங்குவார்கள். அதனால்நேரும் சிரமங்களைப்போக்க, இன்று நாகரீக உலகில் விஞ்ஞான வளர்ச்சியினால் களை பிடுங்கும் ''வீட்டர்'' யந்திரங்கள் உள்ளன.

களை பிடுங்குவதற்கு ''வீட்டர்'' யந்திரங்களை உபயோகிப்பதனால் பணத்தை மிச்சப்படுத்திக்கொள்ளலாம்.

**A. N. A. C. Rawther & Co.**
12, SKINNERS ROAD,
COLOMBO.

# சிவகாமி சரிதம்

வெ. கனகசுந்தரி M. A.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"குடிலனுடைய சூழ்ச்சிகள் என்ற பாலைவனத்திற்கிடையே சிற்பல பசும்புல் தரைகள்போல் ஜீவ நிலங்கள் போல் - தோன்றுகின்றன சுந்தரருடைய அன்புப் பணியும் அருட்செயல்களும் சுந்தரர் என்ற ஜீவபூமி இல்லாவிட்டால் வாசகர்களின் உணர்ச்சிகள் ஏதோ ஓர் இருண்ட பயங்கரமான வனாந்தரத்தில் திசை தெரியாமல் தவிப்பது போல் கஷ்டப்படும் என்பதில் சந்தேகமில்லை'' என்று பி. ஸ்ரீ. ஆச்சார்யா கூறுகின்றார்.

எனவே இருளும், இணைந்திருப்பதைக் குறிப்பாக சிவகாமி சரிதத்தால் உணர்ந்து அந்த நெறியில் நாடக விரிவைக் காட்டலும் ஒரு கிளையாக அமைகின்றது.

இவையெல்லாவற்றையும் விட, மனோன்மணீய நூலுக்கு ஆசிரியர் கூறும் உருவகக் கருத்தும், சிவகாமி சரிதப் பொருத்தமும் இணையக் காணலாம்

ஜீவகன் - சார்போதமான ஜீவாத்மா.

குடிலன் - ஜீவாத்மாவை வசப்படுத்தி ஆட்டுவிக்கும் மாயா சக்தி

சுந்தரமுனிவர் - கருணாநிதியாகிய ஞானாசாரியார்.

இது, நூலில் காணப்படுவனவற்றிற்கு ஆசிரியர் கூறல்.

இந்தக் கருத்தின் பொருத்தம் சிவகாமி சரிதத்தில் ஜீவாத்மாவாக - சிவகாமி. ஆன்மாவை பெண்ணாகக் கருதும்முறை சிதம்பரன் - ஈசன். எனவே, மாயையாகி சிவகாமி மனத்தை மருட்டும் செல்வம்போல் ஜீவகனை மருட்டி வசப்படுத்தும் குடிலன்.

இக்கருத்தின் விரிவாக - சுந்தர முனிவர் பால் மன்னவனுக்குள்ள பக்தியைக் குறைக்கச் செய்யும் சூழ்ச்சி முறையிலும் - பலதேவனைச் சேர நாட்டிற்குத் தூதனுப்புமாறு செய்வதிலும் - நாராயணன் பால் மன்னனுக்குச் சினங்கொள்ளச் செய்வதிலும் - இறுதியில் தன் மகனுக்கே மனோன்மணியை மணமுடிக்கச் செய்யும் விரைவிலுமாக - இவ்வாறு குடிலனின் சூழ்ச்சி, மன்னனை ஆட்டுவிக்கும் சக்தி பலபடியாக நூல் முழுவதும் பரந்திருக்கக் காணலாம்.

வாணி - நடராசன் இருவரைப் புத்தி தத்துவமாகவும் உபாசனா மூர்த்தியாகவும் உருவகித்திருக்கிறார். இந்த நிலையை எளிதில் சிவகாமி சரிதத்தால் அறிய முடிகின்றது.

மனோன்மணி - புருஷோத்தமன் ஆகிய இருவரையும், ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத்துதிக்கும் முக்திக்குமுரிய சுத்த தத்துவமாகவும், அனுக்கிரக சக்தியாகவும் முறையே உருவகப் படுத்துகின்றார்.

இதையும் - சிவகாமி சிதம்பரன் என்ற பசு, பதி என்னும் தத்துவ

நிலையோடு பொருத்திக் காட்டலாம். மனோன்மணி பரிபக்குவ முற்ற ஜீவாத்மா - என்ற நிலையில் அவளின் உள்ள வளர்ச்சி நிலைக்கான மேற்கோள்கள் நூலில் விரவிக்கிடக்கக் காண்கின்றோம்.

அங்கம் III களம் III ல்

**'பூதப்பொருட்கே புலன் துணை அன்றிப்**
**போதப் பொருட்குப்போதும் போதம்**
**இரவியை நோக்கற் கேன்விளக்குதவி**
**கருவிநுண் மையைப் போற் காட்சியும் விளங்கும்**
**பட்டே உணரும முட்டாளர்கள் போல்**
**தொட்டேஉணரும் துவக்கிந்திரியம்.**

என்று கூறி, அன்பின் நிலையை விரித்துரைத்து,

**'போதங்கரைந்து மேற் பொங்கிடும் அன்பை**
**பூதயாக்கையோ தடுத்திடும்?'**

என்று முடித்துக்காட்டும் துணிவிலும்,

**'தந்தை தாய் ஆதியா வந்த தன் குடும்ப**
**பந்த பாரத்தினைப் பேணித் தனது**
**சொந்தமாம் இச்சைகள் துறந்து, மற்றவர்க்கு**
**எந்த நாளும் சுகம் இயைந்திடக் கடமையில்**
**முந்துகின்றவரே முதல்தவமுனிவர்'**

எனத் தவத்தின் தன்மையைக் கூறும் ஆற்றலிலும்உள்ள வளர்ச்சியைப்—பரிபக்குவ நிலையைக் காணலாம்.

மற்றவற்றை ஆசிரியர் உருவகமாக, ஜீவகனுக்குத் தலைநகராகக் கூறிய முத்திபுரம் என்னும் மதுரையை ஜீவாத்மா வுதித்தொடுங்கும் மூலத்தனமாகவும், அவனும் குடிலனும் சேர்ந்து கட்டிய நெல்வேலிக் கோட்டையை மாயா காரியமான அன்னமயாதி பஞ்ச கோசத்தாலமைந்த சரீரமாகவும், அதிலிருந்து மனோன்மணி கண்ட கனவைச் சுத்தாந்தக் கரண ஜநிதமான பரோக்ஷ ஞானமாகவும், சரதேசத்தில் புருடோத்தமன் கண்ட கனவைப் பரமபசுபதியான ஈசுவரனது அருளின் நிறைவாகவும், மனோன்மணியும் புருடோத்தமனும் சந்திக்கக் காரணமாக முடிந்த முனிவர் கட்டிய சுருங்கையைப் பிரத்தியக்ஷானுபூதிக்கேதுவான பாச விமோசன பந்தாவாகவும், பிறவும் இம்முறையேபாவித்து உய்த்துணர்ந்துகொள்ள வேண்டியது' என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறப்படும் உருவகக் குறிப்பினை, 'ரூபகமாலங்காரமாகக் கதையினைக் கருதில், தத்துவ சோதனை செய்யும் முமுக்ஷுகளுக்கு அனுகூலமாகப் பலிக்கவும் கூடும்' என்றும் அவரே கூறிக் காட்டுகின்றார்.

'இல்லறம், துறவறம், பக்தி, ஞானம் முதலிய மோட்ச சாதனங்கள் வெளிப்படையாகவே நாடகத்தில் அமைந்திருக்கின்றன' என்று கூறுகின்றார் ஆசிரியர்.

—இந்த நிலை சிவகாமி சரிதத்தில் ஏதேனும் காட்டப்படுகின்றதா வெனின், இல்லறம், துறவரம், பக்தி முதலிய எந்த நெறியில் நின்றாலும் இறுதியில் இறைவனோடு அணையும் நிலையினை ஒருவாறு காணமுடிகின்றது எனலாம்.

**''சாரும் வரை குறியாது தன் நிழலை யளக்குந்**
**தன்மையென நான் நடக்கத் தான் வளரும் அடவி**
**ஆரிருளில் இனி நடசக ஆவதிலை உலகம்**
**ஆறும் வகை வீடுளதேல் அடையும் நெறியருளாய்''**

—என்று காட்டப்படும் அடியான் அடையும் நெறி வினவியோருக்கு அந்நெறி காட்டப்படும் என்றுணரலாம். சிவகாமி, சிதம்பரன் என்று மேற்போக்காகப் பார்த்தாலும், ஆன்மா இறைவன்

என்ற நிலையில் பார்த்தாலும் இறுதிநிலை யொன்றுண்டென்றறியலாம். இல்லறம், துறவறம், பக்தி, ஞானம் என்ற பல படிகளின் வாயிலாக எந்தப் படியில் நின்றொழுகினும் இறுதியெல்லையில் தனியொரு நிலையை அடைதல்தான் காணப்படுகின்றது.

சிவகாமி சரிதத்தில் தலைதூக்கி நிற்கும் இரண்டு மோட்ச சாதனங்கள் பக்தி, ஞானம் எனலாம். பக்தி-சிவகாமி வழியாகவும், ஞானம்-சிதம்பரன் வாயிலாகவும் நாம் உய்த்துணரலாம். இவற்றைக்கொண்டு 'மனோன்மணியத்'தை நோக்க வாணியும், நடராசனும் நினைவில் ஒருவாறு விரிவு பெறுகின்றனர். ஆசிரியரும் வாணியைப் புத்தித் தத்துவமென்றும், நடராசனை ஞான உபாசனாமூர்த்திஎன்றுந்தான்உருவகப்படுத்திக் காட்டுகின்றார்.

முத்தி மார்க்கத்தில் ஒன்றாகிய துறவறம் பற்றி,

'ஏகாந்தப் பெருங்ககனம்; இதில்
உலகர் அணையார்
சென்றுறைய மடமுமில்லை;
திகழ்வெளியென்வீடு
சிந்தையற நொந்தவர்க்குச்
சேரவில்லை பந்தம்'

என்பது போன்ற சில அடிகள் விளக்கும். இதைச் சுந்தர முனிவர், அவர் வாழ்க்கை தத்துவம் ஆகியவற்றோடு வைத்தெண்ணும் போது நெறியெண்ணித் தவ நெறியில் ஒழுகுகின்றவராக அவர் அமைகிறார் எனலாம்.

'அறங்கிடந்த சிந்தையராய்
ஆசையெலாந்துறந்த
அதிவீரரொழிய எவராயினும்
இங்கடையார்'
உறங்க அவர் பணிப்பாயும்
பூவணையும் உன்னார்
உண்ணவெனில் பாலமிழ்தும்
ஒன்றாக மதியார்'

எனவே சுந்தர முனிவரின் பாத்திர விரிவை இது கொண்டும்,

'தந்நாவி லொரு விரலைத்
தாண்டவறியாமல்
சாகரமும் மலைபலவுந் தாண்டி
யலைகின்றார்
என்னேயிம் மனிதர்மதி!''

என்று காணப்படும் சில கருத்துக்களுக்கும் விளக்கம்போல் அமைவதுகொண்டும் கண்டின்புறலாம்

மோட்ச மார்க்கங்களில் ஒன்றாகிய இல்லறம் சிவகாமி சரிதத்தில் வெளிச்சம் பெறுகின்றதா என்பது சிக்கல். ஓரிரு கருத்துக்கள் அரும்பாக இருக்கின்றன. மலரும்படி விரித்துநோக்க அதனையும் தெளியலாம்.

'ஐயோ இவ்வையகத்தில்
அமைத்த சுகமனைத்தும்
அழலால் இங்கெழுந்தடங்கு
நிழலாக நினையாய்
கையாரும் பொருள் என்னக்
கருதி மணல் வகையைக்
காப்பதெல்லாம் இலவுகிளி
காத்தலினும் வறிதே'

இந்த அடிகள் ஓரளவு மனோன்மணியின் ஒரு கால மன நிலையையுணர்த்துமாறு அமையக் காணலாம்.

மனோன்மணி முதல் நிலையில் மணவாழ்வு, காதல் இவற்றில் பற்றற்று இருக்கின்றாள். கனா நிகழ்ச்சிக்குப் பின் மனமாற்றம்-பின்னர் தந்தைக்கு ஏற்பட்ட சிக்கலுக்கு ஈடு கொடுக்க பல தேவனை மணக்க சம்மதிப்பது-ஆகிய தியாகவுணர்வுகள் உள்ளத்தில் உருப்பெறுமாறுசோதனை பலவற்றிற்கு இடையிடையே ஆளாகின்றாள். எனவே, காதலில் முற்றும் மனமிழந்து தவிக்கின்ற பெண்ணாக அவளைப் பார்க்கின்றோமில்லை. எல்லா நிலையிலும், அழலின் நிழல் என்றவாறு வாழ்வைக் கருதும் நிலையும் மனோன்மணிக்கு ஏற்படும் நிலையைப் படிப்படியாகப் பார்க்கலாம்.

எனவே, மனோன்மணியின் மூலம் - முத்திநெறிக்கு இல்லறம் துணை செய்யும் என்பதையறிய இடமுண்டு, இறுதியில் அவளுக்கு வாழ்வு அமைவதிலும் தத்துவ நிலையில் பார்க்கும் போதும்- மனோன்மணி ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத் துதிக்கும் முத்திக்குரிய உத்தம பாகமான சுத்தத் தத்துவமாக என்றும், புருஷோத்தமனை அனுக்கிரக சக்தியாகவும் ஆசிரியர் பேசும் நிலையைக் காணலாம்.

ஆகவே, இவற்றையெல்லாம் காணும்போது, சிவகாமி சரிதத்தில் ஆசிரியர் பயின்ற தத்துவ சாயல் காட்டப்படுகின்றது என்பது சிறப்பாக இருக்கவும்-அது ஒரு பல் வண்ணப் பட்டடையாக நின்று, பார்ப்பவர் கோணத்திற்கேற்ப ஒவ்வொரு வண்ணமும் அல்லது ஒவ்வொரு வண்ணத்தின் ஒவ்வொரு சாயலும் ஒவ்வொரு சமயம் உணர்ந்து முழு நூலுடன் வைத்தெண்ணத்தக்க முறையில் அமைந்திருக்கிறது என்று சுருங்கக் கூறலாம்.

இனி, அங்கத்தின் முடிவுகளில் ஆசிரியரமைக்கும் கலித்துறைப் பாட்டின் பொருளுக்கும், சிவகாமி சரித செய்திகள் சிலவற்றிற்கும் தொடர்பு காண முயலலாம். அந்தக் கலித்துறைப் பாட்டுக்களில் - ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு கருத்துக்களை ஆசிரியர் கூறுகிறார்.

முதல் அங்கத்தின் இறுதியில்,

'சீரும் வதுவையுஞ் சேர்முறை
 செப்பியுஞ் சீவகன்றான்
போரும் நிதனமும் புந்திசெய்
 மந்திரம் போற்றினனே
சாருந் தனுகர ணங்களைத்
 தானெனுந் தன்மை வந்தால்
யாரும் அருள்வழி நிற்கிலர்
 மாயை யடைவிதுவே.'

என்ற கலித்துறைப் பாடல் காணப்படுகின்றது. மாயை யடைவிக்கும் தன்மையை விளக்கி நிற்கின்றது இது.

இரண்டாம் அங்கத்தின் இறுதியில்,

'அடைய மனோன்மணி அம்மை
 யுஞ் சேரனும் ஆசை
 கொள்ள
இடையில் நிகழ்ந்த கனத்திற
 வைபவம் என்னையென்க!
உடலு ளுவண்டென வேயுழல்
 கின்ற வுயிர்களன்புந்
தடையில் கருணையுஞ் சந்தித்தல்
 எங்ஙனஞ் சாற்றுதுமே.'

என்று காட்டப்படுகின்றது. அன்பின் தன்மையை அது கருணையுடன் கலந்து நிற்கும் ஆற்றலினை இதில் காணலாம்.

நான்காம் அங்கத்தின் கடைசிப் பகுதியில்.

'அரிதா நினைத்ததன் அங்கங்
 கள் யாவும் அழிந்த பின்னும்
புரியே பொருளெனப் போற்
 றிய ஜீவகன் புந்தியென்னே!
பிரியாத சார்பு பெயர்ந்து
 விராகம் பிறந்திடினும்
தெரியாது தன்னிலை ஆணவம்
 செய்யும் திறஞ்சிறிதே.'

என்று காணப்படுவதில் ஆணவத்தின் அலைக்கழிப்பினைக் கண்டுணரலாம்.

இறுதி அங்கத்தின் இறுதியில்,

'சிறிதா யினும்பற் றிலாதுகை
 யற்ற திருமகடன்
குறியாந் தலைவன் குடிலன்பின்
 எய்திய கொள்கை கண்டோர்
அறிவாம் எனுநம் அகங்காரம்
 ஆறும் அவத்தையினிற்
செறிவா யிருக்குந் திருக்கு
 வெளிப்படும் சீரிதுவே.'

என்று கூறி முடிக்கின்றார் ஆசிரியர். அகங்காரத்தின் போக்கு எப்படியெல்லாம் ஒருவனை ஆட்டி வைக்கிறது என்று குடிலனின் வாழ்வின் கண் ஆசிரியர் காட்டும் போக்கில் காணலாம்.

எனவே, இப்பாடல்களான் உணர்த்தப்படும் மாயை, அன்பு, ஆணவம், அகங்காரம் என்பன வற்றைச் சிவகாமி சரிதத்தின் போக்கில் - சிவகாமி, சிதம்பரன் வாழ்வுப் பாதையில் குறுக்கிட்டு ஆட்டுவிப்பதனையும், இறுதியில் உண்மை அன்பின் விஞ்சிய சக்தி ஒன்று சேர்ப்பதனையும் காண லாம். கட்டுரையின் போக்கிலே ஆங்காங்கே கண்ட விளக்கங் களும் இதையுணர வகை செய்யு மெனவே ஈண்டு மீண்டும் விரிக்க வேண்டுவதில்லை.

இந்த வகையில் ஐந்தாறு நிலை களான் மனோன்மணீய நூலுக்கும் சிவகாமி சரிதத்திற்கும் உள்ள தொடர்பினைக் காணலாம் இம் முறையில் காணுவது அவரவர் நோக்கும் போக்கினை யொட்டி யதேயல்லாமல் எல்லாக் கருத் துக்களும் எல்லோர்க்கும் உடன் பாடு என்று எதிர்பார்ப்பதும் இயலாது. (முற்றும்)

# சிரித்தது மல்லிகை!

முன்றிலில் பந்தல்! சென்றன பல நாள்,
அன்றொரு காலை, செங்கதிர் வரவும்
குண்டுமல்லிகைக் கொத்தொன்றென்னைக்
குறும்பாய்ப் பார்த்துப் பார்த்துச் சிரித்தது!
''நன்றுன்வேலை நன்றே'' என்றே
நின்றேன், வெட்கம் நெஞ்சை அடைத்தது!
''மாலைப்போது, மயக்கந் தோன்றிய
காலை என்னைச் சூடினீர் அல்லவா?
நாடிக் கூந்தல் சூடும் என்னைத்
தேடி எங்கே சூடினீர்''? என்றது.
''கூந்தலிற் சூடச் சென்றேன், அந்த
மாந்தளிர் மேனி மறுத்தது வாயால்!
காந்தள் விரலின் கரங்கள் மீண்டும்
ஏந்தி ஏந்தித் தவித்தன, அதனால்
எடுத்துத் தங்கக் குடத்தின் மீது
தொடுத்துத்தூரம் சென்றேன்'' என்றேன்!
சிரித்தது மல்லிகை! சிரித்தேன் நானும்!
சிற்றிடையாளை எண்ணிச் சிரித்தேன்!

— க. திருச்செல்வம்

# கடவுளரும் மனிதரும்

கே. எஸ். சிவகுமாரன்

ஈழத்தில், தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். **செல்வி. பவானி ஆழ்வாப்பிள்ளை** அவர்கள், சமீப காலமாகச் சிறு கதைகள் சிலவற்றை பத்திரிகைகளில் எழுதிக்கொண்டு வருகிறார். அவர் எழுதிய பதினான்கு கதைகளின் தொகுப்பு அண்மையில் ''**கடவுளரும் மனிதரும்**'' என்ற பெயரில் வெளிவந்திருக்கிறது. இத்தொகுப்பில், இதே தலைப்புக் கொண்ட கதைகள் எதுவும் கிடையாது. ஆனால் கதாசிரியை, கடவுளரையும் மனிதரையும்பற்றிப் பூடகமாக எழுதியிருப்பதாகத் தொகுப்பு அட்டையிலுள்ள புறக்குறிப்பு கூறுகின்றது

செல்வி. பவானியின் கதைகளை இரண்டு கோணங்களில் இருந்து பார்க்கலாம். எடுத்த எடுப்பிலேயே வாசகர்களைக் கவரவேண்டும் என்ற எண்ணத்துடனே என்னவோ-பிற ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் கையாளத் தயங்கும் கருப் பொருட்களை—கட்டுப்பாடற்ற எண்ணக்கோவை நிரம்பிய ஆசாபாச உணர்வுகளைத் தீட்டும் கதைகளை, அடுக்கடுக்காகவே எழுதியிருக்கிறார். இக்கதைகளில் உள்ள அதீத கற்பனை நிகழ்ச்சிகள், வாசகர்கள் சிலரையும், ஆசிரியையையும்திருப்திப்படுத்தினாலும், சமுதாயத்திற்கு இவற்றினால் என்ன பயன் ஏற்படப் போகின்றது என்பதுதான் முக்கியம். சமூகக் கட்டுப்பாடுகளை மீறி எழும் பந்தபாச உணர்வுகளும், சலன எண்ணப் போக்குகளும் மனிதர்களிடத்தில் இருக்கின்றன என்பது உண்மையே ஆயினும் மனிதன் அவற்றை அடக்கி, ஒடுக்கிச் செம்மையாக வாழ எத்தனிப்பதிற்றான் மேன்மை பெறுகின்றான் என்பதை எவரும் அறிவர்.

இவருடைய கதையில் உள்ள கருப் பொருட்கள் (Plots) அதீத நாடகப்பண்பு(Melodramatic)வாய்ந்தவையாய்இருக்கின்றன. தமிழ்நாட்டில் பத்திரிகை ரகக் கதைகள் (Magazine Story Writers) எழுதுபவர்களும், தமிழ்த்திரைப் படங்களில் புகுத்தப்படும்செயற்கையான முதல், இடை, கடைப் பகுதிகளை எழுதும் கதாசிரியர்களும் அமைக்கும் மேலீடான உணர்ச்சி வண்ணம் (Sentimentalism), இவர் கதைகளிலும் காணக் கூடியதாய் இருக்கிறது.

இவருடைய கதைகளில் வரும் பாத்திரங்கள் இளங்காதலர்களாயும், புதிதாக மணமாகிய அல்லது மணமாகப் போகும் இளம் பிராயத்தினராயும் இருக்கின்றனர். வளரிளம்பருவ (Adoloscent) த்தினரின் முதிர்ச்சியடையாத, விகற்பமான, ஆசாபாசங்களின், பிரதிபலிப்பாகவே இவ்வாசிரியையின் கதைகள் இருக்கின்றன. இவருடைய கதைகளில் உள்ள உள்ளடக்கத்தை வரவேற்க முடியாதாயினும், இவருடைய கதைகளில் அமைந்த உருவத்தைக் குறை கூறுவதற்கில்லை. சிறுகதை

எழுதும் கைவண்ணமும், கவிதாவுணர்வும் இவரிடம் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

இன்னொரு கோணத்தில் நின்று பார்க்கையில் மானஸீகக் காதல் என்றும் புனிதக் காதல் என்றும் வெற்றுப் பேச்சுப் பேசாது, ஒரு வித துணிவுடன், மனிதர்கள் சுகத்திலும், வாழ்விலும் எழும் சலன எண்ணங்களையும், செயல்களையும் படம் பிடித்திருக்கிறார். இளம் தம்பதிகளிடையே அல்லது காதலர்களிடையே எழும் பந்தமும் பாசமும், மனிதாபிமானமும், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் பண்பும் இவருடைய கதைகளில் உள்ளடங்கியவை. எனவே துணிவுக்குப் பாராட்டுதலும், விளைவுக்குக் கண்டனமும் யாம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

இனி, இவரது கதைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்:-

'**காப்பு**'' என்ற கதை சிறப்பாக அமைந்திருக்கின்றது மணமான பெண்ணொருத்தி - குரூபி - தனித் தேரயிலில் பிரயாணஞ் செய்கையில் மணமாகாத வாலிபன் ஒருவனுடனும், மணமாகிய இன்னொரு அழகிய பெண்ணுடனும் பிரயாணஞ் செய்ய நேரிடுகின்றது. வாலிபன் அழகிய மாது மீது பொருந்தாக் காமங் கொள்கிறான். இச்செய்கையின் தாக்குதலினால் குரூபியின் பேதையுள்ளம் எரிச்சலாகக் கொந்தளிக்கின்றது. அவளது மனவோட்டம் தர்க்கரீதியாக அமைகின்றது. கதையில் உணர்த்தப்படுவது யாதெனில் மணமான பெண்ணுக்கு - அழகிக்கு-த் தாலி எவ்விதம் வேலி போல் நின்று காமுகனிடமிருந்து காப்பாற்றி நின்றதோ - குரூபிக்குத் தனது குரூபமே அவ்விதம் துணை செய்தது என்பதாகும்.

'**விடிவைநோக்கி**' என்ற மற்றையக் கதை ஒன்றும், யதார்த்த பூர்வமாய் அமைந்துள்ளது. கிராமத்திய மக்கள் ஒருசிலரின் மனப்பாங்கை அழகாக வெளிப்படுத்திக்காட்டுகிறார் ஆசிரியை. ஏனைய கதைகளில், '**மன்னிப்பாரா**', '**சரியா தப்பா**', '**அன்பின் விலை**' ஆகிய மூன்றும், அக்கதைகளில் அமைந்த மேலீடான உணர்ச்சி வண்ணத்தால், கதைகளில் கீழோடும் மனிதாப உணர்வு அருவருக்கத் தக்க முறையில் வடிவம் பெற்றுள்ளன. இந்த நாடகப் பண்பு முறை செப்பனிடப்பட்டுக் கலைநயமாக உணர்த்தப்பட்டிருந்தால் ஒருவேளை சிறப்புற்றிருக்கும். '**பிரார்த்தனை**', '**ஜீவநதி**' ஆகிய கதைகளில் முறையே செயற்கையான வேலிக்குள் அடங்கிய தமிழ்ப் பெண்ணின் கற்பும், பாசமும் கதைப் பொருளாக உள்ளன. ஆனால் நாடகப் பண்பு அதிகம் உண்டு. '**உன்னை உணர**' பூரணச் சிறுகதை வடிவம் பெறாமல், அங்கு ஒரு விவரண வருணனையும், இங்கு ஒரு செயற்கைச் சித்தரிப்பும், இடையில் ஒரு மன நெகிழ்வுப் படப்பிடிப்பும் கொண்ட ஒரு கதை. இக்கதையின் உள்ளடக்கம் வரவேற்கத் தக்கதுதான் என்றாலும் அசட்டு அபிமான உணர்ச்சியை ஊட்டுவது. '**வாழ்வது எதற்காக?**' என்பது சினிமாபாணி தியாகத்தை உணர்த்துவிக்கும் ஒரு கதை. '**புதிர்**' என்பதும் சினிமா பாணிக் கதை. '**நிறைவு**' ஒரு சாதாரண பத்திரிகைக் கதை. '**அழியாப் கழ்**' அவ்விதமே. '**சந்திப்பு**' '**மனிதன**' கதைகள் சுமாராக அமைந்திருக்கின்றன.

இத்தொகுப்பில் கதைகளுக்கு ஏற்றவாறு ஒரு சில கலைநுட்பப் படங்களும், குறியீடுகளாக (Symbolic) வரையப்பட்டுள்ளன. முடிவாக இன்றைய தமிழ் எழுத்தாளர்களுள் பிரகாசமாக ஒளிர்விடத்தக்க ஆற்றலும், எழுத்து வன்மையுமுள்ள செல்வி பவானி ஆழ்வாப்பிள்ளை, தமது ஆற்றலைச் சிறிது யதார்த்தபூர்வமான கண்ணோட்டத்துடன், சமூகப் பிரக்ஞை கொண்டு சிறு கதைகளைத் தொடர்ந்தும் படைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

# மலரும் வண்டும்

'முகிலன்'

வானில் கதிரெழும் நேரம்
வண்ண மலர்ச்செடி ஓரம்
தேனினை நாடிடும் வண்டு
தேடியே வந்தது அங்கு!

பட்டு மலரிதழ் மேலே
பறந்து அமர்ந்தது தானே
சொட்டும் தேனினை வண்டு
சுவைத்து மகிழ்ந்தது நன்கு!

பின்னர் அதுவும் எழுந்து
பிறிதொரு மலரில் அமர்ந்து
பொன்னிற மாகிட மேனி
புரண்டு மகிழ்ந்தது தேனீ!

அழகிய மலர்களைப் போன்றே
அரிவையர் சிலருளர் தாமே.
பழகிடும் வண்டுகள் போன்றே
பண்பிலா ஆண்களும் உண்டே.

வண்டு பலமலரினை நாடும்
வண்ண மலரவற்றுடன் கூடும்
பண்பாடு அவற்றினிற் கேது?
பைந்தமிழ் வாழ்வுமே வேறு!

# பாக்கியசாலி

## 'பிரமன்'

பாஸ்கரன்

**'சார்!** நயம் என்றுல் என்ன சார்!' பிரமீளா என்னைக் கேட்டாள்.

'நயமா? நீ கேட்கும் நயம் கணிதம் சம்பந்தமானதா? அல்லது தமிழ்ப் பாட சம்பந்தமானதா?' என வினவினேன் நான்.

'தமிழ்ப் பாஷையிலே பாட்டைத் தந்து அதற்கு நயம் எழுதும்படி கூறுகிறுர்களே! அதைத் தான் கேட்டேன் சார்!' என்றுள் பிரமீளா.

'ஏன்? உங்கள் தமிழ் ஆசிரியர் மிஸ்டர் வஞ்சி இதைப்பற்றி உங்களுக்குப் படிப்பிக்கவில்லையா? படிப்பித்திருப்பாரே?' என்று திரும்பவும் பிரமீளாவை வினவினேன்

'அவர் படிப்பிக்கவில்லை சார்! ஆனுல் இப்படியான ஒரு கேள்வி பரீட்சைக்கு வரும் என்று கூறினுர். அதனுற்றுன் உங்களிடம்கேட்டேன்' என்றுள் பிரமீளா.

பிரமீளா நான் கல்வி கற்பிக்கும்கல்லூரியில் எஸ்.எஸ்.சி.வகுப்பில் பயில்பவள். நான் இக் கல்லூரியில் சென்ற தைமாதந்தான் நியமனம் பெற்றேன். நான்நான்காம் பாரத்தின் வகுப்பாசிரியனுகப் பொறுப்பேற்றேன்; எஸ். எஸ் சி. வகுப்பிற்குக் கணித பாடங்களைக் கற்பித்து வந்தேன். அவ்வகுப்பு மாணவ மாணவிகளுள் என் அன்பைக் கவர்ந்தவள் பிரமீளா.

பிரமீளா ஒரு வறிய குடும்பத்துப் பெண். அவளது தந்தை இந்த மலைநாட்டிலுள்ள ஆங்கிலேய 'டீ கம்பனி' ஒன்றில் குமாஸ்தாவாகப் பணியாற்றிச் சென்ற வகுப்புக் கலவரத்தின் போது தனது வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். தாயன்பை இன்னதென அறியாத பிரமீளாவைத் தாயாகவும் தந்தையாகவும் அன்புடனும் ஆதரவுடனும் பேணி வளர்த்தார் அவளது தந்தை.

பிரமீளாவை அழகி என்று சொல்லமுடியாது; ஆனுலும் அவள் முகத்திலிருந்த ஏதோ ஒரு வகையான சோபை—வசீகரம் எல்லோரையும் அவள்பால் ஈர்த்தது. 'அடக்கம் ஆயிரம் பொன் பெறும்' என்று கூறுகிறுர்களே அந்த அடக்கமும் அவள்பால் அமைந்திருந்தது.

'சரி! உதாரணமாக ஒரு பாடலை எடுத்து அதற்கு நயம் காண்போம்' ஒரு பாடலைச் சொல்லேன்; என்றேன் நான்.

அவளது பிறை வடிவான நெற்றியில் சுருக்கங்கள் உண்டாயின. சில விஞடிகள் ஏதோ சிந்தனையில் இருந்தாளே யொழிய பாடலைக் கூறினுளல்லள்.

'ஏன் பிரமீளா! ஒரு பாடலும் தெரியாதா? நான் வினவினேன்.

மயக்கும் மௌனம்

'சரி! நான் ஒரு பாடலின் அடிகள் சில கூறுகிறேன். கவனி!' என்று கூறிவிட்டு ஆரம்பித்தேன்—

'கண்ணுடி போன்ற உந்தன்
கன்னத்தினைக் காண்கையிலே
என்நாவில் தேனருவி ஓடுவது
போலிருக்கு
சம்சாரக் கடலினிலே
சந்தோஷப் படகினிலே
உன்னருகில் நானிருந்து உலவிடும்
நாள் என்நாளோ!'

'ஒரு காளை; ஒரு கன்னி. ஒருவருக்கு மற்றவர்மேல் தீராக் காதல்! ஆனுல் அதை நேரிடையாக வெளிப்படுத்தும் தெம்பு ஒருவரிடமும் இல்லை. ஒரு நாள்... எதிர்பாராத விதமாக வயற்கரையில் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றனர்.

அவன் தன்னை விரும்புகிருனு என்று அவளுக்கு ஏக்கம்; அவள் தன்னை விரும்புகிருளா என்று அவனுக்கு ஏக்கம். யார் தங்கள் ஏக்கத்தை மற்றையவருக்கு முதலில் தெரிவிப்பது?... பிரச்சினை... முடிவு...?

அவனது ஏக்கம் அவனது வாயிலிருந்து பாட்டாகவே வெளிவருகிறது...முதலிலேயே தன் ஏக்கத்தைத் தெரிவித்தானு?... இல்லை. அவளது பிறை நுதலை உற்று நோக்கினுன். அது கண்ணுடி போலத் தென்பட்டது. ஒரு வடுவோ, மறையோ யாதொன்றுமில்லாமல் பளிங்குபோலத்தென் பட்டது. உடனே பாடுகின்றுன்...

'கண்ணுடி போன்ற உந்தன் கன்னத்தினைக் காண்கையிலே...'

'அக் கன்னத்தை வேறொரு பொருளுக்கு உவமிக்க வேண்டும் அல்லது அது என்ன தூண்டலைத் தூண்டுகிறதென வர்ணிக்கவேண்டும். பாட்டில் அவன் இவற்றில் எதைச் செய்கிருன் பிரமீளா?' என வினவினேன்.

'கன்னத்தைப் பார்க்கும்போது அவனது நாவில் தேனருவி ஓடுவதுபோல இருக்கிறதாம்? பிரமீளா கூறினுள்.

'ஆம்! அக்கன்னங்களைப் பார்க்கும்போது ஒரு தேன் ஆறே தன்னுடைய வாயுள் பாய்வதுபோல அவ்வளவு இனிமையாக இருக்கிறதாம். அக்கன்னங்களைப் பார்த்துக்கொண்டே யுகயுகாந்தரத்திற்கு இருந்துவிடலாம் போல இருக்கிறதாம். எப்படி வர்ணனை? இனி மற்றைய அடியை எடுத்துக்கொள்வோம்- 'சம்சாரக் கடலினிலே சந்தோஷப் படகினிலே-' இதில் கடல் என்று எதைக் குறிப்பிடுகிருர்? சம்சாரத்தை. சம்சாரம்என்ருல்என்ன? குடும்பம். ஆகவே குடும்பத்தை எதற்குஉவமிக்கிருர்?..கடலுக்கு. ஏன்? கடலில் எவ்வண்ணம் அலைகள் காற்றின் உந்தலால் உண்டாகிக் கடலுக்கு அமைதியின்மையைக் கொடுக்கின்றதோ அப்படியே குடும்பத்திலும் சிறு சிறு சச்சரவுகளும் பூசல்களும் தோன்ற ஏதுவாயிருப்பதால் குடும்பம் எப்பொழுதும் நிம்மதியாயிருக்காது என்பதைப் புலப்படுத்தவே. அக்கடலில் நீங்கும் படகு எதாம்? சந்தோஷம் என்னும்படகுதான். அப்படகினிலே அவளுக்குப் பக்கத்திலே அவன் இருந்து உல்லாசப் பிரயாணம் செய்வது எப்போது? என வினவுவது மூலம் தனது ஏக்கத்தைத் தெ வித்திருக்கிருன். எப்படி இப்பாடல். இதற்கு இனியும் நயம் எழுதச் சொல்லித் தரவா வேண்டும்? அவளது கன்னத்தை எதற்கு உவமித்திருக்கிருன் என்பதும், அதைப் பார்க்கும்போது என்ன தூண்டலைத் தூண்டுகிறது என்பதும், குடும்பத்தை எதற்கு உவமித்திருக்கிருன்? ஏன் உவமித்திருக்கிருன்? என்பதும், தாங்கள் மணம்செய்வதை எவ்வாறு புலப்படுத்தியிருக்கிருன் என்பதுந்தான் இப்பாடலிலுள்ள நயம்... தெரிந்ததா பிரமீளா? என வினவிய நான் அவளது மதிவதனத்தை உற்றுநோக்கினேன். வதனம் சிவந்திருந்தது; கண்களில் மருட்

சியும் ஒருவித ஏக்கமும் கலந்து காணப்பட்டது.

'ஆம் சார்! நன்கு விளங்கியது! இது யாருடைய பாடல் சார்?' என்றாள் அவள்.

'யாருடைய பாடலாயிருந்தாலென்ன? ஏன் என்னுடையதென்றே வைத்துக்கொள்ளேன்?' என்றேன்.

'அப்போதே நினைத்தேன் சார்' அழகான பாடல். நான் தந்த சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும். தாங்யூ சார்!' என்று கூறிவிட்டுச் சிட்டாய்ப் பறந்தாள் பிரமீளா.

கலாசாலை ஆரம்பமாவதற்கு மணியும் ஒலித்தது.

0 0 0

பிரமீளா

பாஸ்கரன் சார் என்னுடன் அன்னியோன்னியமாகப் பழகுவது நான் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாகத்தான் இருக்க வேண்டும் என்னவோ எல்லோரும் ஆசிரியர்கள் என்று வந்து விடுகிறார்களே யொளிய தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்வதில்லை. எப்பொழுது இருபத்து ஆறாம் திகதி வரும் சம்பளம் எடுக்க என்று எதிர்பார்த்துக் கொண்டு மாணவ மாணவிகளாகிய எங்களைப் படிப்பில் கவர்ச்சி கொள்ளாமல் செய்வதற்காகவே சில ஆசிரியர்கள் வருகிறார்கள். பாடங்கள் ஒன்றும் ஆயத்தம் செய்து வராது வகுப்பில் வந்து அதையும் இதையும் சொல்லிச் சமாளித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆனால் என்று பாஸ்கரன் சார் எங்கள் கலாசாலைக்கு வந்தாரோ அன்று தொடக்கம் கலாசாலையே ஒருவித தனிச் சோபையுடன் திகழ்கிறது. அவரது புன்சிரிப்புத் தவழும் முகமும், அன்பான பேச்சும், அமைதியான தன்மையும் மாணக்கர்களாகிய எங்கள் எல்லோரையும் மிகவும் கவர்ந்துவிட்டது. எந்தப் பாடமானாலும் எவ்வித சந்தேகமானாலும் அவரை அணுகி வினவலாம். படிப்படியாகப் போதியவிளக்கம் தந்து சந்தேகத்தை நீக்குவார். அவர் படிப்பித்த பாடங்களை மீண்டும் ஒருமுறை படிக்கத் தேவையில்லை. அவை பசுமரத் தாணிபோல நமது நெஞ்சாழத்தில் பதிந்துவிடும். அவர் கல்லூரிக்கு வந்து ஆறுமாதமாவதற்குள்ளே அவரது அன்பைக் கவர்ந்து விட்டேன்; அவ்வளவில்நான் அதிஷ்டக் காரிதான். என் சக மாணவிகள் அவர்மேல் கொண்டிருக்கும் ஒருதலைக் கா...அப்பப்பா ...வாழ்க்கைப்படுவதென்றால் இப்படியானவருக்குத்தான் வாழ்க்கைப்படவேண்டும்.' என்பாள் கௌரி. 'பாஸ்கர் சார்தான் எனது இலட்சிய கா ..' என்பாள் சாந்தி. இப்படி ஒவ்வொருவரும் அவர்மேல் கொண்டிருக்கும் அன்பு! அன்பா அது? இல்லையில்லை ஒருதலைக் கா...

அன்று தேர்வுப் பரீட்சைக் கடைசித் தினம். பாடலுக்கு நயம் எழுதுவதுபற்றி என்னென்னவோ வெல்லாம் வஞ்சிநாதன் சார் படிப்பித்தார். ஒன்றுமே ஒருவருக்கும் விளங்கவில்லை. தேர்வுப் பரீட்சைக்கு தமிழ்ப் பாஷையில் அப்படியான தொரு வினா வரும் என்று சொன்னார். பாஸ்கரன் சாரைக் கேட்டுப் பார்ப்போம் என்று நினைத்து அவரிடம் சென்று வினவினேன். அவர் உதாரணத்துக்குஎடுத்தபாடல் அவரே இரு அடிகளை இயற்றி விட்டாரே—அதில் பொதிந்திருந்த கருத்துக்கள் ஏராளமல்லவா? அவர் விளங்கப்படுத்தும்போது என்னைப் பார்த்த அன்பு கலந்த பார்வை அப்பப்பா அவரும் நான் அவரை விரும்புவதுபோல என்னைவிரும்புகிறாரா? அப்படித்தான் இருக்க வேண்டும். அல்லது அப்படியான பாடலை ஏன் கூறுகிறார்! நான் பாக்கியசாலிதான்.

## பாஸ்கரன்

'அவனுக்கென்ன பெண் சகோதரங்களைக் கரைசேர்க்க வேண்டுமென்ற கவலையா? ஒரேயொரு பிள்ளை. படித்துவிட்டான்; பட்டம் பெற்றுவிட்டான்; படிப்பிக்கிறான். அவன் விரும்பிய ஒருத்தியைக் கூட்டிவருவான்' என்று அயலிலுள்ளவர்களுடன் அம்மா தம்பட்டமடித்துக் கதைக்கும் போது நான் வீணே அகமகிழ்ந்தேனே! இந்தத் துணிவிற்றானே பிரமீளாவை நான் காதலிப்பதாக அம்மாவுக்கு எழுதினேன். அவளை விவாகம் செய்வதற்குச் சம்மதமும்கோரியல்லவா கடிதம் எழுதினேன். அம்மாவிடமிருந்து சந்தோஷகரமானமறுமொழியை எதிர்பார்த்திருந்த எனக்கா அப்பாவிடமிருந்து இந்த அதிர்ச்சி தரும் கடிதம் வரவேண்டும். தான் வாக்குக் கொடுத்துவிட்டாராம். யாரைக் கேட்டு வாக்கு கொடுத்தவர்? யாருக்கு வாக்குக் கொடுத்தவர் ..? யாரோ தனது ஒன்றுவிட்ட தங்கையாம்! அவளுக்கு ஒரேயொரு மகளாம். காசநோயால் பீடிக்கப்பட்ட அவரது தங்கை இறக்கும் தறுவாயில் அவளது மகளுக்கும் எனக்கும் முடிச்சுப்போட்டு குடும்ப உறவை வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தெரிவித்தாளாம். அதற்கு அப்பா இணங்கினாராம். இது ஒரு சிறுகதை போலல்லவா இருக்கிறது? அதற்காக நான் என் பிரமீளாவை மறக்க வேண்டுமாம். கண்ணுக்குக் கண்ணாய் நேசித்த பிரமீளாவை—என் காதற் பொற் சித்திரத்தை மறக்கவும் முடியுமா? அப்பாவின் இன்பமே என் இன்பம் எனமதித்த அன்றுதொட்டு இன்றுவரை வாழ்கின்றேன். ஆனால் என் காதல் விஷயத்தில் தலைபோட இவர் யார்? மணமுடிப்பது நானா? அல்லது அவரா? நான் விரும்பியவளை மணக்க முடியாத எனக்கு சொத்து ஏன்? சுதந்திரம் ஏன்? சுகபோகம் ஏன்? இவ்விடயத்திற்றான் அப்பாவுடன் முதலாகவும் கடைசியாகவும் வாதாடுவது. இந்தத் தவணைமுடிவில் ஒரு சிறந்த முடிவு காண்கிறேன்.

## பிரமீளா

எல்லாப் பாடங்களிலும் திருப்திகரமாக எழுதியிருந்தேன். இன்றுதான் மனைசாத்திரப் பாடம்; கடைசிப் பாடம். இப்பாடம் எடுப்பதற்கு எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் அப்பாவின் வற்புறுத்தலுக்காக எடுக்கிறேன். பெண்ணென்றால் கட்டாயம் மனைசாஸ்திரம் எடுக்க வேண்டுமாம்; இது அப்பாவின் கட்சி. ஆம்; எஸ். எஸ். சி.யுடன் ஒருவருக்கு வாழ்க்கைப்படவேண்டிய எம்போன்றோருக்கு மனைசாஸ்திரம் வேண்டியபாடந்தான் நாங்கள் என்ன நாட்டுக்கு உழைக்கப் பிறந்தவர்களா? இல்லை—ஏதேனும் உத்தியோகந்தான் பார்க்கப் பிறந்தவர்களா?

காலையில் கடிதம் வந்த நேரந்தொட்டு அப்பா மிகுந்த சந்தோஷத்தோடு காணப்பட்டார். பிற்பகலில்தான் பரீட்சையானதால் சின்னம்மாவுக்கு உதவியாகசமையல் வேலையில் ஈடுபட்டிருந்தேன். 'பிரமீளா' என்று அப்பா அழைக்கும் சத்தம் கேட்டு மாடிக்கு விரைந்தேன்—

'கூப்பிட்டீர்களா அப்பா'—

'ஆமாம் அம்மா. இப்படிவந்து உட்கார்—இன்றோடு உனக்குப் பரீட்சையும் முடிகிறது. ஏதோ என்னால் இயன்றது இவ்வளவு தான். இனிமேலே படிப்பிக்க முடியுமா? இனி உன்னை ஒருவன் கையில் கொடுத்துவிட்டால் என்னுடைய பாரம் தீர்ந்துவிடும்—' என்றார் அப்பா.

'இப்போது அதற்கென்னப்பா அவசரம். எனக்கென்ன வயது வந்துவிட்டதா—?' என்றேன்.

'இல்லை பிரமீளா உனக்குத் தெரியாது நாங்கள் இம் மலை நாட்டில் வந்து குடியேறிப் பன்னிரண்டு வருடமானாலும் நாங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களல்லவா? உன்னுடைய அம்மாவுக்கு ஒரு அண்ணா! அவருக்கு ஒரு மகன். அவன் பட்டம் பெற்றுப் படிப்பித்து வருகின்றானாம்—' என்று கூறிக்கொண்டே போனார் அப்பா.

எனக்கு விஷயம் ஓடி வெளித்துவிட்டது. உலகமே இருண்டது; சுழன்றது. அப்பாவின் பேச்சு வெகு தொலையில் கேட்பதுபோல இருந்தது. பெண்ணாய்ப் பிறந்துவிட்டால் பெருந் துன்பந்தானா? என் பாஸ்கரை எப்படி மறப்பேன். நானே அவராய் அவரே நானாய் காதலுறவாடி ஒருவர் உள்ளத்தை மற்றவரல்லவா கவர்ந்துகொண்டோம்.

'காதல் வானில் நாமே
உல்லாச மாகத் தானே
பறந்து செல்வோம் மேலே
உல்லாச புரி நோக்கி;

என்று பாஸ்கரும் நானும் சேர்ந்து கானமிசைத்த காட்சியெல்லாம் மனத்திரையில் ஓடியது; எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது.

என்ன பிரமீளா? என்ன செய்கிறது? ஒருமாதிரி இருக்கிறாயே— இதோ மகனின் படத்தையுமல்லவா மாமா அனுப்பி கலியாணத்துக்குச் சீக்கிரம் ஒழுங்கு செய்யும்படி எழுதியிருக்கிறார்'. என்றபடி புகைப்படமொன்றை என் கையில் கொடுத்தார் அப்பா—வேண்டா வெறுப்புடன் படத்தை உற்று நோக்கினேன். நோக்கியது தான் தாமதம்—'பாஸ்கர்' என்று என்னையுமறியாமல் கூவிவிட்டேன்.

ஆமாம்; படத்தில் என் பாஸ்கர்தான் புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் வீற்றிருந்தார்... நான் பாக்கியசாலிதான் ...


## நமது ஏஜென்சி

| பதுளையில் | மட்டக்களப்பில் |
|---|---|
| **P. கந்தசாமி** | **கலாநிதி புத்தகசாலை** |
| 180, லோவர் வீதி, பதுளை. | 23, பிரதான வீதி, மட்டக்களப்பு. |

# உருவகக்கதை குறுவட்டம் பஸீல்காரியப்பர்

அந்தப் பணக்கார வீட்டுச் சமையலறையின் அடுக்களைக்கிடையே இரு கரப்பான் பூச்சிகள் குடும்பம் நடாத்தின. ஆண் பூச்சிக்கு, பெட்டையோடு சதா கட்டிப் புரண்ட அலுப்பினுலோ என்னவோ வெளியுலகச் சஞ்சாரப் பிரீதி. வீட்டு வாசலில் நின்ற 'காருள்' நுழைந்து பின் இருக்கையின் அடியில் ஒளிந்து கொண்டது.

வீட்டுக்காரர்கள் எங்கோவெல்லாம் உல்லாசப்பிரயாணம் சென்ருர்கள். புதுப்புது இடங்களையும், புதுமையான மனித வாழ்க்கைகளையும் கண்டார்கள். அருவி, அடர்ந்த காடு, மலை, மலர்கள், பறவைகள், விலங்கினம் இத்தியாதி இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புற்ருர்கள். வித்தியாச வித்தியாசமான சுவாத்தியங்களை அனுபவித்தார்கள்.

கார் சென்ற இடமெல்லாம் கரப்பான் பூச்சியும் சென்றது. ஆனுல் காரைவிட்டுத்தான் அது இறங்கவில்லை. எங்கே தன்னை விட்டுச் சென்றுவிடுவார்களோ என்ற ஐயம் அதற்கு. 'கார்'ச் சக்கரங்களைப்போல நாட்களும் உருண்டன. எங்கு பிரயாணம் ஆரம்பமானதோ அங்கு வந்து நின்றது கார்.

கரப்பான் பூச்சிகள் அடுக்களையில் கூடின. பிரிந்து சேரும்போது கிழத்தம்பதிகளும் இளந்தம்பதிகளா? அத்தனை கிழுகிழுப்பும் இன்பப் பெருக்கும் அவைக்கு. அடைபட்டுக்கிடந்த பெட்டைக்கோ மகிழ்ச்சி மிகுதி. உல்லாசப் பிரயாணம் சென்ற, தன் 'மறுபாதி'யிடம் சுவையான பல செய்திகளையும், புதுப்புது அனுபவங்களையும் கேட்டு அறிய வேண்டுமே என்ற அவாப் பிரளயம் அதன் உள்ளத்தில்.

'இங்க பாருங்க! உங்களைத்தானே! பிரயாணத்தில் என்னென்ன புதினங்கள் கண்டீர்கள்?'

'......' ஆண்பூச்சி 'பேசா நிலையே பெரு நிலை' என்ற பாணியிலிருந்தது. ஏனே அதன் முகத்தில் சிறு வாட்டம்.

'என்ன மௌனியாகி விட்டீர்கள்? உஹும்..! வரவர என்னேடு பேசுவதென்றலே உங்களுக்கு அப்படித்தான்...' பெட்டை மீண்டும் சிணுங்கியது.

'சொல்ல என்ன இருக்கிறது. கார் பல இடங்களுக்கும் சென்றது. அதில் இருந்தவர்களெல்லாம் இறங்கியிறங்கி என்னவெல்லாமோ பார்த்தார்கள். நான் மட்டும் இறங்கவேயில்லை. என்னை அவர்கள் விட்டுவிட்டு வந்தால் உன்னை எப்படி காண்பேன்?'

'அப்போ! உங்கள் பிரயாணத்தில் நீங்கள் ஒன்றுமே பார்க்கவில்லையா?' உதட்டைப் பிதுக்கி ஏளனமாகக் கேட்டது பெண் பூச்சி.

'ஓடும்போதாவது ஏதாவது பார்ப்போமென்ருல் எங்கே என்னைக் கண்டு, கொன்று விடுவார்களோ என்ற பீதி எனக்கு. அதனுல் நான் மேலே வரவேயில்லை துணிந்து செயற்படத் தயங்கிய என்னுல், நான் சஞ்சரித்த அந்தச் சின்ன மூலையைத் தவிர வேறெதனையும் காண முடியவில்லை.' வேதனையை வெளிப்படுத்தி வாயடைத்து நின்றது ஊர்சுற்றியும் உலக அனுபவமில்லாத அந்தக் கரப்பான் பூச்சி.

# பொருளியல் தத்துவம்

— **வி. நடேசு** B. A. Hons.

இவ்வுலகில் இல்வாழ்வு இன்பமுடன் இயங்கவேண்டுமாயின் பொருள் இன்றியமையாதது. இதனை உணர்த்துங்கால் பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லாகியாங்கு என்று வலியுறுத்திக் கூறினான் வள்ளுவப் பெருந்தகை. வேத மறையை வகுத்த வள்ளுவன் பொருளின்றேல் அறமும் மோட்சமாகிய இன்பமும் கிடைத்தற்கரிய தென பொருளை நடுக்கண் வைத்துப் போற்றியுள்ளான். திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற ஆன்றோர் வாக்கும்இதற்கு உறுதுணையாயிருக்கின்றன. இத்தால் மண்ணுலக வாழ்க்கைக்குப் பொருள் எத்துணை அவசியம் என்பது புலனாகிறது. பொருளே வாழ்வின் ஜீவனாடியாக அமைந்திருந்தமையால் அப்பொருளை ஈட்டி அதனைத் தக்கபடி பயன்படச் செய்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். ஒருவன் தன் வாழ்க்கையில் சிறப்புடன் வாழவேண்டின் பொருளியல் தத்துவங்களை ஓரளவேனும் தெரிந்திருத்தல் அவசியமாகிறது.

பொருளியல் தத்துவங்களில் புகுந்து நாம் அவற்றினை ஆராய்ந்து பார்க்கும்போது ஆங்காங்கே சர்ச்சைக்குரிய சில வியாக்கியானங்கள் பரவிக் கிடப்பதை காணமுடிகிறது. காரணம் இதர துறைகளைப் போல் அல்லாமல் பொருளாதாரத்துறையில் மனிதனே அதன் தத்துவத்தின் உயிர்நாடியாக அமைந்துள்ளான். எந்தத் தத்துவத்துக்கும் வரைவு இலக்கணம் வகுக்கலாம். ஆனால் மனிதனின் மனநிலையும் அவன் போக்குகளும் என்றென்றும் ஒரேமாதிரியாக ஒரே இலக்கணக் கோப்புக்குள் கட்டுப்பட்டதாக இருக்கவில்லை. மனித வரலாற்றின் ஏடுகளைப் புரட்டினால் இந்த உண்மை நன்கு விளங்கும். ஜடப் பொருட்களுக்கு விதி முறைகள் அமைத்து குறிப்பிட்ட ஓர் தத்துவ முடிவைக் கொள்வது சாத்தியம். ஆனால் மனிதனின் போக்குக்கு வரையறுக்கப்பட்ட முடிவு காண்பது கடினம். எனவே இந்தஅடிப்படை வேற்றுமையை முதற்கண் வைத்தே பொருளியல் தத்துவங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பொருளியல் ஆராய்ச்சியாளர்களின் சில தத்துவ வியாக்கியான முரண்பாடுகளின் மத்தியில் நாம் சில அடிப்படை உரிமைகளைத் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

பொருளாதாரம் முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது உற்பத்தி, வினியோகம், பாவனை ஆகியவையே இப்பிரிவுகளாகும். இவற்றுள் தலையாய விளங்குவது உற்பத்தியெனலாம் காரணம் உற்பத்தியின் அடிப்படையில் தான் இதர பிரிவுகள் தங்கியிருக்கின்றன. ஒரு நாட்டின் உற்பத்தியைக் கொண்டே அதன் வருமானத்தை நாம் கணிக்க முடியும். இதனையே மனிதனின் நடைமுறை வாழ்க்கையிலும் நாம் அனுசரிக்கலாம். உற்பத்திச் சாதனைகள்

இருவகைப்படும்; ஒன்று இயற்கை மற்றையது செயற்கை. இவ்விரு சக்திகளையும் கொண்டே நாம் ஆகக் கூடிய பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜீவராசியையும் படைக்கும்போது அது வாழ்வதற்கு வேண்டிய வழியையும் ஆண்டவன் படைத்திருக்கிறான். இது படைப்பின் ஓர் சிறப்பெனலாம். அத்தோடு ஓர் உயிருக்கு வாயை மட்டும் கடவுள் படைக்கவில்லை. அந்த வாயோடு இரு கைகளையும் படைத்திருக்கிறான். எனவே வாய்க்கு வேண்டிய போஷணத்தை இந்த இரு கையின் சக்தியால் பெற்றுக்கொள்ள முடியும். இதனை உணராத சிலர் ஜனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதில் முனைந்திருக்கின்றனரென்றால் அது அறிவுடைமையென்று நாம் கூறமுடியாது.

மனித சக்தி (தொழில்), மூலதனம், பூமி, நிர்வாகம், ஆகிய இந்த நான்கினுமே உற்பத்தியின் முக்கிய சாதனைகளாகும். பூமியென்று குறிப்பிடும்போது நிலமும், நிலத்தோடு சார்ந்த நீர். பவனம் ஆகியவையும் சேர்கின்றன. இத்தோடு வனப் பொருட்கள், உலோகப் பொருட்கள், பல்வகை இயற்கைச்சக்திகள் அனைத்தும் இதற்கு உட்பட்டவையே.

மனிதனின் சக்தியும், புத்தியும் தொழில் வகையைச் சாரும். தொழிலில் நான்கு வகைப்படும். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு வித பயிற்சி அவசியம். இப்பயிற்சி மூலமே தொழில் வகைவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மூலதனம் பணத்தை மட்டுமே குறிப்பிடுவதல்ல. உற்பத்திக் கருவிகள் அனைத்தையும் இது தழுவி நிற்கும். பூமி, தொழில், மூலதனம் ஆகிய மூன்று சக்திகளையும் ஒன்றுபடுத்தி அவைகளைத் தகுந்தபடி நிர்வகிப்பதையே நிர்வாகம் எனக் கூறுகிறோம். உற்பத்திச் சாதனைகளைத் திறம்படப் பயன்பெற வகுப்பதே நிர்வாகத்தின் சிறப்பியல்புகளாம். இத்தோடு வர்த்தக, தொழில் நுட்பத் துறைகளில் மேம்பட்ட பரிபாலனம் உற்பத்திப் பெருக்கத்துக்கு பெருமுதவி அளிப்பதாகும்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களினால் ஓர் சிலரோ அல்லது குறிப்பிட்ட ஒரு வகுப்பினரோ பயன் பெறுவது மனு நீதிக்குப் முரண்பாடானதெனலாம். எல்லோரும் இன்புற்றிருப்பதல்லால் வேறு ஒன்றும் யானறியேன் என்ற வேதாந்த வாக்குப்பிரகாரம் உழைப்பாலும் இயற்கையின் வலிமையாலும் பெறப்பட்ட பொருட்கள், செல்வங்கள் அனைவருக்கும் சொந்தமே இந்தக் கோட்பாடு தவிர்ந்ததின் காரணமாகவே இன்று சமூகத்திலே பற்பல ஏற்றத் தாழ்வுகள் ஏராளமாக மலிந்து கிடக்கக் காணக் கூடியதாயிருக்கிறது. இதன்விளைவாக இன்று பல்வேறு அரசியல் தத்துவங்கள் தோன்றி உலகினைப் பாகப் பிரிவினை செய்து பங்கத்தில் ஆழ்த்தி வருகிறது. இந்நிலை மாறவேண்டுமானால் பொருட்களின் வினியோகம் தேவைக்கேற்றவாறு அமைந்திருத்தல் வேண்டும். இதனையே பொருளாதாரத் தத்துவமும் எடுத்துரைக்கின்றது. இதுபோன்றே உற்பத்திச் சாதனைகளும் அளவுக்கு ஏற்றவாறு அதிக உற்பத்தியைக் கொடுக்கக்கூடிய வகையில் வினியோகம் செய்யப்படவேண்டும்.

அடுத்துப் பொருட்களின் பாவனை என்று கூறுமிடத்து மனிதனின் தேவைகளைப் பூர்த்தியெய்தும் நோக்கமாக அப்பொருட்கள் பயனுறச் செய்ய வேண்டும், மனிதனின் அபிலாசைகள் அளவு கடந்தன. எனவே போலும் ஆசைக்கோர் அளவுண்டோ எனக்கூறிப் போந்தார்கள். ஆசைகள் பலதரப்பட்டவை. மனித வரலாற்றைப் புரட்டினால்

இந்த உண்மை தெரிவுறும். பல்கிப் பெருகும், இந்த மனித ஆசைகளை எவ்வாறு பூர்த்தி செய்யலாம் என்பதற்குப் பொருளாதாரத் தத்துவம் வழிவகுக்கிறது. இந்த ஆசைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதே அதன் குறிக்கோள் அபிலாஷைகள் அளவுகடந்ததெனினும் அவற்றினைப் பூர்த்தி செய்யக் கூடிய தான வழிகளும், சாதனைகளும் மிகச் சில எனலாம். எனவே இக் குறுகிய சாதனைகள் மூலம் பல்வேறு ஆசைகளையும் நாம் பூர்த்தி செய்ய வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு ஒருமனிதனிடம் ஒரே பொருள் அதிகமாக இருக்குமோ அதன் மதிப்பும், பயனும் குறைந்துகொண்டே போகும் இதனுல் அதே பொருளினுல் இன்னொருவன் பெறக்கூடிய அதிக பயனை இவன் இழந்து விடுகிறான், ஒரு பொருளின் பாவனையின் போது அதனை எந்த வழியில் எவ்வாறு நாம் பயன் படுத்தினுல் அதனுல் அதிக பலாபலனை அடைய முடியும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக குடும்ப வாழ்க்கையில் கணவன் சம்பாதித்த பணத்தை பயனின்றிச் செலவு செய்யாது பயன் பெறக் கூடிய வழியில் செலவு செய்வதே ஒரு மனைவியின் கடமையும், ஆற்றலும் ஆகும். ஒரு பொருளை வாங்கும் போது அப் பொருளுக்குக் கொடுக்கப்படும் பணம் அப்பொருளினுல் பெறக் கூடிய பயனைப் பொறுத்தே யிருக்கவேண்டும். பொருளின் பயன் அதிகரிக்க அதன் மதிப்பும் அதிகரிக்குமென்பது பொருளியல் தத்துவம் கூறும் உண்மை. இந்த அடிப்படையில் நாம் எந்தப்பொருளையும் வாங்கும்போது அப் பொருளின் உபயோகம் எத்துணைப் பயனைக் கொடுக்க முடியும் என்பதை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசிய நடைமுறைத் தத்துவங்களைக் கொண்டதே பொருளியல், இதனை அனுசரிப்பின் இல்வாழ்வு சிறப்புறும் என்பதில் ஐயமுண்டோ!'


# பெண்

'சந்தேகம் நிறைந்த குளம்; வணக்கமின்மையின் அரண்மனை; சாகஸத்தின் தலைநகர்; தோஷங்களின் சமூகம்; எண்ணிலா ஏமாற்றங்களின் இருப்பிடம்; அவநம்பிக்கையின் கோயில்; சகல மாயைகளும் நிரம்பித் தளும்பும் கலயம்; உத்தமர்கள் பெறத் தகுதியற்ற அமுத மயமான விஷம்; இதுதான் பெண்! தர்மத்தை அழிப்பதற்கு இந்தக் கருவியை யார் சிருஷ்டித்தார்களோ!'

—பஞ்சதந்திரம்.

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேணடும், அம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும், அம்மா!

—தேசிகவிநாயகம்பிள்ளை.




மட்ட மல்லாக்க கிழவர் கிடக்கிறார்.

உடம்பு என்பது ஒரு திரியா? அந்தத் திரியிலே உயிரென்னும் தீக்கொழுந்து. திரி எரிந்து தீரும் மட்டுந்தான் இந்த உடலின் கூத்து. அப்புறம்?

கிழவர் இப்போ புகைகிறார். அவர் ஓர் எரிந்த திரி. அங்கே உயிரின் சுடரில்லை. ஆனால் அணையக் கஷ்டப்படும் தணலின் மினுக்கம், புகைச்சல்.

பிணவாடை லேசாகவீசுகிறது.

வெழுப்பேறிய இரத்தம் அவர் தோலின் மேலாகத் தெரிவது போன்ற மயக்கம். அவர் புரண்டு படுக்க முனைகிறார். ஆனால் அந்த அற்ப ஆசையைத்தானும் நிறைவேற்றிவைக்க முடியாத விதத்தில் அவர் மூச்சுத் திணறுகிறது.

தொய்வு நோய் அவர் நெஞ்சுக் கூட்டுக்குள்ளே கிடந்து 'ஙொய் ஙொய்' என்று குரல் கொடுக்கிறது. அட்டைபோல் ஒட்டிக்கொள்ளும் அந்நோய், அந்திமகாலத்தில் ஆயிரம் குரங்கின் அழுங்குப் பிடியைத் தனதாக்கிக் கொண்டு, ஒவ்வொரு எலும்பையும் நரம்பையும் துன்னலிட்டு எண்ணத் தொடங்கும் போது ...அந்த நேரத்தில் தலையை தலையணையில் குத்தவைத்து, முழங்கால் இரண்டையும் முட்டுக் கொடுத்து முக்கோண உருவமெடுப்பதுதான் சௌகரியமான நிலை. ஆனால் அதற்குக்கூடக் கிழவரிடம் சக்தியிருப்பதாய்த் தெரியவில்லை.

சீ! பிறப்பிலேயும் கேடு கெட்ட பிறப்பு! முடியை சளித்திரளைக்கூட இருமிக் கக்கத் திராணியற்று 'ஹம் ஹிம்' என்று ஒரு வித 'அரை இருமல்' இருமுகிறார். அப்போது அவர் கண்கள் முன்னே தள்ளுண்டு முளிசுகின்றன அந்தத் திணறல் வரும்போதெல்லாம் அவருக்குத் தாக்குப் பிடிக்க ஒன்று தேவை அந்தக் கடமையைச் செய்வது அவருக்கு அருகே கிடக்கும் ஒரு பூவரசம்பொல்லு. அதைப் பற்றிக்கொள்ளும்போது திணறலில் பாதிஇறங்கினமாதிரி. எல்லாம் பழக்க சுபாவம். அவர் பொல்லைத் தேடுகிறார். ஆனால் அதுதான் அகப்படுவதாயில்லை

இழவு, கண்ணாவது தெரிகிறதா? வெண் சதைகள் அவர் மணி விழிகளை மூடிப்பாசி கட்டியிருக்கின்றன. என்ன பாவம் செய்து வந்து பிறந்தாரோ! பொல்லைத் தேடக் கைகளை அங்குமிங்கும் சிறிது அலையவிட்டதே இன்னும் இரட்டிப்புத் திணறலை அழைத்து வந்தது அதனால் கைகளை பொல்லைத் தேட விட்ட பிராந்தியத்திலேயே விட்டுவிடுவதா அல்லது அவற்றை முன்னர்போல்

மார்புக்கு நேரே கொண்டுவந்து போடுவதா என்று ஒரு நிலைக்கு வரமுடியாமல் அவதிப்படுகிறார்.

முன்பொருநாள் இப்படித் தான், மூச்சுத் திணறுகையில் பொல்லைத்தேட முற்பட்டபோது அவர் கையை ஏதோ ஒன்று உரசியது. அவர் அதை விடவில்லை. கையிலெடுத்துத் தடவிப் பார்த்தார். ஒரு கறல் பிடித்துக் கரகரத்த சவரப் பிளேட்!

அவர் மூளையிலே மின்னற்கீற்று. தன் துன்பமெல்லாம் இன்றொடு தொலைந்தது என்ற இன்பவெறி உடலெங்கும் சுழித்தோட, அவர் அந்தப் பிளேட்டை விரலொன்றால் தடவி கூரிய பக்கத்தைக் கிரகித்தவராய் திடீரென அதைக் கழுத்தை நோக்கி இறக்குகிறார்.

அப்படியும் இப்படியும் ஐந்தாறு தரம் அழுக்திப் பிடித்தபடி கழுத்திலே கீறுகிறார். ஆனால் அவர் கழுத்து, பிளேட்டுக்குத் தான் இயமனாக மாறுகிறது. கொலையின் சுவடுகளாய் இரண்டொரு ஊமைக் காயங்களை விளைவித்த பிளேட், அதற்குமேல்முன்னேறப் பயந்தோ என்னவோ, தன்னையே தற்கொலை செய்து கொள்ளுகிறது.

உடைந்த பிளேட்டு கை நழுவியதுபோல் அவர் சாவாசையும் நீராசையாக நழுவுகிறது

இப்போ கழுத்தெங்கும் எரிச்சல் அழுத்துகிறது. கூட வே தொண்டையைக் கல்லும் அந்தத் தொய்வு நோயின் புளிச்சல் சளிக்கு, இது ஏதோ விதத்தில் தோழமை கொண்டாடுகிறது. அவரால் தாங்க முடியவில்லை ஒருபக்கம் எரிவு, மறுபக்கம் திணறல்

'தம்பி, தம்பி முத்துவேலு...?

அவர் கூப்பிடுவது அவருக்கே கேட்கிறதா? இருந்தாலும் 'ஓய்' என்றுது அவர் முன்னே முத்துவேல் சலிப்போடு வந்து நிற்கிறான். ஒரு தரம் அவரைக் கூர்ந்து பார்த்தவன், கழுத்திலிருந்து கழுநீர் வடிவது போன்ற இரத்தத் துளிர்ப்பால் துரிதமாகிறான். அவன் காயங்களுக்கு கறுவா தைலத்தை ஊற்றி ஒத்தடம் போடும்போது, கிழவரின் மார்பின் ரோமக் கற்றையில் சிக்குண்டு கிடந்த அந்தப் பிளேட் துண்டுகள் அவனுக்கு நடந்தவற்றைப் புரிய வைக்கின்றன. அவனுக்கெடுத்த எரிச்சலையும் விலக்கிக் கொண்டு சிரிப்பு வருகிறது

'தம்பி, தம்பி முத்துவேலு'

'என்னது?'

'அவள் என்ன தம்பி சொன்னாள்?'

'என்னத்தைச் சொல்லிறது, 'போடா உன்பாட்டில்' எண்டு என்னைத் தான் பேசிறு'

கிழவர் பதில் பேசவில்லை. அவரிடமிருந்து கனல் ஏறிய மூச்சு மட்டும் வெளியேறுகிறது.

ஓ, அவளேன் வரப் போகிறாள்? என்னிடம் என்ன இருக்கிறது? கையில் பசையில்லாதபோதே வீட்டை விட்டுத் துரத்தியவள் இப்போ பாயில் விழுந்து கிடக்கும் போது எனக்குப் பணிவிடை செய்வாளா? இருந்தாலும் ஒரு நப்பாசை. இனிமேல் அந்த எண்ணமும் ஒழிந்தது. கோலமா மத யானையை நம்பலாம், கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்—பழைய பாட்டொன்றின் நினைவோட்டம்.

எப்பவோ கிழவர் செத்த இடமும் புல்லு முளைத்திருக்கும் இந்த முத்துவேலு இல்லாவிட்டால். முத்துவேலுவை அவர் உள்ளத்தால் வணங்குகிறார். திடீரென்று அவருக்கு ஆத்திரம் வேறு வருகிறது. ஆம் இந்த,

முத்துவேலுவால் தான் அவருக்கு இத்தனை துன்பமும்! அவர் தெருத் தெருவாக அலைந்தபோது அவரை அப்படியே விட்டிருந்தால் அவர் எப்பவோ செத்தொழிந்து இத்துன்பங்களுக்கெல்லாம் முடிவு கண்டிருப்பார். ஆனால் அவற்றுக்கெல்லாம் இடமில்லாமல் இந்த முத்துவேலு தான் குறுக்கே விழுந்து அவரைத் தன்னோடு கூட்டி வந்து—இப்போ அவர் அழுந்துகிறார் ஆத்திரம் அவர் பற்களைக் கிட்ட வைக்கிறது. ஆனால் அது சொற்ப நேரந்தான். முத்துவேலுவைப் பற்றிய அவரது முடிவு நோயின் கொடுமையில் காலூன்றிய ஒன்று அவர் உலகை விட்டொழிந்தாலும் அவர் உள்ளத்தோடு வரும் ஒரே ஒருத்தன் முத்துவேலுவைத் தவிர வேறு யார் இருக்கப் போகிறார்கள்?

கிழவன் இன்னும் அப்படியே மட்டமல்லாக்கக் கிடக்கிறார். எரிந்த திரியிலிருந்து கிழம்பும் புகைபோல் பழைய எண்ணங்களின் புகைச்சல் அவற்றுக்கிடையே அவருக்கு இதமூட்டுபவை அவர் எடுத்த சாவுக்கான முயற்சிகள். எத்தனை கருங்கல்லுச் சிலைகளைத் திடீர் திடீரென அபகரித்துச் செல்லும் இச்சாவு அவருக்குமட்டும் அரிதாகி விட்டதா? அவரால் அந்த முத்துவேலு இன்னும் அல்லல்பட வேண்டுமா?

ஏதோ ஒருமுடிவுக்கு வரவேண்டிய துரிதம் அவரிடம் தென்படுகிறது.

கிழவருக்கு சிறிது தூரம் தள்ளி முத்துவேலன் கிடக்கிறான். பக்கத்தே எரிந்த குப்பி விளக்கின் மினு மினுப்போடு போட்டி போட முடியாமல் அவன் சூப்பிய சுருட்டின் தணல் தோல்வி காண்கிறது.

அவன் மூளையில் பல எண்ணங்கள் வேர்விடுவது, அவன் அந்தச் சுருட்டை புரட்டிப் புரட்டிச் சப்பியதிலிருந்து தெரிகிறது.

கிழவர் இப்போ அவனுக்கு ஒரு கேள்விக் குறியாக மாறிவிட்டிருந்தார். ஆரம்ப காலத்தில் அவனுக்கு அவர்மேல் இருந்த அன்பு இரக்கம் எல்லாம் எங்கே ஓடிவிட்டன? ஒருவேளை இரத்த உறவு அல்லாரின் உறவு இப்படி இடையில் அறுந்து போவது தானோ? அவன் கவலைப்படவில்லை. ஆண்டுகள் ஒன்று, இரண்டா? ஐந்து வருடங்கள் அவன் அவரோடு போராடியிருக்கிறான்! எத்தனை இராக்கள் தூக்கமின்றி கண் விழித்து காத்திருக்கிறான். அவரைக்குழிப்பாட்டி உடுப்பு மாற்றுவது முதல் மல சலம் எல்லாம் அவனுடைய பொறுப்புத்தான்! இந்தப் பாடெல்லாம் அவனுக்கு எதற்கு?

அவனும் ஒரு சாதாரண மனிதன். அவனுக்கும் சலிப்பு என்பது இருக்காதா? அவனுக்கும் அவருக்கும் நெருங்கிய இரத்த உறவும் இல்லை. ஆனால் அந்தப் பகுதியில் அவனுக்கு மற்றவர்களைவிட மனிதாபிமானம் இருந்திருக்க வேண்டும். அதனால் அலைந்து திரிந்த அவரை அழைத்து வந்து பார்த்தான். பராமரித்தான். ஆனால் கிழவர் சுகப்படவில்லை. மாறாக அவன் சுகந்தான் குறைந்துகொண்டு வந்தது. இந்த ஈளை நோய் பிடித்தவர்கள் சாகவும் மாட்டார்கள். குணமடைந்து வாழவும் மாட்டார்கள்.

கிழவர் இனி வாழ்ந்துதான் என்ன பயன்?

அன்றொருநாள் அவன் கண்ட காட்சி அவன் கண்ணெதிரே ஓடி வருகிறது.

கடைக்காரக் கனக சபையர், தான் ஆசையோடு வளர்த்த நாயைக் கழுத்திலே கயிறுபோ

ட்டு கொற கொறவென கடற் கரைப் பக்கமாக இழுத்துப் போய்க் கொண்டிருந்தார். நாயின் மேலெங்கும் குட்டை பிடித்து புண்ணும் சொறியும் புரையோடிவிட்டிருந்தன.

'இது என்ன கூத்து?'

'இந்த நாய் இனி உதவாது; அது அவதிப்படுவதைப் பார்க்க பெரியபரிதாபமாயிருக்கு. பாவந் தான் தம்பி—ஆனு அதின்ர துன் பம் முடியும் ..கழுத்தில கல்லைக் கட்டி கடல்ல போடப் போறன்'.

கனகசபையர் தொடர்ந்து நாயைக் கொற கொற வென இழுத்துப் போனுர்.

அந்தக் காட்சி இப்போ அவ னுக்கு புது விளக்கத்தைக் கொ டுத்தது.

கிழவரும் இப்போ அந்தக் குட் டை நாயின் நிலையில்தான் கிடக் கிறுர். நாய் வேறு, மனிதன் வேறா? எல்லா உயிரும் ஒன்று தான் அவர் வாழ்வதால் இனி பிரயோசனமேயில்லை. அது மட்டு மல்ல, நோயின் உச்சத்தில் அவர் வேகிறுர். அவரே தற்கொலையை விரும்புகிறுர். அந்தக் கறல் பிளே ட்டின் ஊமைக் காயங்கள் அவற் றைப் பேசின.

அவன் இப்போ இரண்டாம் முறையாக உதவி செய்யத் தயா ராயிருந்தான். கருணை அதிகமாய் உள்ளவன்தான் கல்நெஞ்சனுக வும் மாறுகிறுனு? அவனுக அவ ரைக் கொல்ல விரும்பவில்லை. அவரிடம் அதற்கான சாடை எப் போ தெரிகிறதோ, அப்போ உத வத் தயாராய் இருந்தான்.

அவர் அவனுக்கு உதவி செய்ய மாட்டாரா?

'தம்பி, தம்பி முத்து வேலு' —கிழவர் வழக்கத்துக்கு மாறுக அவனை ஒரு வேகத்தோடு அழைக் கிறுர்.

குறைச் 'சுத்தை' வத்தையில் சொருகிவிட்டு அவன் அருகே குப்பி விளக்கோடு போய் நிற் கிறுன்.

'தம்பி, எனக்கு இனிமேலும் இதைத் தாங்க முடியவில்லை நான் எப்படியாவது சாகவே ணும்'

அவன் உடம்பு ஒருகணம் ஓடிப் புல்லரிக்கிறது. அவனிடம் ஓடிய அதே எண்ணம் இவரிடமும் ஓடு கிறது. 'ஓம்' என்று சொன்னு எல்லாம் சரியாப் போகுது. ஆனுல்! அவன் இத்தனை நாளும் கட்டிக் காத்த புண்ணியமெல் லாம் தோற்றுப்போகுதே! இல்லை இதை அவர் தானே விரும்பு கிறுர் அது உனக்கொரு சாட்டு. இப்படித்தான் கொள்கைகள் சோரம் போகின்றன. முத்து வேலுவின் மூளையில் குழப்பம். புண்ணியம், கொள்கை என்று ஏதாவது இருக்குதா?

அப்படி ஏதாவது இருந்தால் இருந்துபோட்டும், இப்போ கண் கூடாக அனுபவிக்கிற தொல்லை கள் நீங்கட்டும். இது ஒருவரை ஒருவர் உணர்ந்து செய்யும் பரஸ் பர உதவி. முத்துவேலு தயாரா ருன்.

'என்ன செய்ய வேணும்?'

'இந்த முகட்டு வளையில் ஒரு கயித்தை மாட்டி சுருக்குப்போ ட்டுவிட்டு, என்னை ஒரு கதிரை யில் நிப்பாட்டி சுருக்கை கையில தந்திற்று நீ போ, மற்றதை நான் பாத்துக் கொள்ளிறன்'

அவனிடமிருந்து மறுப்பொன் றும் வரவில்லை. அத்தனையும் அரை நிமிடத்தில் முடித்துவிட்டு, அவன் தன் படுக்கையைத் தூக் கிக்கொண்டு கோடிப்பக்கத்து மாட்டுக் கொட்டிலுக்கு ஓடு கிறுன்.

காலையில், கிழவர் தூக்குப்போ ட்டு 'தற்கொலை' செய்த செய்தி பரவுகிறது *

# உபதேசம்

தான் சோக்கா இருக்கும்...நாங்க எப்பவும் அந்த மதவில இருந்தான் கடலை, இனிப்பு எல்லாம் தின்னுறது...

அந்த மதவுக்கு கீழே எப்பவும் தண்ணி ஓடிக்கொண்டிருக்கும்... ஊத்தைத் தண்ணி நல்லா மழை பெய்தா மட்டும் ஆரிய குளம் முட்டி அந்த மதவால தண்ணி கனக்க ஓடும்.. அப்ப பென்னும் பெரிய மீன் எல்லாம் ஓடும் ஆனா மாலதி மட்டும் சொல்லுறா 'மீன் நெடுக இதாலஓடும்' எண்டு...அவமொக்கு...ஒண்டுமே

## செம்பியன் செல்வன்

தெரியாது...இல்லை யெண்டா முருகேசு வாத்தியார் அவவை வாங்கில ஏறி நிக்கச் சொல்லுவாரோ? பாவம் அண்டைக்கு நாள் முழுதும் வாங்கில ஏறி நிண்டா...எனக்கும் அழுகை அழுகையாக வந்துது!... அவவுக்கு காலெல்லாம் நோகாதோ!...

...இதென்ன அம்மா இன்னமும் அழுது கொண்டுதான் இருக்கிறா!... நான் இண்டைக்கு பள்ளிக்குப் போறதில்லையே அம்மா ஒவ்வொரு நாளும் காலைமையிலை!...தம்பி! டேய் ராசா!...மத்தியானமாப் போச்செடா...எழும்படா!...பள்ளிக்கு நேரமெல்லே போகுது!... எண்டு என்னை எழுப்பி பல்லுத் தீட்டிவிட்டு...குளிச்ச வாத்து... வடிவா முகமெல்லாம் பவுடர் பூசி விடுவா...

...எனக்கு உறைப்பு பிடிக்காது...எனக்கு இடியப்பத்துக்கு தேங்காய்ப்பூ, சீனி எல்லாம் போட்டு நல்லாக் குழைச்சு அம்மா தீத்தி விடுவா'...அப்ப வாயெல்லாம் இனிக்கும்...அம்மா நல்லவ கனக்கச் சீனி போடுவா... ஆனா அப்பா தான் பொல்லாதவர்...அம்மாவை பேசுவார்!... 'நீதாண்டி அவனுக்கு செல்லம் குடுத்து அவனைக் கெடுக்கிறது... அவனுக்கு வயித்திலை பூச்சி வைக்கப் போகுது' எண்டு ..

...அப்பா நெடுக இப்படித்தான்! சீனி இனிப்பு திண்டா வயித்தில பூச்சி வைக்குமாம் அதால எனக்கு பழங்கள்தான்

'இந்த அம்மா ஏன் அழுது கொண்டிருக்கா! மணி எட்டாப்போச்சு நான் பள்ளிக்குப் போறதில்லையே...நேரம் கழிச்சுப் போனா அந்தப் புது வாத்தியார் பிரம்பாலே அடிச்சுப் போடுவார்...கையைப் பாத்தா கொவ்வைப் பழம் ஒண்டு பழுத்திருக்கும்...

...அவன் பத்மன் இண்டைக்கு பச்சை தின்னி' மாங்காய் கொண்டுவாறன் எண்டவன்...அவங்கட வீட்டில் ஒரு பச்சை தின்னி மாமரம் நிக்குது குலைகுலையா காய்ச்சு தொங்கும் ... பாத்தா வாயெல்லாம் ஊறும்...'இண்டைக்கு கெதியா வாடா ரண்டு பேருமா அந்த மதவில இருந்து மாங்கா தின்னலாம் எண்டவன்'...எனக்கு மாங்காயை கத்தியால வெட்டித் திண்டா புடிக்காது...கல்லில குத்தித் திண்டாத்

கனக்க வாங்கித் தருவார்... பென்ணும் பெரிய கப்பல் வாழப்பழம், அப்பிள் எல்லாம் வாங்கித் தருவார் நான் அப்பிள் பழத்தை மட்டும் உடன சாப்பிட மாட்டன் மெல்ல மெல்லத்தான் சாப்பிடுவன் ஏனெண்டா பேந்து அம்மாட்ட கேட்டா 'ஒண்டுதிண்டது போதும், இனி நாளைக்குத் தின்னலாம்!' — எண்டு சொல்லுவா

எனக்கு இப்ப நல்லாப் பசிக்குது அடுப்படிக்குள்ள போய்ப் பாத்தா அங்க நேத்தய சாம்பல் எல்லாம் அடுப்புக்க நிறைஞ்சு கிடக்குது அம்மாட்ட பசிஎண்டு சொல்லக் கூடாது ... பசி எண்டு சொன்னா தரித்திரம் வந்திடுமாம்! அம்மா சொல்லுவா

'அம்மா!' எண்டு மெல்லக் கூப்பிடுறன் தலையைநிமித்தி அம்மா பாக்கிறா!... அழுது அழுது அம்மாட கண் எல்லாம் சிவந்து போய்க் கிடக்குது! முகமெல்லாம் கண்ணீர்க் கறையாக இருக்குது'

'அம்மா! பள்ளிக்கு போக நேரமாச்சம்மா! பிந்திப் போனா வாத்தியார் அடிப்பாரம்மா!'

'நீ இண்டைக்கு பள்ளிக்கூடம் போக வேண்டாம்!' எண்டு அம்மா சொல்லுவா

'எண்டா, எனக்குப் பசிக்குதம்மா!'

'பசிக்குதா பசிச்சா போய் உன்ர அப்பாட்ட கேள் என்னை ஒண்டும் கேக்க வேணும்!' எண்டு சீறிவிழுந்தா! எனக்கு அழுகையா வந்தது நான் மெல்லமாத்தான் அழுதன். ஆனா அம்மா தலையை உயர்த்தி என்னைப் பார்த்தா நீண்ட நேரம் பாத்தா...பேந்து திடீரென்று என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழுதா!...

'நான் பாவி...என்ர துக்கத்தில பிள்ளையைக்கூட பட்டினி போட்டுட்டன்!' — எண்டு சொல்லிக் கொண்டு அடுப்படிக்குப்போனா.

எனக்கு சந்தோஷமா இருந்தது!

...அண்டைக்கு அம்மா இடியப் பமும் அவிச்சு, பால் சொதியும் வைச்சா...சோக்கா இருந்தது... அம்மா நிறைய நிறையத் தீத்தி விட்டா 'அம்மா; நீ சாப்பிடலயா?' என்று கேட்டேன்.

'எனக்கு அதுதான் குறை. நான் வாழ்க்கைப்பட்ட சீருக்கு!' எண்டு கோபத்தோடே சொன்னா அப்ப அவவின்ர முகம் சிவந்து போய் செம்பரத்தம் பூப்போல இருந்தது...அம்மா சிரிச்சாலும் அழுதாலும் உடனேயே முகம் சிவந்துபோய் வடிவா இருக்கும்.

'அப்பா எங்கேம்மா?...காணலியே?...வேலைக்கு போயிட்டாராம்மா?'...எண்டு மெல்லமா கேட்டன்.

அம்மாவுக்கு கோபம் வந்துட்டுது. 'உன்ர அப்பாவைப்போய் நாகன்ர கள்ளுக்கொட்டில்ல பார் இருப்பார். என்னை உபத்திரவும் செய்யாதே!'—எண்டா.

எங்கட வீட்டை கள்ளுச் சீவ வருவானே? அவனா?' எண்டு கேட்டன், அம்மா பேசாம இருந்தா.

நாகனைக் கண்டா எனக்குப் பிடிக்கும். ஒவ்வொரு நாளும் காலையிலும் பின்னேரத்திலும் எங்கட வீட்டுக்கு சீவவருவான். அவன் நடக்கேக்க 'கடக்; கடக்!' என்று கத்திக் கூடு சப்தம் போடும்...அவன்ர கத்தி எல்லாம் பள பளக்கும்...கத்தியை அவன் தீட்டுத் தடியில் 'செங்கான் ஓடு' போட்டு தீட்டினேடன பாக்கவேணும்..அம்மாடி!..எவ்வளவு கூர்!...எங்கட அம்மாவும் காய் கறி அடுக்குப் பெட்டிக்கை ஒரு கத்தி வைத்திருக்கா......ஒரே மொட்டை...கறள் பிடித்தமாதிரி ஒரு நாள் நாகன்ர கத்தியை

மெல்லமா எடுத்து தொட்டுப் பார்த்தன்...நாகன் கண்டுட்டான்.

'தம்பி!...கத்தி கவனம்...வை! வை! சின்னப்பிள்ளை நீ! கையை வெட்டிப் போடும்!' எண்டு கத்தினன். நான் கத்தியை வைச்சுப் போட்டு திரும்பக் கத்தினன்.

'நான் ஒண்ணும் சின்னப்பிள்ளை இல்லை. நாளைக்கு அப்பாவைப் போல் நானும் வேலைக்குப் போறன்!' எண்று. இதைக் கேட்டு அப்பாவும், அம்மாவும் நாகனும் விழுந்து விழுந்து சிரிச்சினம். எனக்கு வெட்கமாகப் போச்சு!

அப்பா இப்ப எல்லாம் நாகன்ர கொட்டிலுக்குப் போருர். முந்தி எண்டா அவருக்கு நாகனைப் பிடிக்காது. நாகன் எங்கட தெருவுக்கு குடியிருக்க வரேக்க அப்பாவும், அந்த சங்கக் கடை மனேச்சர் மாமாவும் எவ்வளவு சத்தம் போட்டினம்...' வெள்ளாளத் தெருவில் நளவன் குடியிருக்க வாறதா!'

இப்ப என்னடா எண்டா இரண்டு பேரும் அங்க தான் போகினம் இந்தப் பெரியவர்களே இப்படித் தான் ஒண்ணும் தெரியாது!

அப்பாவுக்கு நாகனைப் புடிக்கும் அவன்ர மகன் பொன்னனைக் கண்டா புடிக்காது. பொன்னன் என்னோடை எல்லாம் இலுப்பைக் கொட்டை விளையாட வருவான். அவனிடம் நல்ல 'நல்ல வாழைக் காய் உச்சான்' எல்லாம் இருக்குது. நான் கேட்டா உடன தருவான் நல்லவன்...அவன் என்னோடை விளையாடினதை அப்பா ஒருநாள் பாத்துட்டு அவனை 'வீட்டுப் பக்கம் காலெடுத்து வைக்கக் கூடாதுடா பயலே!' என்று ஏசித் துரத்தி விட்டார்.

'ஏண்டா! உனக்கென்னடா நளப்பயல்களுடன் விளையாட்டு!' எண்டு என்னைக் கேட்டார்.

'நளவனண்டா என்னப்பா?'— எண்டன்.

'இழிந்த சாதிடா!'

'ஏன்?'

'அவன் மரமேறுத தொழில செய்யிறதால?'

'அப்படி எண்டா நீ என்ன சாதி?'

'வெள்ளாளச் சாதி!'

'அப்படியின்ன 'பஸ்' ஓட்டுறவர்கள் எல்லாம் வெள்ளாளர்களா?'

'அப்படியில்லையடா! உனக்கெண்ணும் தெரியாது ஓடுடா!'— எண்டு என்னைத் துரத்திப் போட்டார். இந்தப் பெரியவர்களே இப்படித்தான் ஒண்ணும் தெரியாது!

இப்படி எல்லாம் அப்பா வேலை முடிந்தகும், நேராக நாகனின் கள்ளுக் கொட்டிலுக்குப்போயிட்டுத்தான் வருவார்.

அம்மா இன்னமும் அழுது கொண்டுதானிருக்கிறு! எனக்குப் பார்க்கப் பார்க்க அழுகையா வந்தது ..'ஏம்மா அழுறீங்க!'— எண்டு கேட்டுக் கொண்டே அவவின்ர கண்ணீரைத் துடைச்சன். அம்மா தன்ர கழுத்தை தொட்டுக் காட்டினு அங்கே விரல் படுமளவுக்கு கிடந்த அம்மாட தாலிக்கொடியைக் காணவில்லை. 'தாலி எங்கேம்மா?' எண்டு கேட்டன். அம்மா என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டா...

'அதைக்கூட அறுத்துக் கொண்டு போய் உன் அப்பர் குடிக்கப் போட்டார்!'—என்ரு.

எனக்கு அப்பா மேல கோபம் கோபமா வந்தது! வரட்டும் வரட்டும்!

அப்பாவை கனநேரமா காணவில்லை!

மெதுவாக நான் நாகன்ரை வீட்டுக்குப் போனன். அங்கமுத்தத்திலே ஒரு ஓலைக் கொட்டில் ஒண்டு இருந்துது? அதில புளாக்கள் தொங்கிக் கொண்டிருந்துது தூக்கணங்குருவி கூடுபோல... அங்க ஒரு பென்னும் பெரிய பானை ஒண்டு இருந்திச்சு அதில இருந்து கள்ளை மொண்டு மொண்டு நாகன் ஆக்களின்ர பிளாவில ஊத்திக் கொண்டிருந்தான். அங்க—அப்பா, அப்பாவோட வேலைசெய்யிற கண்டக்டர்மாமா இரண்டு பேர் சங்கக்கடை மாமா எல்லாரும் குடிச்சுக் கொண்டிருந்திச்சினம்

அப்பாவின்ர தலையெல்லாம் கலைஞ்சு கண்ணெல்லாம் ரத்தமாக பாக்கப் பயமாக இருந்திச்சு!

'அப்பா! ! எண்டன்.

'யார்ரா...அது?'—எண்டு அப்பா கேட்டார்.

'நான் தாம்பா ராசா! ' எண்டன்.

'இங்க ஏண்டா வந்தனி.' உன்னை யார் வரச் சொன்னது?' எண்டு உறுமினர். பயத்தால் என்ர கழிசான் கூட நனைஞ்சு போச்சு. கூட இருந்த ஆக்கள் எல்லாரும் சிரிச்சினம் எனக்கு அவையள் மேல ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

'என்னடா இளிப்பு?' எண்டு அப்பா உறுமினர். எல்லாரும் வாயைப் பொத்திக்கொண்டிருந்திச்சினம். அப்பாவின்ர உடல் ஏனோ நடுங்கிக் கொண்டிருந்தது '

'ஏண்டா இங்க வந்தனி?...' எண்டு கேட்ட அப்பாவின்ர குரலில முன்னிருந்த கடுமையல்ல . குரல் கரகரத்தது.

'அம்மா அழுவுருப்பா நீவாப்பா...நீ இங்கவந்து குடிக்கிறதால தானே அம்மா அழுகிரு குடிக்காட்டி அம்மா அழமாட்டா... அவ கண்ணுல தினம் தினம் ஒத்திக் கும்பிடுற தாலியை ஏனப்பா பறிச்சுட்டு... இவங்கெல்லாம் கூடாத மாமாக்கள், அம்மா பாவம்...சாப்பிடாம கிடக்கிரு... வந்து பாருங்கப்பா ' எண்டு ஏதேதோ பேசினன். என்ன பேசினன் எண்டு எனக்கே தெரியாது.

—அப்பாவின்ர உடல் நடுங்கிச்சு...அவற்ர வெறியெல்லாம் எங்கேயோ போட்டுதுபோல இருந்திச்சுது. என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழுதார் .. 'என்ர ராசா!' உண்ணுணை இனிமே குடிக்கமாட்டண்டா! இது சத்தியம்' என்ர தலையிலை அடிச்சு சொல்லிட்டு என்னைத் தூக்கிக்கொண்டு வீட்டை வந்தார்.

—'பாக்கியம்!'—எண்டு அம்மாவைக் கூப்பிட்டார். அம்மாதிரும்பிப் பாத்தா.

பாக்கியம் இனி நான் குடிக்க மாட்டன். உன்ர தாலியையும் திருப்பிடறன் ' என்ருர்.

அம்மா இப்பவும் அழுகிற அழுகிரு ஆனு கண்ணெல்லாம் சிரிச்சுசு.

அப்பா என்னைத் தூக்கி கொஞ்சினர். அவர் முகம் எல்லாம் முள்ளாக குத்திச்சுது. 'மூஞ்சி எல்லாம் குத்துதே முள்ளாக!' எண்டன்.

அம்மாவும், அப்பாவும்விழுந்து விழுந்து சிரிச்சினம். *

# இயக்கமும் இலக்கியமும்

கா. சிவத்தம்பி

## முரண் அறுத்த முப்பா நூல்

திருக்குறள் தமிழ் இலக்கியங்களுள் சிறந்து விளங்குவது. தமிழ் வேதம் என்றும் தமிழர் உலகுக்கு அளித்துள்ள அறநூல் என்றும் அதனைப் பல வகையாகப் பாராட்டுவர். தான் தோன்றிய காலத்திற்கு மாத்திரமல்லாது எக்காலத்திற்கும் பொருந்தும் உலகநூல் என்று அதனைப் புகழ்வர்.

எத்தகைய புகழுரைகளும் அதற்குப் பொருந்துமேயெனினும், அது தோன்றிய காலத்தை நேரிடையாகவோ எதிர்மறையாகவோ பிரதிபலிக்காதிருக்க முடியாதெனினும் வரலாற்று உண்மையை, இலக்கிய நியதியை நாம் அறிவோம். அதுவும் அரசியலில் புதிய தொரு தத்துவத்தினையே புகுத்தும் ஒரு நூல் தோன்றிய காலத்தோடு தொடர்பற்றது எனக் கொள்ளல் முடியாது. தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், நாட்டு வாழ்விலும் மனிதன் நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றிப் பேசும் ஒரு நூல் சமுகத் தொடர்பின்றித் தோன்ற முடியாது. அரிஸ்தோத்தில், பிளேட்டோ, ஹொப்ஸ், லொக்ரூகோ, மக்கியவல்லி, பெந்தம், மார்க்ஸ் முதலியோரும் கௌடில்யரும் தாம் வாழ்ந்த காலத்து அரசியற் பின்னணிக்கியையவே அரசியற் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் ஒழுக்க முறைகளையும் தோற்றுவித்தனர் என்பது நிரூபிக்கப் பட்ட ஒன்று. திருக்குறள் பற்றிப் பல ஆராய்ச்சிகள் வெளிவந்திருப்பினும், இத்தகைய கண்ணோட்டங் கொண்டு ஆராய்ந்தவை எவையுமில என்றே சொல்ல வேண்டும் திருவள்ளுவரின் காலஆராய்ச்சியிலீடுபட்டவர்கள் இம்முறையைக் கையாண்டிருப்பின் மொழியியல், வரலாற்றுத் துறைகள் மூலம் தாம்பெற்ற முடிபுகள் சரியானவையா என்பதை அறிந்திருக்கவும் முடியும்.

வள்ளுவர் காட்டும் அரசியல் பற்றி முதலில் பார்ப்போம். பொருட்பாலில் அரசியல் தத்துவம் பேசப்படுகின்றது. அரசனைப்பற்றியும் அமைச்சரைப்பற்றியும் நாட்டைப்பற்றியும் அரணைப்பற்றியும் குடிகளைப்பற்றியும் விரிவாகப் பொருட்பால் ஆராய்கின்றது. பொருட்பால் இயல் வகுப்புப்பற்றி உரையாசிரியர்கள் வேறுபட்ட கருத்துக்கள் கொண்டிருந்தனர். பரிமேல

ழகர் அரசியல், அங்கவியல், ஒழி பியல் என மூவகைப்படுத்தினர். மணக்குடவர் பரிப் பெருமான் ஆகியோர் அரசியல், அமைச்சி யல், பொருளியல், நட்பியல், துன்பியல் குடியியல் என வகுத் தனர். போக்கியாரும் காளிங் கரும் வள்ளுவர் கூறிய 'படை குடி' என்ற முறைப்படிவகுப்பர். உரையாசிரியர் தத்தம் காலத் திற்கேற்பக் கருத்துக்காண முனை ந்தனர் என்பது உண்மையெனி னும் வியாக்கியான மில்லாது நேரடி விளக்கம் செய்தவர் மணக்குடவரே என்ற கருத்து அறிஞரிடையே நிலவுகின்றது.

உரைப் பேதங்களை மனத்திருத் திப் பொருட்பயிலப் பழக்கும் பொழுது வள்ளுவரின் அரசியற் சித்தாந்தம் தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

வள்ளுவர் கண்ட நாட்டில் அர சன் ஆட்சி முதல்வன். ஆனல் அவன் சங்ககாலத்து மன்னனைப் போன்று விளங்கவில்லை. ஆட்சி யமைப்பு விளக்கிறது. அரண், அமைச்சு, படை, அரச பரிபால னம் முதலியன வளர்ந்துவிட் டன. ஆட்சிக்கு அமைச்சர், பெரி யோர் ஆலோசனை அவசியமாக விளங்குகின்றன. பூரண அதிகார முடையவனுக விளங்கினலும், அரசன் கொடை, அளி, செங் கோல், குடியோம்பல் உடையவ னுக விளங்க வேண்டுவதவசியம். ஆனல் அதே வேளையில் தனது சுற்றத்தைப் பேணவேண்டும். சில விடயங்களைப் பொறுத்து நடத்தலும் வேண்டும். தன்னோடு பழகியவருக்கு இவ்வருளைக் காட் டலாம் என்பர்.

பொது மக்களைப் பொறுத்த வரையில், உயர்ந்தவர் தாழ்ந்த வர் என்ற நிலையுண்டு. நல்ல குடி யிற் பிறந்தோர் கீழ்குடியிற் பிறந்தோரென்றவேறுபாடுண்டு. பிறப்பால் எல்லோரும் சமமே யெனினும் செய்தொழிலால் வேற்றுமையுண்டு. இதுவே குடிப் பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம். ஒவ்வொருத் தனையும் தனிப்பட்ட முறையில் நற்பண்புகளுடையமனிதனுக்கும் பண்புகளான மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை நாணுடைமை முதலியவற்றைப் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டும். குடியியலில் உழவே வற்புறுத்தப்பட்டுள்ளது. கல்வி யின் அவசியம் அரச வியலிற் கூறப்படுகின்றதேயன்றிக் குடியி யலிற் கூறப்படவில்லை. இரத்தல் இழிவு என்று கூறப்படுவது மேலாயினுர்க்கு' என்றே மணக் குடவரும் பரிப்பெருமானும் கொள்வர். பிச்சைக்காரர் இல் லா உலகம், இயந்திரக் கயிற்றல் ஆட்டப்படும் மரப்பாவையின் இயக்கத்தை ஒத்தது என்பதும் வள்ளுவர் கோட்பாடு.

பொருளியற்துறையில், நாடெ ன்பது பிறவற்றை நாடா வள த்ததாக அதாவது சுயதேவை யைப் பூர்த்தி செய்யும் பொவ ளாதார அமைப்புக்கொண்ட தாக விளங்க வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. தனியார் சொத்திற்கு அங்கு இடமுண்டு. நாட்டின் பொருளாதார வாழ் வில் செல்வர் முக்கிய இடம்பெற் றனர். ஒரு நாட்டிற்கு வேண் டிய முக்கியமான மூன்று அம்சங் களுள் தாழ்விலாச் செல்வரும் வருவர். மக்கள் போட்டி முறை யால் செல்வம் ஈட்டலாம் (Competitive Society). வணிகத் தால் வரும் சுங்க வருவாய் அரச னுக்குக் கிடைக்கும் முக்கிய வரு மானங்களிலொன்று. செல்வர் கள் அரசனின்றும் புறம்பாய் வாழ்பவர்கள். சுங்க வருவாய் பற்றிய குறிப்பும் உழவுபற்றிய குறிப்புமிருப்பதனுல் வணிகமும் விவசாயமும் முக்கிய பொருளா தார நடவடிக்கைகளாக விளங்கு வன எனக் கொள்ளலாம்.

வள்ளுவர் காட்டும் இப்பொருளாதாரப் பண்புகளும் அரசியற் பண்புகளும் சங்க காலத்திற்குச் சிறிதேனும் பொருந்தா என்பதனை நாம் நன்கு அறிவோம். எனவே இவை பிற்காலத்தவையென்பது வெள்ளிடைமலை. அரசன் தனிப்பட்ட ஒரு நிறுவனமாக நன்கு வளர்ந்து, மக்களிலிருந்து விடுபட்டுத் தனித்து உயர்ந்த நிலையில்தான் இத்தகைய அரசியற்தத்துவம் தோன்றமுடியும். அத்தகைய ஒரு நிலையே களப்பிர ஆட்சிக்குப் பின்னர் தமிழ் நாட்டில் நிலவிற்று என்பதனை முன்னர் நாம் பார்த்தோம். அரச நிறுவனம் மக்களின்றும் நீங்கியிருந்தது மாத்திரமல்லாது, அக்காலத்து ஆண்ட அரசர்களும் தமிழ் நாட்டு மண்ணில் தோன்றியவர்களல்லர் என்ற உண்மையையும்நாம் மனத்திலிருத்தலவசியம். அத்தகைய ஒரு சூழ்நிலையில் இத்தகைய ஒரு கோட்பாடு இன்றியமையாத் தேவையாக அமைவதை நாம்அறியலாம். வளர்ந்து நின்ற வணிகக் குழுவின் வளர்ச்சிக்கு மேலும் இடம்கொடுப்பதாக அமைகிறது வள்ளுவரின் அரசியற் கோட்பாடு. தமிழ்நாட்டின் பாரம்பரிய மக்களான மருதநிலக் கிழார்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்கின்றது; சங்க காலப் பிற்பகுதியிலேயே தோன்றிவிட்ட சமூக வேறுபாட்டிற்குக் குறள் அரசியல் அங்கீகாரம் வழங்குகின்றது.

பொருளியற் துறையும் வணிகம் வளர்ந்த ஒரு நிலையையே உணர்த்துகின்றது. புறநானூறு, அகநானூறு போன்ற நூல்கள் காட்டும் பொருளாதார அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் நிலவுகின்றது வள்ளுவர் காட்டும் பொருளாதாரம். தமிழ் நாட்டு மக்களின் முக்கிய தொழிலாக விருந்த உழவை பொது மக்கள் நிலையில் வைத்து வணிகத்திற்கு உயர்ந்த வொரு நிலைமையைக் கொடுக்கின்றது. உழவைப் போற்றியமையால் நாட்டின் உழவுத் தேவையைப் பூர்த்தி செய்யவும் முடிந்தது. அரசியற் குழப்பங்கள் காரணமாக உழவுத் தொழில் சிதைதல் வழக்கம். உழவினைப் புகழ்ந்தமையால் அதை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டுவர விரும்பியுமிருக்கலாம். பாரம்பரிய தொழில் மரபிற்கும், புதிதாகத் தோன்றி வளர்ந்த வணிக வளர்ச்சிக்கும் எவ்வித போட்டியில்லாமலும், ஒன்றால் ஒன்று பாதிக்கப்படாமலும் இருக்கும் நிலையை நாம் வள்ளுவர் காட்டும் பொருளாதாரக் கோட்பாட்டினிற் காணலாம். ஒன்றற்கொன்று பொருந்தாத தாய் நின்ற இருதுறைகளை அரசனது ஆட்சி முறைகொண்டு முரணறுத்து இணைக்கின்றார் வள்ளுவர்.

இவ்வாறு அரசியற்றுறையிலும் பொருளாதாரத் துறையிலும் இருந்ததன் அடிப்படையில் வந்தவற்றை வளர்க்க வழிகாட்டிய வள்ளுவர்,' சமூக அமைப்பின் முக்கிய அம்சமாம் வாழ்வு முறை பற்றிப் பேசும் பொழுது தனது அரசியல் தீட்சண்யத்தைச் சிறப்புறக் காட்டுகின்றார் சமூக வாழ்வு என்பது குடும்ப அடிப்படையில் நடப்பது. இது எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்கட் கூட்டத்திற்கும் பொதுவானவோர் உண்மையென்பது மனிதவியலறிஞர் கண்ட உண்மை. இக்குடும்ப வாழ்விற்கு அடிப்படையாகஅமைவது ஆண் பெண் உறவு. இவ்வளவு முறைகள் மக்கள் வாழும் பிரதேசத்திற்கிணைய அவர்கள் சூழலுக்கேற்ப, அச்சூழலின் அடியாகத் தோன்றும் நம்பிக்கைகள், பழக்கங்களுக்கிணையவே அமையும் என்பதும் மனிதவியல் கூறும் பேருண்மை. இவ்வுறவு முறையில் அடிப்படை மாற்றஞ் செய்ய முடியாது. அவ்வாறு செய்யின் அச்சமூக அமைப்

புக் குலைந்துவிடும். சமுக அமைப்புக் குலைந்தால் புதிய அரசியல் பொருளாதார முறைகளை அமைத்தல் முடியாது பூர்வீக குடிகளிடையே சென்று அவர்களுடன் வாழ்ந்த அறிஞர்கள் இவ்வுண்மையை எமக்கெடுத்துக் காட்டியுள்ளனர். ஆபிரிக்கப் பூர்வீகக் குடிகளிடையே தமது ஆட்சியை நிறுவ முனைந்த ஆங்கிலேயர் இவ்வுண்மையை அனுபவத்தால் அறிந்தனர். எனவே மரபு வழி வரும் உறவு முறையை மாற்றாது அதனை அடியாக ஏற்றுக்கொண்டு தமது கோட்பாடுகளைப் பொருளியல் துறையில் சமுக இயக்கத் துறையில் கொண்டுவர முனைவர். வள்ளுவரும் இதனையே செய்துள்ளார். காமத்துப்பால் எனும் பகுதியில் சங்க இலக்கிய அகத்துறை மரபைப் பின்பற்றியே முழுவதையும் சொல்கின்றார். அறத்துப் பாலிலும், பொருட்பாலிலும் புலவன் கூற்றாகக் குறள்களை அமைத்தவர் காமத்துப் பாலில் இன்ப நுகர்வின் உயர்வையும் உணர்வையும் காட்டுதற் பொருட்டுப் பாத்திரங்களின் வாயிலாகவே வெளிப்படுத்துகின்றார். ஆனால் அங்கு சங்க இலக்கிய அகத்துறையிற் காணப்படும் பரத்தையின் பிரிவு காணப்படவில்லை. ஆண்-பெண் உறவு இன்பத்தைப் பற்றி மரபு தவறாது கூறிவிட்டு இவ்வுறவினால் ஏற்படும் குடும்பம் எனும் நிறுவனத்திற்குப் புதியதோர் இலட்சியத்தைக் கொடுக்கின்றார். அதாவது உள்ள சமுதாய நிறுவனங்களை அப்படியே அமைத்துக் கொண்டு அவற்றிற்குப் புதியதொரு பணியையும் பண்பையும் வகுக்கின்றார். இதனை நாம் அறத்துப் பாலில்வரும் இல்லறவியலிற் காணலாம். தமிழ் நாட்டு மரபு வழி வரும் நிறுவனத்தினடியாகப் புதிதாக வந்த கருத்துக்களை அமைக்கின்றார். உதாரணமாக மனைவியின் பண்புகளை ஆராய்வோம். தொல்காப்பியத்தில் கற்பு என்பது மணஞ் செய்து குடும்பமாக வாழும் நிலையாகவே இருந்தது. ஆனால் வள்ளுவரோ கற்பு என்பது புருஷனைத் தவிர வேறொருவருடன் சேரா வாழ்க்கையென்ற கருத்துப்பட அதனைப் பெண்களுக்கு வேண்டிய பண்பாக மாற்றிவிட்டார்.

பொருளாதார நிலைக்கேற்பச் சமுக அறம் மாறும் என்பது ஓர் பேருண்மை. கொல்லாமை வேட்டுவ நிலையில் அறமாக இருக்க முடியாது. ஆனால் வணிக விவசாய நிலையில் அது ஓர் அறம் அது போன்றே வள்ளுவர் கூறும். அறங்கள் யாவும் சங்ககால நிலையிலிருந்து வேறுபட்டு வளர்ந்த புதிய சமுதாயத்திற்கு ஏற்றவையாகவே அமைகின்றன. சேஷகிரி ஐயங்கார், எஸ். கிருஷ்ணசுவாமி ஐயங்கார் முதல் எஸ், வையாபுரிப்பிள்ளைவரை பலர் இவ்வறங்கள் யாவும் வடமொழி வழிவந்தன என்றும், மதச்சார்புடையனவென்றும் நிரூபித்துள்ளனர்.

அரசியற்றுறையிலும், பொருளியற்றுறையிலும், சமுக அமைப்பிலும் இருந்த பண்புகளுக்கும் வந்த பண்புகளுக்கும் இணைப்புக் கண்டு புதியதொரு சமுதாயத்தை நிறுவ முனைவது வள்ளுவம். முரண்பட்டு நிற்கும் கலாச்சாரங்களை இணைத்து ஒற்றுமை வழி கண்டது வள்ளுவம். அக்காலத்தைய வரலாற்றை நோக்கும் பொழுது இத்தகைய ஓர் இணைப்பு—புதிய பொருளாதார அரசியல் முறைகளுக்கியைய வாழ்வு முறையை அமைக்கும் சிறப்புத் தேவைப்பட்டது. அதனை நுண் மதி படைத்த வள்ளுவப் பெருந்தகை தனது குறள் மூலம் சாதித்து விட்டார். வரலாற்றின் தேவைக்கிணைய வள்ளுவர்செய்த இந்த வாழ்க்கைத் தத்துவத்தையே அல்பேட் சுவைட்சர் குறளின் தலை சிறந்த பண்பாகக்

கொள்கின்ருர். தத்துவ மொழி கொண்டு, ''வாழ்க்கை வாழ்வ தற்கே'' எனும் கருத்துள்ள ''Life Positivism'' சொற்ருெடர் கொண்டு இப்பண்பைக் குறிக் கின்ருர்.

தமிழிலக்கிய வரலாற்றை நோக்குமிடத்துத் திருக்குறள், தோன்றிய காலத்தின் பின்னர் தற்காலத்திலேயே மிகச் சிறந்த முக்கியத்துவமுடைய நூலாகக் கொள்ளப்பட்டு வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கும் பிரச்சினைகள் யாவற்றிற்கும் மருந்து கூறும் நூலாகப் போற்றப் படுகின்றது. பல்லவர் காலம், சோழப் பெருமன்னர் காலம், விசயநகர நாயக்க மன்னர் முதலாம் காலங்களில் திருவள்ளுவரின் அறிவுத் திறனும் குறளின் அறச்சிறப்புமே போற்றப்பட்டனவன்றி, இன்றுபோன்று முழு வாழ்க்கையைச் செம்மையாக்கும் நூலாக அன்ருட வாழ்விலும் திருமணச் சடங்குகள் முதலாம் விழாக்களிலும் பயன்படுத்தப் படவில்லை. ''வழி வழி வள்ளுவர்'' என்ற நூலைப் படிப்போர் இவ்வுண்மையை உணர்வர். திருக்குறளைப் பற்றியெழுந்த நூல்களையுங் கொண்டும் இவ்வுண்மையை நாம் உணரலாம்.

இதற்கு முக்கிய காரணமாக அமைவது குறள் எழுதப்பட்ட காலத்திற்கும் இக்காலத்திற்குமுள்ள பொருத்தமே. சங்கம் மருவிய காலத்தில் இற்றுப்போன பாரம்பரிய வாழ்வு சிதைந்து, ஆட்சியற்று, புதிய அரசியல், பொருளாதார சக்திகளால் தாக்கப்பட்டு மக்கள் வாழ்ந்தனர். பாரம்பரியத்திற்கும் புதுமுறைக்கும் பாலம் அமைத்து வழிகாட்டியது வள்ளுவம். இன்றும் தமிழ் மக்களிடையே அதே நிலைதான். தமிழ் மரபுப்படி வரும் பாரம்பரிய வாழ்வுமுறை அற்றுப் போய்விட்டது. புதிய சூழ்நிலைகள், புதிய அரசியல், பொருளாதார முறைகள் தமிழர் வாழ்வைப் பிணித்து நிற்கின்றன. பண்டைய பாரம்பரியத்திற்கும் புதிய முறைகளுக்குமிடையிற் கிடந்து மக்கள் தவிக்கின்றனர். இவையிரண்டையும் முன்ெருரு காலத்தில் இணைத்து வெற்றி கண்ட நூலே இன்றும் மக்கள் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

இயக்கத்திற்கு இலக்கியம் உதவும் பண்பைக் குறள் காட்டுகின்றது. இலக்கியம் இயக்கத்தினடியாகத்தான் பிறந்தது என்பதற்கும் தலைசிறந்த உதாரணம் திருக்குறள்.

## ஏறு தழுவுதல்

'புலியைக் கூட நேர் நின்று தாக்கி, தம் வலிய கொம்புகளால் அதன் உடலைப் பீறிக் கொல்லும் வீறுடைய ஏறுகளுடன் முல்லை நிலத்து வாலிபர் போர் புரிவர். அந்தப் பலப்பரீட்சையில் வெற்றி பெற்ருேரையே ஆயர்குலத்து இள நங்கையர் மணம் முடிப்பர்......'

—தொல்காப்பியம்.

'......நல்ல வேளை—அந்த வழக்கம் அழிந்தொழிந்து போயிற்று! இல்லாவிட்டால், இன்றைய தமிழ் இளைஞர் எவருக்குமே திருமணம் நடக்காது!'

—யாரோ.

...ஒரு மொழியை நாகரிகமுடைய முதுமக்கள் தம் காலத்தே செவ்வையாக வழங்கினுலும், அம்மொழியானது நூல்வழக்கிற் கொணராமல் விடப்படுமாயின், பிற் காலத்தே தோன்றுகின்ற மக்கள் தமக்குத் தோன்றிய வாறெல்லாம் அம்மொழியின் சொற்களைப் பல்வேறு வகையாய்த் திரித்தும் சிதைத்தும் வழங்கிச் சிலகாலம் சென்றபின் அம்மொழியும் உலக வழக்கினில்லாது இறந்துபோகும்படி செய்துவிடுவர். யாழ்ப்பாணம், திருநெல்வேலி, தஞ்சாவூர், சென்னை முதலிய நாடுகளி லுள்ள தமிழ் மக்கள் தமிழ் மொழியைத் தமக்கேற்றவா றெல்லாம் வழுப்படத் திரித்து வழங்குகின்றனர். இவர் கள் இங்ஙனம் வழுப்படத் திரித்து வழங்கும் சொற்கள் **'தொல்காப்பியம்,' 'திவாகரம்,' 'பிங்கலந்தை'** முதலிய நூல் களில் திருத்தமாக எழுதப்படாது விடப்பட்டிருக்குமா யின், நந் தமிழ்மொழி எவ்வாரும்! இதற் கெடுத்துக் காட்டாகத் 'தாஸ்மானியா' என்னும் நாட்டில் வழங் கிய மொழி, அந்நாட்டு முதுமக்களால் நூல்களில் எழுதி ஒழுங்குபடுத்தாது விடப்பட்டமையின், அவர்க்குப்பின் வந்த நாகரிகமில்லா மக்கள் தாம் விரும்பியவாறு அம் மொழியைப் பிறழ்த்தியும், திரித்தும், மாற்றியும் வழங்கி வந்தனர்; இறுதியில் அம்மொழி இறந்துபட் டது. இன்னும் சைபீரியா, ஆப்பிரிக்கா முதலிய நாடு களிலுள்ள நாகரிகமில்லா மக்கள் வழங்கிய மொழிகள் பலவாற்ருனும் திரிந்து நாளடைவில் இறந்தொழிதலும் சான்ருர். பாதிரியார் ஒருவர் ஒரு தீவுக்குச் சென்று ஆண்டு வாழ்ந்துகொண்டிருந்த நாகரிகமில்லா மக்களின் மொழியைச் சீர்திருத்தி அதற்கு எழுத்துக்கள் உண்டாக் கித் தமது விவிலிய நூலையும் அதில் மொழிபெயர்த்து வைத்து, அம்மொழி அவர்களிடம் நிலைபெற்றிருக்கத் தக்கபடி பல ஆண்டுகள் அவரோடிருந்து உழைத்துப்பின் தம் ஊர்க்குத் திரும்பினர். திரும்பிச் சில ஆண்டுகள் கழித்து அந்நாட்டுக்குச் சென்று பார்த்தபோது, அந் நாகரிகமில்லா மக்கள், அவர் மிகவும் முயன்று கற்பித்த மொழியை அறவே மறந்து ஏதோ ஒரு நாகரிகமற்ற மொழியைப் பேசிக்கொண்டிருக்கக் கண்டார். இவ்வர லாற்றினைக் கற்றறிவு மிக்க **மாக்ஸ்முல்லர்** தமது மொழி யாராய்ச்சி நூலில் எடுத்துக்காட்டி, நாகரிகமில்லா மக் களிடைப்பட்ட மொழியானது நிலைபெருது அழிந்து போம் என்பதை நன்ருக விளக்கியிருக்கின்ருர்...

**—நீலாம்பிகை**



# கவிதை பிறந்த கதை-8.

"பரமஹம்ஸதாசன்"

"பண்பார் ஈழத் தமிழ் நெஞ்சிற்
பதிந்து விட்ட காரணத்தால்,
இன்பத் தமிழ்த்தே னருவியில், நின்
இனிய "கவிதை பிறந்தகதை"
அன்பாய்ப் புகல வேண்டும்" என
அஞ்சல் விடுத்த அருண்மொழியாம்
நண்ப! நின்பே ரன்புக்கு
நன்றி' என்னும், நவில்வதெதை?

## வேறு

நதிமூலம் ரிஷிமூலம் கவியின் மூலம்
நவிலவொண்ணா தெனப்புகல்வர் நன்கு
ணர்ந்தோர்!
இதன்மூலம் தெரிந்துவிடின், மேன்மை காணு(து)
'இவ்வளவு தானா?என் றுலசக எண்ணும்!
அதுவன்றி, மகவுதித்த கதையைக் கூறல்,
அறையொன்றில் ஒருத்தியுடன் அடைந்த
இன்பப்
புதுநலத்தை அம்பலத்தில் விரிக்கும் செய்கை
போலன்றோ? யாரிதனைப் பொதுவில்
வைப்பார்?

என்கவிதை பிறந்தகதை திருவ ருட்பே
ரின்பத்தில் மலர்ந்தகதை! இதனை யானே
நன்குலகுக் கெடுத்துரைக்கின், ஆகம சித்தி
நனிபடைத்தோர் முகம்சுளிப்பர்; நாத்தி
கத்தோர்
விண்புழுகென் றடித்துரைப்பர்; இலக்கி யத்தில்
விருப்புடையோர் சிறுபொழுது போக்காய்
உண்பர்,
என்றாலும், பக்திதந்த பரிசைச் சொன்னால்,
என்போன்ற சிலர்க்கேனும் பயனுன் டன்றோ

ஆதலினாற் சொலத்துணிந்தேன்; இருப தாண்டின்
அப்பால்என் நெஞ்சகத்தே தெய்வ பக்திப்
போதரும்பி முகிழ்த்தலரும் வேளை; ஞானப்
புனிதகுரு பரமஹம்ஸர் பொன்ன டிக்கே
காதலித்துக் கசிந்துருகித் தினமும் நைந்து
கதறியழு தரற்றிவந்த காலம்; ஐயன்
பாதமல ரழகினைப்பைந் தமிழிற் பாடிப்
பரவுதற்குப் பாட்டின்றி வாட்ட முற்றேன்!

எனதருமைப் புதுநண்பர் ஒருவர் அன்னுள்,
ஏசுபிரான் மேற்படைத்த தமது பாட்டைத்
தனிமகிழ்வாய்ப் படித்தென்பாற் காட்டி ஞர்;யான்
தகுநண்பர் திறம்வியந்து மகிழ்ந்(து),
''எனக்குப்
புனிதகுரு ராமகிருஷ்ணர் பதம் வணங்கிப்
போற்றிச்செயத் தக்கசிலபாட்டி யற்றி
நனிவிரைவில் தருக''வென்றேன்!சரியென் ருர்;அந்
நற்பாட்டை எதிர்பார்த்துப் பார்த்தி
ருந்தேன்.

ஒன்றிரண்டு நாள்மூன்று நாலைந் தோடி
ஒருவார மாயிற்று; பாட்டைக் காணேம்!
நின்றிரவு தொறும்படத்தின் முன்கை கூப்பி
நெஞ்சுருகி வாய்குளறி நிற்கு மாப்போல்,
அன்றிரவும், நின்றுகுரு பரம ஹம்ஸர்
அருள்விழியில் தோய்ந்துமனம் ஆழ்ந்த
போது,
நன்றுருகி அவர்கழலைப் பாடு தற்கு.
நற்பாட்டொன் றற்றகுறை நனிவாட் டிற்று!


எதையெதையோ சொலிக்கதறி அழவேண்
டும்போல்
இருந்தது;சொற் சில,ஆங்கொன்
றிங்கொன் ருக,
இதயத்தின் மூலைமுடுக் கெல்லாம் தோன்றி
இன்பநோ வெழுப்பிற்று! இறுதி யாய்ச்சேய்
உதயத்தின் போதடையும் தாய்த்துன் பம்போல்
உளம்விம்மி நோக,மடை யுடைந்தாற்
போன்று,
கதறியழு திடுங்குரலிற் சிதறிச் சொற்கள்
கனன்றனபற் பல;அதுவே பாட்டா யிற்று,

## வேறு

''உன்னைத் துதிக்க ஒருவழியும் யானறியேன்''
என்றுமுதற் பாமலரை ஏந்தி,ஒளி—வண்ணத்
தவமுனிவர் பூங்கழலிற் சார்வித்த தே,என்
கவிதை பிறந்த கதை!

—0—





பவானி

# புதிய பரம்பரை

## 3

சுமார் மூன்று வருடங்களுக்கு முன் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க இதழான 'இளங்கதிரில்' 'அர்ப்பணம்' என்ற தலைப்புடன் ஒரு சிறுகதை பிரசுரமானது. அது வெளிவந்ததோ, இல்லையோ ... அதையொட்டி காம்பஸ்ஸில் ஒரேபரபரப்பு. காரசாரமான கண்டனங்களுட்பட பல மனமொத்தபாராட்டுதல்களுக்கும் அக்கதை இலக்கானது.

அதை எழுதியவர் ஒரு இளம் மாணவி; பெயர் பவானி. அன்று பிரசவித்த அவரது எழுத்துக் குழந்தை பத்திரிகைகளில் வளர்ந்து, அண்மையில் 'கடவுளரும் மனிதரும்' என்ற நூல் வடிவில் பராயமெய்தியது.

கொழும்பு மகளிர் கல்லூரியில் ஆரம்பித்த பவானியின் கல்வி இலங்கைப் பல்கலைக் கழகத்தாரின் B. A பட்டத்தோடு முற்றுப் பெற, 'இந்தியத் தகவல் சேவை' அவரை ஏற்றுக்கொண்டது. அங்கு பணியாற்றிக் கொண்டுதான் எழுதுகிறார்.

ஈழத்தின் பெண் எழுத்தாளர்களுக்கெல்லாம் முதல்வர் என்பதுமட்டுமல்ல, விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஈழத்தின் 'துணிவுமிக்க' எழுத்தாளர்களுள்ளும் பவானி ஒருவராவர். அவரது துணிவுக்குப் பாராட்டுகிறோம்.

'எனது எழுத்தின் நோக்கம் இதுவென்று தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்வது என்னைப் பொறுத்தவரை ஓரளவு கடினமாகவே படுகிறது. எனது எழுத்தெல்லாம் ஆத்ம வெளியீடாக அமைகின்றதே யொழிய, எழுதும் சமயத்தில் முன்பே முடிவு செய்துகொண்ட ஏதோவொரு கருத்தையோ, நோக்கத்தையோ பரப்ப வேண்டுமென்ற நினைவுடன் நான் எழுதுவதில்லை; பேனாபிடித்துக் காகிதத் தாளில் எழுதுகிறேன் என்ற உணர்வே ஏற்படுவதில்லை. என்னையும்மீறிஎழும் கலா சிருஷ்டியை மட்டுமே உணர்கிறேன்.' என்று தனதுஎழுத்தின்நோக்கம்பற்றி மனம்திறந்து கூறும் அவர்,

'திட்டமிடப்பட்ட அமைப்பினுள் முன்பே முடிவு செய்யப்பட்டநோக்கத்தோடு இலக்கியம் சிருஷ்டிக்கத் தொடங்கிய மாத்திரமே அச்சிருஷ்டிகள் பிரசாரமாகவும், உபயோகப் பொருளாகவும் மாறிவிடுவன' என்றும் அபிப்பிராயப் படுகிறார்.

கவிதைத் தன்மை நிறைந்து காணப்படும் பவானியின் கதைகளில், அழகை வழிபடும் ரசனை மட்டுமல்ல, தெரிந்தும் தெரியாத ரகஸ்யம் போல ஏதோ ஒரு சோக இழையும் ஓடிக்கொண்டிருப்பதை அனுமானிக் முடிகிறது.

உலகத்தின் ஆசாபாசங்களுக்கெல்லாம் அனாவசிய அர்த்தம் கற்பிக்காது, உள்ளதை உள்ளபடி நிர்வாணமாகப் பார்க்கப் பழகிக்கொண்டிருக்கும் பவானி, அதை அப்படியே எழுத்தில் வடிக்க முயலும்பொழுதுதான் ஏதோ ஒன்று அவரைத் தடைபண்ணுகிறது. அந்தத் தடையை உதறிவிட்டு, எழுத்துலகில் சுடர்விட்டுத் திகழும் தனி நட்சத்திரமாய் அவர் ஒளிர வேண்டுமென்பதே எம் அவா! —மகேன்.

# 'தேனருவி' பாய வேண்டும்

தேன்மலர்கள் சிரித்துமணம் வீச வேண்டும்
தீந்தமிழில் 'தேனருவி' பாய வேண்டும்
மான்விழியார் மனைதோறும் மகிழ வேண்டும்
மழலைமொழி தவழ்ந்துகளி கூர வேண்டும்
வான்மழையும் பொய்யாது பெய்ய வேண்டும்
வளர்பயிர்கள் செழித்தோங்கி நிறைய வேண்டும்
கூன்இன்றி குருடின்றி மக்கள் எல்லாம்
குவலயத்தில் குறையின்றி வாழ வேண்டும்.

கொஞ்சிவருந் தென்றலிலே உலாவ வேண்டும்
கூடிவரும் அருவியிலே குளிக்க வேண்டும்
அஞ்சிவரும் புள்ளினத்தை அணைக்க வேண்டும்
ஆடிவரும் அம்பலத்தை நினைக்க வேண்டும்
மிஞ்சிவரும் பகையினத்தை அழிக்க வேண்டும்
மிருகமாய் வாழ்பவரை ஒழிக்க வேண்டும்
பஞ்சமின்றி வஞ்சமின்றி மக்கள் எல்லாம்
பண்போடு உயிர்வாழப் பயில வேண்டும்.

இலக்கியமும் சிறுகதையும் வளர வேண்டும்
இயலிசையும் நாடகமும் மலர வேண்டும்
கலைஞர்களும் இளைஞர்களும் பெருக வேண்டும்
காசினியில் கலையரசி ஆட்சி வேண்டும்
விலைவாசி பெருந்நோய்கள் மறைய வேண்டும்
விஞ்ஞான முடன் விவேகம் நிறைய வேண்டும்
நிலையில்லாப் பெருவாழ்வில் நிமலன் பாதம்
நெஞ்சத்தால் நினைத்துயர்வு தேட வேண்டும்.

"ஜீவா - நாவுக்கரசன்"

# 'பழிக்குப் பழி'

இன்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் ஓர் முக்கிய நாள்.

ஈழத்தின் புதிய நகரான அமுத மிக்க அநுராதபுரியின் வானுயர் மாட மாளிகைகளும், டகோபாக்களும் இரத்த வெள்ளத்தில் மூழ்கியெழுந்தவைபோல் காட்சியளித்தன. இரத்தச் சிவப்பேறிக் கிடந்த அந்திவானத்தில் இருளின் மெல்லிய கீற்றுக்கள் விழுந்து கொண்டிருந்தன. மிகவும் ரகசியமாக ஒருவரோடொருவர் ஏதேதோ பேசிக் கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே பயங்கர அமைதி நிலவியது. இரவு நடுநிசிவரை பாட்டும் கூத்துமாக ஒரே அமர்க்களப்படும் அநுராதபுரம் அன்று வெறிச்சோடிக் கிடந்தது.

**செ. இராசதுரை M. P.**

அரச விடுதிகளில் ஆண்களுக்குரிய அறை ஒன்றில் கைகளைப் பின்புறம் கட்டிய வண்ணம் ஓர் உருவம் உலாவிக் கொண்டிருந்தது. மதியம் கழிந்து. மாலை புகுந்து, இருள் வந்ததுகூட அதற்குத் தெரியவில்லை. சிதைந்து சுக்கு நூருகிவிட்ட அதன் உள்ளத்தின் பிரதிபலிப்பு கன்னத்திலே கோடிட்டு ஓடிக் கொண்டிருக்கும் கண்ணீர் ஆறுகளில் காணக் கூடியதாக இருந்தது. ஆயிரம் தடவையாக அந்த ஒன்பது அடிச் சுவர்களுக்கிடையில் குறுக்கும் நெடுக்குமாக அவ்வுருவம் நடந்து கொண்டிருந்தது. அது யாருமல்ல. ஈழத்தில் வாள் வலிக்கும் தோள் வலிக்கும் பேர் போன தளபதி வசபனேதான்.

கொழுந்து விட்டெரியும் தீ நாக்குகளில் சிக்கித் தன்னைப் பெற்றெடுத்த தாய் எண்ணெயாக உருகி ஓடிய கோரக் காட்சி அவன் கண்களிலிருந்து மறைவதாயில்லை.

'ஆ!...ஐயோ!...அம்மா!' என்று அவன் தாய் நெருப்பின் தாக்குதல் சகிக்க முடியாது வாய் விட்டுக் கத்திய பரிதாபக் குரல் இன்னும் அவனுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருந்தது. விம்மிப் புடைத்த அவனுடைய மார்பகம் ஒரு கணம் உயர்ந்து தாழ்ந்தது, தன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு சிறு குழந்தையைப் போல வசபன் விம்மி விம்மி அழுதான். தாயின் வேதனைக்குரலில் வெந்து புண்ணுகிவிட்ட அவன் நெஞ்சில் நெருப்புக் கொள்ளியைச் செருகியது போல இரு பரிகாசக் குரல்கள் வந்து விழுந்தன. வாளின் பிடியிலே கையை வைத்துக் கொண்டு குரல்கள் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தான். அங்கு தன் மாமனும் அநுராதபுர மன்னனுமான தாதுசேனனும் அவன் மகள் கருணுவதியும் நின்று கொண்டிருந்தார்கள். அவன் கண்களிலே நெருப்புப் பொறி பறந்தது. அவன் உள்ளம் ஓய்வு காணுத கடலாகக் குமுறியது.

'அம்மா பட்டப்பகலில் உன்னை நெருப்பில் பொசுக்கிய கல்நெஞ்சர்களைத் துடி துடிக்கக் கொல்லாவிட்டால் நான் உன் மகன் இல்லை அம்மா. சரித்திரம் எது சொன்ன போதிலும் நான் இப்பழியை

இரத்தத்தாலே போக்குவேன். இது சத்தியம்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் வசபன்.

நீண்ட நேரமாக அவ்வறையில் நிலவிக் கொண்டிருந்த அமைதியைக் கருணவதியின் சிரிப்பொலி கலைத்தது. அவள் வந்ததைக் கூடக் கவனிக்காமல் கன்னங் கரேலென்று இருள் மூடிக்கிடந்த அநுராதபுர நகரை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு நின்ருன் வசபன். ஒரு காலத்தில் தேன் கரும்பாய், தித்திக்கும் கற்கண்டாய், அழகின் அவதாரமாய் விளங்கிய அவனுடைய மனைவி கருணவதி இன்று பேயின் உருவமாகக் காட்சியளித்தாள். வசபனுடைய அலட்சியம் எல்லை மீறி ஆத்திரத்தை அவளுக்கு ஊட்டியது, அவள் ஆவேசத்தோடு பேசினுள். அவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனைக் குத்திக் குடைந்தன.

'உம் அன்னை தன் காலடியில் என்னைக் கிடத்த எண்ணினுள். நான் மன்னன் மகள். என் சுட்டு விரல் அசைந்தால் இந்த நாடே அசையும்! அதை அவள் அனுபவித்து விட்டாளே! பத்து மாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாய் நெருப்பின் தீக் காயங்களுக்கு இரையாகி விட்டாளே. அந்த ஏக்கத்தால் தவிக்கும் தளபதி வசபருக்கு ஆறுதல் சொல்லவில்லையே யாரும் என்று என் மீது ஆத்திரமா? இந்த நாட்டு மன்னன் மகளை உமது தாய் உதாசீனம் செய்தாளே அது உமக்கு அவமானமாக இருக்கவில்லை வேண்டாம் உமது அன்பு. மனைவி அலட்சியம் செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டாள். அப்போது உம் தாய்க்குப் புத்தி சொல்லியிருந்தால் அவளுக்குஇந்தக் கதி ஏற்பட்டிருக்குமா? என்ன பைத்தியக்காரத்தனம்!'

வசபனுடைய பொறுமை எல்லை மீறியது. அந்த வார்த்தைகள் ஒரு ஆண் மகனுடைய வாயிலிருந்து வெளிவந்திருந்திருந்தால் அவனை உயிரோடு விட்டிருக்க மாட்டான். 'தாதுசேன மன்னன் மகளாய் இருந்தாலும் இன்று நீ என் மனைவி. கணவனின் சுக துன்பங்களில் ஒன்ருகப் பங்கெடுக்க வேண்டியவள். ஒரு சாதாரணப் பெண்ணுக்கு இருக்கும் இதய உணர்ச்சிகூட மன்னன் மகளாகிய உனக்கு இல்லை!'

வசபனுடைய வார்த்தைகளை இடைமறித்து அவள் பேசிக் கொண்டே போனுள். மன்னன் மகள் என்ற மமதை அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் அப்பட்டமாகத் தெரிந்தது. 'மரகதக் கல்லை வைக்க வேண்டிய இடத்தில் மண்ணுங் கட்டியை வைத்தால்...' என்றுசொல்லியபடி அவள் அறையைவிட்டு வெளியே போனுள்.

'மண்ணுங்கட்டியை மரகதக் கல்லென்று மயங்கியவன் நான் தான். நீ அல்ல' என்று அவன் கூறிய கடைசி வார்த்தைகள் அவள் காதுகளில் இலேசாகவே விழுந்தன. அணிகள் கலகலக்க அவள் வேகமாக நடந்தாள். அவளுடைய கோபத்தின் வேகம் எதிரேவந்த வேலைக்காரியின் கன்னத்தைச் சிவக்கச் செய்தும் பூச்சட்டிகளை நொறுக்கித் தள்ளியும் அடங்கவில்லை.

பால் நிலவில் அநுராதபுரி தேஜோமயமாக ஜொலித்தது. வெள்ளித் தகடுகளை உருக்கி வார்த்ததுபோல் வானுயர்ந்த கட்டடங்கள் காட்சியளித்தன. அழகிய சித்திர வேலைப்பாடுகளோடு கூடிய கட்டடங்களின்மீது படிந்து சென்றுகொண்டிருந்தமேகக் கூட்டச்கள் ஏதோ பரம இரகசியங்களைச் சொல்வனபோல் தோன்றின. நகரின் ஒதுங்குப் புறமா

யுள்ள உல்லாச விடுதிகளில் ஒன்றில் யாழின் மெல்லிய ஒலி எழுந்துகொண்டிருந்தது. அந்த வீட்டின் சொந்தக்காரி அநுராதபுரத்தின் அழகின் சன்னிதானம். விழியாலே மொழி பேசும் அந்தச் சித்திரப் பாவையின் சிங்காரச் சிரிப்புக்கு ஏங்கிக் கிடந்தோர் பலர். காதுவரை நீண்டிருந்த கயல்கண்களும் யானைத் தந்தத்தால் கடைந்தெடுத்தது போன்ற வாளிப்பான உருவமும், சிறுத்த இடையும், பின்னல் சடையும் கொண்டு விளங்கிய அந்த அழகின் தெய்வத்தை அடைய ஆசைக் கனவு கண்டோர் அநுராதபுரியில் ஆயிரக்கணக்கானோர். ஆனால் அவளை அடையும் அதிர்ஷ்டம் கிடைத்த பாக்கியசாலி காசியப்பன் ஒருவனே. தாதுசேன மகாராசனின் மகன். தளபதி வசபனின் அருமை மைத்துனன்.

மலர்கள் சொரியும் பூங்காவில் பட்டு மெத்தையில் பன்னீர் வாடையில் இப்படிக் கனவு உலகிலே அவன் மிதந்துகொண்டிருந்தான் நித்திரைக்கும் விழிப்புக்கும் இடையில் உள்ள ஒருவித மோன நேரத்தில் அவன் இன்பக் காதல் அரசியின் எழில் ஈடும் இணையுமற்றதாக அவனுக்குத் தெரிந்தது.

உருண்டு திரண்டிருந்த மார்பகத்தை மறைத்துக் கட்டிய கச்சையின்மேல் கிடந்த மெல்லிய மஸ்லின் பட்டுத்துண்டு கீழே சரிய பழரசத்தை ஏந்திய கிண்ணத்துடன் அவன் அருகில் நெருங்கினாள் அவள். அவன் இந்த உலகத்தையே மறந்து நின்றுகொண்டிருந்தான்.

உதய சூரியனின் வரவைக் காலைச் சேவல் கூவிக்காட்டியது. 'அன்பே! நம் இன்ப வாழ்வின் எதிரி வருகிறான். இருள் கவிந்ததும் உன் காலடிக்கே ஓடி வந்துவிடுகிறேன். எங்கே எனக்கு...' தழுதழுத்த குரலில் காசியப்பன் விடை கேட்டான்.

தன் உடம்பை ஒய்யாரமாக நெளித்த வண்ணம், 'இன்னும் எத்தனை நாளுக்கு இந்த ஏழையின் இருப்பிடத்தை நாடி வருவீர்கள்? அநுராதபுரியின் மணிமகுடம் தங்கள் தலைமீது அமர்த்தப்பட்டதும் என் நினைவு உங்களுக்கு எப்படி வரும்?' என்று குழைவோடு கூறினாள் அவள்.

அவன் அவளை எட்டிப் பிடித்தான். அவள் துவண்டு கொண்டிருந்தாள். குலைந்து கிடந்த அவள் கூந்தலை வருடிக் கொண்டே 'உன்னை மறப்பதா?' அது என் வாழ்க்கையில் ஒரு தடவைதான் சம்பவிக்க முடியும்!'

'எப்போதென்று நான் அறியலாமா?' என்று மெல்லிய தன் கரங்களால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

அவளுடைய கன்னத்தை லேசாகத் தட்டியபடி, 'அது என் மரணத்தின் போதுதான் கண்ணே' என்று கனிவோடு சொன்னான் காசியப்பன்.

'மிகவும் களைப்பாயிருக்கிறீர்கள். இதோ உணவு கொண்டு வருகிறேன்' என்ற வண்ணம் எழுந்து உள்ளறைக்கு ஓடினாள், அவளுடைய பின்னழகைப் பார்த்துச் சொக்கிப்போன காசியப்பன் நீண்டதோர் பெருமூச்சுவிட்டான்.

'அநுராதபுர மணிமகுடம் எனக்கெங்கே கிடைக்கப் போகிறது? பட்டத்து ராணியின் மகன் முகலாயன் இருக்கிறான் நான் ஆசை நாயகிக்குப் பிறந்தவன். மூத்தவனாக இருந்தால்.. சே சே, நடக்க முடியாத பேராசை என்றோ ஒரு நாள் விளையாட்டாகச் சொன்னதை இவள் தனக்குள்......! இப்படியெல்லாம் காசியப்பன் எண்ணினான். அந்த

நேரத்தில், ''காசியப்பா தைரியத்தை இழக்காதே. அநுராதபுரத்துச் 'செங்கோலுக்கு அதிபன் நீயேதான். என்னை நம்பு' என்ற வசபனின் அழுத்தமான வார்த்தைகள் அவன் எண்ணத்தில் மின்னல்போல் பளிச்சிட்டன.

* * *

'வசபா! என் மனதில் ஆசைக் கனவுகளை எழுப்பாதே. பட்டத்து ராணியின் மகன் இருக்க நான் மன்னனுவது எப்படி? எல்லாம் பகல் கனவு!' காசியப்பனுடைய உதட்டில் இருந்து இவ் வார்த்தைகள் வெளிவந்தனவே தவிர உள்ளத்தின் அடித்தளத்தில் மன்னனுகவேண்டுமென்னும் ஆசை வளர்ந்து கொண்டிருந்தது. இதை வசபன் நன்ருகத் தெரிந்துகொண்டான். இலேசாகச் சிரித்துக்கொண்டு, 'காசியப்பா, அநுராதபுரி மணிமுடி உனக்கே உரியதென்று முதலில் முடிவு செய்துகொள், வாழ்க்கை பஞ்சு மெத்தையிலே ஒருகணம் துயில்வதல்ல.நமது வாழ்நாள் பூராவும் குறையாத இன்பத்தை அனுபவிக்கும் பாதையை நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். உன் வாழ்க்கையின் லட்சியமாக அனுராதபுரி மணிமுடியை வைத்துக் கொள். அதைப் பெற்றுத்தரும் பெரும் பொறுப்பு என்னைச்சார்ந்தது' என்ருன் வசபன்.

'காசியப்பனின் நடைபெருத திட்டங்களில் இதுவுமொன்ரு?' என்று சோர்ந்த வண்ணம் காசியப்பன் கேட்டான்.

'திட்டம் தயாரிப்பதுதான் சிரமம். அதைச் சாதிப்பது அவ்வளவு சிரமமானது அல்ல.' வசபனுடைய பேச்சில் வர, வர உறுதி வலுத்துக்கொண்டே போனது.

அரசிருக்கையின் மகத்துவத்தை அள்ளிக்கொட்டிக் காசியப்பனை அபிஷேகம் செய்துகொண்டிருந்தான் வசபன். காசியப்பனின் கண்ணுக்கு முன் ஒரு கற்பனை உலகம் மலர்ந்தது. அற்புத யாழின் நரம்புகளிலிருந்து சுகானந்தமான இசை ஒலி எழுந்து அவனைக் குண்டுகட்டாகத் தூக்கி எங்கோ இன்ப உலகுக்குக் கொண்டு சென்றது. சித்திர வேலைப்பாடமைந்த சிங்கார மண்டபத்திலே செங்கோலும் கையுமாகக் காசியப்பன் வீற்றிருக்கிருன். ஆயிரக்கணக்கான வாலைக் குமரிகள் தாளத்திற்கு ஏற்றபடி ஆடிக்கொண்டிருக்கிருர்கள். கவிவாணர்கள் அவனைத் துதிபாடிக் கொண்டிருக்கிருர்கள்.

அதிலே பாய்ந்து திளைத்துப் போயிருந்த காசியப்பனை 'உன் முடிவு என்ன?' இத்தனை போக பாக்கியங்களையும் இழக்கப்போகிருயா?' என்று கேட்ட வசபனின் உறுதியான குரல் மீண்டும் மண்ணுலகுக்குக் கொண்டு வந்தது.

தொடர்ந்து வசபன் பேசிக் கொண்டே போனுன். 'காசியப்பா, உலக சரித்திர ஏடுகள் தரும் செய்திகள் உனக்குத் தெரியாது. மண்டலாதிபதிகள் வீற்றிருந்த சிம்மாசனங்களில் மண்ணை உழும் உழவன் ஏறியிருக்கிருன். வாள் முனைக்கு அஞ்சாத மாபெரும் வீரர்களை ஓர் மலர்ச் சிரிப்பால் மடக்கித் தன் காலடியில் கிடத்தி அரசிருக்கை ஏறிய பெண்களை உனக்குத் தெரியாது. ஆட்சியை அபகரிக்க, அதன்பலாபலன்களை அனுபவிக்கத் தகப்பனை மகன் கொன்றிருக்கிருன். மகனுக்குத் தாய் நஞ்சூட்டியிருக்கிருள். அரசியல் பாஷையிலே இவற்றிற்குப் பெயர் ராஜ தந்திரம். சரித்திர ஏடுகள் அத்தகைய் செயல்கள் புரிந்தவர்களை வீரர்கள், தியாகிகள், சரித்திரத்தை மாற்றியமைத்த தீரர்கள், இவை எல்லாவற்றிற்கும் மேலாக ராஜ தந்திரிகள் என்று வானளாவப் புகழ்கின்றன'.

'என்றாலும்.........' காசியப்பன் தடுமாறினான். அவனுடைய பலவீனத்தை நன்கு அறிந்துகொண்ட வசபன் 'தந்தை என்று தயங்குகிறாயா? தந்தை மேல் உனக்கு இருக்கும் பாசம் ஏன் உன்மீது தந்தைக்கு இருக்க முடியாது. மூத்த மகன் நீ முடி உனக்கே உரியது சட்டப்படி. ஆனால் அங்கே சதி. சதியைச் சதியாலே சாகடிப்போம்'. என்று கூறிக் கைகளைக் காசியப்பன் முன்னால் நீட்டினான் தளபதி வசபன்.

'ஆம் வசபா..... நான் தயார்' என்ற வண்ணம் வசபனின் கை மேல் கை வைத்து உறுதியளித்தான் காசியப்பன்.

வசபனின் அகமும், முகமும் மலர்ந்தன. 'தாதுசேனா! உன் அந்திமச் சடங்கின் ஆரம்ப விழாத் தொடங்கி விட்டது. என் கையில் காசியப்பன். உனக்கெதிராக உன் மகனையே நிறுத்துகிறேன்.' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்

அன்று விசாக தினம். அனுராதபுரம் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. மலர்களின் நறுமணவாடை ஊதுவத்திகளின் சுகந்த மணம், ஆலய மணிகளின் ஓசை, ஆட்டக்காரர்களின் சதங்கை ஒலி, மத்தளங்கள், மேளங்கள் ஆகியவற்றின் பேரொலி இவைகள் எல்லாவற்றையும் கடந்து, ஒரு படி மிஞ்சி,

புத்தம் சரணங் கச்சாமி

தம்மன் சரணங் கச்சாமி

சங்கம் சரணங் கச்சாமி

என்ற மந்திர ஒலி எழுந்துகொண்டிருந்தது. அருளும், அன்பும் தவழும் முகத்தோடு கூடிய மஞ்சள் உடை தரித்த புத்த பிக்குகள் மந்திரங்களைச் செபித்துக்கொண்டு வந்தனர். பிரம்மாண்டமான அந்த ஊர்வலம் இராச வீதியிலே வந்துகொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான யானைகளும், ஆயிரக் கணக்கான வெள்ளைக் குதிரைகளும், லட்சக்கணக்கான வீரர்களும் திரண்டு வந்த ஊர்வலத்தின் மத்தியில் மத்த கஜம் ஒன்றின்மீது தாதுசேன மகாராஜன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். முதுமைக் கோடிட்ட அவனுடைய முகத்தில் வயோதிகம் அங்கும், இங்கும் தெரியக்கூடியதாக இருந்தாலும் அவன் உட்கார்ந்திருந்த கம்பீரத்தில் இருபது வயது மதிக்கக்கூடிய இளைஞனாகத் தோற்றமளித்தான். ஊர்வலம் வசந்த மண்டபத்தை அடைந்தது. வழக்கமாக நடைபெறும் ஆடல்கள், பாடல்கள் முடிந்து அவர், அவர் தங்கள், தங்கள் விடுதிக்குச் சென்றுவிட்டார்கள். மேல்மாடியில் நின்றபடி அனுராதபுர நகரின் அழகை அள்ளிப் பருகிக் கொண்டிருந்தான் தாதுசேனன்.

அந்தச் சமயத்தில் சிரித்து மகிழ்ந்தபடி காசியப்பனும், வசபனும் அங்கு வந்தார்கள். சில நிமிஷநேரம் அன்று நடைபெற்ற விசாக பண்டிகைபற்றி இருவரும் பேசினார்கள் தாதுசேனன் தன்னைக் கவனிக்காத சமயம்பார்த்து வசபன் கண்களால் காசியப்பனுக்கு வந்த காரியத்தை நினைவூட்டினான்.

'இங்கு இரகசிய சுரங்க வழியொன்றுஇருக்கிறதாமே அதைப் பார்க்க வேண்டுமே அப்பா......' என்று காசியப்பன் கொஞ்சலாகக் கேட்டான். தனக்கெதிராக நடைபெறும் சதியைத் தெரிந்து கொள்ளச் சக்தியற்ற தாதுசேனன் தன் மைந்தனுடைய தோளின்மீது கை போட்டபடி சுரங்க வழியைக் காண்பிக்க அழைத்துப் போனான். சுரங்க வழியின் கதவைத் திறந்து இரண்டு படிகள் இறங்கிய போது தான் தாதுசேனன் சதியில் தான் சிக்கிக்கொண்டதை அறிந்தான்.

கண் வெட்டி மூடும் நேரத்துக்கிடையில் சுரங்க வழியின் பாரமான கதவுகள் படீர் என்று சாத்தப்பட்டன. வெளியில் காசியப்பனும், வசபனும் 'ஹஹ்ஹா!' என்று உரத்துச் சிரித்தார்கள். தாது சேனன் தனது பலவீனமான கைகளால் கதவைத் தட்டி தட்டி அலுத்து சுரங்கப் படிகளில் தடாரென்று விழுந்து உருண்டான்.

அரச கருமங்களுக்கு இப்போது காசியப்பனே தலைமை வகித்தான். தன் சதியைப் பொதுமக்கள் அறியாதிருக்க ஈழம் பூராவும் தாது சேனனைக் கண்டுபிடிக்க இரகசியப் படை வீரர்களை அனுப்பினான். அவனை வசபன் நன்றாக ஆட்டிவைத்தான். அவன் இட்டதே சட்டம். அவனுக்கு வேண்டியவர்களுக்கு அமைச்சிலே இடம். வேண்டாதவர்களுக்கு தூக்கு மேடையிலே வரவேற்பு. தன்னுடைய கொலைக்காண்டத்தை மறைக்க அரச மாளிகையை ஈழத்தின் அழகு சுந்தரிகளால் அலங்கரித்து வைத்திருந்தான் வசபன்.

இப்போது தாது சேன மன்னனுடைய நாமமே அனுராத புரத்தில் மறைந்துகொண்டு வந்தது. வசபன் இந்தச் சமயத்தில் தாது சேனனைத் தொலைத்துவிட முடிவு செய்துகொண்டு கிளம்பினான். சுரங்க வழியின் கதவைத் திறந்து கொண்டு காசியப்பனும், வசபனும் தாது சேனனை நோக்கிச் சென்றார்கள். வயோதிகத்தால் தளர்ந்துபோன தாது சேனன் வேதனையில் அடியோடு குன்றிப் போனான். பகலும், இரவுமாக இருள் கவிழ்ந்து கிடந்த அந்த அறையைப் பார்த்துப் பார்த்து அவனுடைய கண்கள் ஒளியை இழந்து விட்டன. கூட்டில் அடைக்கப்பட்ட கிழச் சிங்கம் போல் அவன் சுருண்டு கிடந்தான். அவன் கிடந்த நிலையைக் கண்டதும் காசியப்பனுடைய மனத்தில் இரக்கம் சுரந்தது. அதை வளரவிடாமல் தடுத்து முற்றுப்புள்ளி வைத்தான் வசபன்.

'மைந்தா! இது உனக்கு மகிழ்ச்சியளிக்கிறதா?' தாது சேனன் நாத் தழுதழுக்கக் காசியப்பனைக் கேட்டான். அந்த வார்த்தைகள் காசியப்பனை ஒரு உலுக்கு உலுக்கின. அவன் தலை தானாகவே பூமியை நோக்கிக் கவிழ்ந்தது.

வசபன் உரத்துச் சிரித்தான். 'காசியப்பா ஏன் யோசிக்கிறாய்? கோழைகள் உலகில் வாழ முடியாது இத்தனை காலமும் நாம் நடத்திய இரகசிய வேலைகள் இந்த நாட்டின் மணிமுடியை உனது தலையிலே அணிவிக்க. தடுமாற்றம் தற்குறிகளினுடையது. வந்த காரியத்தை நினைத்துக் கொள்'.

காசியப்பன் தன்னை மறந்து கத்தினான் 'இதுதான் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இப்போதாவது சொல்லுங்கள், அனுராத புரத்தின் மணிமகுடம் யாருக்குரியது?'.

'நான் சொல்லாமலே அது உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே'

'உங்கள் முடிவான தீர்மானம் அதுதானா?' 'அது என் தீர்மானம் அல்ல நாட்டு மக்களின் முடிவு. சந்ததி சந்ததியாக நிலவி வந்த சட்டம்'.

'சட்டம் ஹஹ்ஹா!' வசபன் உரத்துச் சிரித்தான். 'தாங்கள்வாழ, தங்கள் சந்ததியார் தலைமுறை, தலைமுறையாகச் சுகம் அனுபவிக்கச் சில சண்டாளர்கள் ஏற்படுத்திக்கொண்ட சதி'.

துரோகிகளும், சோம்பேறிகளும் உண்டாக்கிய துரோகத்தின் சின்னம். இதை வைத்துக் கொண்டு மனித உள்ளத்தையே கொலை செய்வதா? உமது உரத்திலே ஜெனித்த மகன் இதோ

நிற்கிறான். இந்நாட்டு மக்களின் மதிப்புக்குப் பெரிதும் பாத்திர மானவன். அவனுக்கு முடியை அளிப்பதில் உமது சட்டம் குறுக்கே நிற்கிறது. அந்தச் சட்டத்தைச் சிதைத்துவிட்டுச் செயலாற்றுவதுதான் மனித உள்ளம் படைத்தவர்களின் கடமை.'

தாது சேனன் அலட்சியமாகச் சிரித்தான். அச் சிரிப்பு வசபனைக் கொடிய மிருகங்களை விடக் கேவல நிலைக்குக் கொண்டுவந்தது.

'வேண்டாம். அரசுரிமையை நீ முகலாயனுக்கே கொடுத்துவிடு. அதே சமயத்தில் நீ தேடி வைத்துள்ள திரவியக் குவியல்களையாவது காசியப்பனுக்குக் கொடுத்துவிடு!'. என்றான்.

'வசபா! காசியப்பனை நன்றாக வசப்படுத்திவிட்டாய். அவனைப் பெட்டிப் பாம்பைப்போல் உன் சொல்லுக்கு ஆடும்படி பழக்கிவிட்டாய்' என்றான். வார்த்தைகள் முடியுமுன்பே பலம் வாய்ந்த வசபனுடைய வலது கை தாது சேனனுடைய கன்னத்தில் பளீரென்று விழுந்தது.

அதைக் காசியப்பன் பார்த்து சகிக்காதவனாய் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான். எலும்புகள் கிளம்பிய முகத்தைத் தடவிக்கொண்டே 'என்னை அழைத்துப் போங்கள். என் திரவியக் குவியல்களை காட்டுகிறேன்' என்றான் அரசன் தாது சேனன்.

நடக்கவும் சக்தியற்று இருந்த மன்னன் தாது சேனன் மெள்ள, மெள்ள அடியெடுத்து சுரங்க அறையை விட்டு வெளியே வந்தான். தாது சேனன் பல்லக்கில் ஏற்றப்பட்டான். இருமருங்கிலும் காசியப்பனும், வசபனும் குதிரைமீது போய்க்கொண்டிருந்தார்கள். ஆகாயத்தில் பால் நிலவு பொழிந்துகொண்டிருந்தது தூரத்தில் ஊளையிடும் இரண்டொரு நரிகளின் சத்தம் இலேசாகக் காதுகளிலே விழுந்தன. அந்த அகால வேளையில் தன் கரையருகில் வந்து நின்ற மனித உருவங்களைப் பார்த்துக் காலவீபாவின் மெல்லிய அலைகள் கரையோடு ஏதோ இரகசியம் பேசின. குதிரைமீதிருந்து கீழே குதித்துப் பல்லக்கின் கதவை வசபன் திறந்துவிட்டான். சுருங்கிப்போன கண்ணிமைகளை அகல விரித்து காலவீபாவைப் பார்த்தபடி தாது சேனன் நின்றான். அவனுடைய கண்களிலே ஆனந்தம் பொங்கி வழிந்தது. 'பாருங்கள் என் செல்வக் குவியலை. அள்ள அள்ளக் குறையாத அரும் நிதியைப் பாருங்கள். ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் லட்சோப லட்சம் மக்கள் வேண்டியளவு அள்ளிக் கொண்டு போனாலும் குறையாத திரவியத்தைப் பாருங்கள், பாருங்கள்!' என்று தாது சேனன் உணர்ச்சியில் உந்தப்பட்டுக் கூறினான் அமைதியான அந்த வேளையிலே எழுந்த அவனுடைய உணர்ச்சிகரமான குரல் வானோங்கிய மரங்களிலே மோதி அந்தக் காடு முழுவதும் எதிரொலித்தது.

தாதுசேனனுடைய வார்த்தைகள் காசியப்பனைத் தாக்கிச் சித்திரவதை செய்தன. 'தந்தையே! இதுதான் நான் உங்களை அழைக்கும் கடைசிக் குரலாக இருக்கப் போகிறது. வீணான பழியை மௌரிய வம்சத்துக்குஏற்படுத்த வேண்டாம் கடைசியாகக் கேட்கிறேன். உம்முடைய ஆயுள்பூராவும் திரட்டிய செல்வங்கள் எங்கே சொல்லுங்கள்?' காசியப்பனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுளீர் சுளீர் என்று தாது சேனனைத் தாக்கின. அவன் தன்னை மறந்து காலவீபாவைக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டு நின்றான். அவனுடைய மௌனம் காசியப்பனுடைய மனத்தில் மின்னிக்கொண்டிருந்த கடைசிப் பாசத்தையும் அடித்து விரட்டியது.

‘வசபா! என்னால் இங்கு நிற்க முடியவில்லை. அனுராதபுரத்தின் அரசன் நான் இதோ உன் முன் நிற்கும் குற்றவாளி ஒரு நாட்டின் மன்னனையே அவமதிக்கிறான். உனக்கு இஷ்டமான தண்டனையைக் கொடு. இந்நாட்டின் உண்மை ராஜ விசுவாசிகளின் இடத்தில் உனக்குரிய பங்கைப் பெற்றுக்கொள்’ என்று கூறியபடி குதிரைமீது தாவிக் காற்றாய்ப் பறந்தான் காசியப்பன்.

வசபன் படமெடுத்தாடும் கொடிய விஷப் பாம்பைப் போல் நின்றுகொண்டிருந்தான் அவனைப் பார்க்கவே சக்தியற்றுப் போன தாதுசேனன் நிலத்தைத நோக்கித் தலை கவிழ்ந்தான்.

‘வசபா! எங்கோ மூலையில் கிடந்த உன்னை முன்னணிக்குக் கொண்டு வந்தேன். போரிலே நீ காட்டிய சாகசத்தினால் மயங்கி இந்நாட்டின் தளபதியாக உன்னை நியமித்ததுமல்லாமல் என் மகளையே உனக்குத் திருமணம் செய்து வைத்தேன். அதற்குத் தகுந்த தண்டனையா இது?’

‘இல்லை; அதற்கில்லை. என்னைப் பெற்று வளர்த்த தாயை நெருப்பில் இட்டுக் கொன்றாயே, அதற்குரிய தண்டனை. ஆம் பழிக்குப் பழி! கொதிக்கும் எரிமலையான என் உள்ளம் உம் கொலையினாலேயே குளிர் தென்றலாக மாறும்.

‘சட்டத்தைக் கையிலேயே வைத்துக்கொண்டு என் தாயைப் பதைபதைக்கக் கொன்றாய். இன்று அதே சட்டத்தை வைத்து உன்னைக் கொலை செய்யப் போகிறேன்’.

வசபனுடைய கண்கள் பசியெடுத்த வேங்கையின் விழிகளைப் போல் சுழன்றன. தாது சேனன் தன் தவறை அப்போதுதான் எண்ணி வருத்தப்பட்டான். அவனுடைய விழிகள் கண்ணீர் உகுத்தன, அவை வசபனுடைய பார்வையினால் ஓர் நொடிக்குள் தீர்ந்துபோயின.

காலவீபாவின் கரைச் சுவரிலே தாது சேனனைக் கிடத்திக் கல்லும் சாந்தும் பூசிச் சுவர் எழுப்பினான் வசபன். தன் வாழ் நாள் பூராவும் சேகரித்ததிரவியத்தைக் கொண்டு அவன் எழுப்பிய காலவீபாக் குளத்தின் கட்டுகளுக்கே அணையாகிற்று அவன் உடல். தாது சேனனுடைய வாழ்க்கைக் கனவு வெற்றி பெற்றது, வசபனின் இந்தச்செய்கையால். அதே நேரத்தில் வசபனுடைய குறிக்கோளும் வெற்றி பெற்றது. ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கழிந்தும் தாது சேனன் கட்டி யெழுப்பிய காலபவா இன்னும் ஈழத்து மக்களுக்கு நீரளித்து நெற்களஞ்சியங்கள் உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

—கல்கி 1950—

‘தாமரைத் தண்டைத் தேடி இரவிலே குளத்திற் திரியும் அன்னம் அங்கே தாரகையின் பிரதிபிம்பத்தைக் கண்டு ஏமாற்றமடைகிறது; அதனால் அங்கே கிடைக்கும் வெள்ளைத் தாமரைத் தண்டைத் தாரகையின் சாயல் என எண்ணிப் பகலிலும் தின்ன மறுக்கிறது. வஞ்சகரால் ஏமாற்றப்பட்டவர்கள் உண்மையிலும் பொய்யையே காண்பர்’.

—இதோபதேசம்.

# அவள் நினைவு

இன்பம் உலகில் நிறைந்ததென்பர்—அதை
எங்கு பெறுவதென் றேங்கி நின்றேன்;—அந்தத்
துன்ப நினைவிற் சுகமிழந்து—வெறும்
சொப்பன வாழ்வில் திளைத்திருந்தேன்;—அன்று
அன்பன் ஒருவன் அருகிருந்து—மஞ்சள்
ஆரம் கழுத்தில் அணிந்து விட்டான்;—அந்த
இன்பத் திருநாள் இடையிடையே—வந்து
என்னைக் கிளுகிளுப் பாக்குதடி—தளிர்

0 0 0

தோளினைத் தொட்டுச் சுருள்குழலில்—விரல்
சுற்றிச் சுற்றியதைச் சுண்டிடுவான்;—அவன்
தாழில் மயங்கித் தவம் கிடப்பேன்—பக்கம்
தாவியணைத்துக் 'குசு குசு'ப்பான்;—எந்தன்
வாழ்வில் அவனை மறக்க வொணாப்—பல
மாயக் குறும்புகள் செய்திடுவான்;—நெடு
நாளில் பழகிய தேவதையாய்—எந்தன்
நெஞ்சிற் சுடராய் நிலைத்துவிட்டான்,—தென்னங்

0 0 0

கீற்றைப் பிளக்கும் நிறைமதியும்—அவன்
கீழைத் தொடுவான் கிளர் கதிரோன்;—பசும்
சேற்றில் முளைத்த திரு மலரோன்—மனத்
தேனில் விளைந்த சுவை அமுதோன்;—கவி
ஊற்றில் தெளிந்த உயர் பொருளோன்—எந்தன்
ஊனில் கலந்த உயிர்; இறையோன்—வேறு
மாற்றம் அறிய மருந்தும் இல்லை—அந்த
மாயம் புரிய வகையும் இல்லை;—மலர்க்

0 0 0

கன்னக் கதப்பைச் சிவக்க வைப்பான்—புதுக்
கள்ளைக் குடித்த வெறி யிதென்பான்;—இழை
மின்னல் இடையில் விரல் வருடிச்—சுக
வீணை நரம்பையே மீட்டிடுவான்;—நெடும்
பின்னல் நுனியைப் பிடித் திழுப்பான்—வெறும்
பித்தனைப் போலக் கவி படிப்பான்;—இரு
கண்ணோடு கண்ணைக் கலக்க வைப்பான்—புதுக்
காவியச் சோலைக்கு அழைத்துச் செல்வான்;—காதல்

0 0 0

கள்ளன் அவனென் கடவுளடி—சுவைக்
காந்தம் நிறைந்த கலைஞனடி;—மலைப்
பள்ளம் படுக்கை நிறைந்து வரும்—புனற்
பாய்ச்சல் அவன் தரும் இன்பமடி;—அவன்
உள்ளம் கலந்த உயர் கடலே—இந்த
உண்மை அறிந்தோர் மிகக் சிலரே;—அவன்
தெள்ளிய காதல் தரும் சுகமே—இவள்
தேடிய வாழ்வின் நிறை சுகமே!

**பாண்டியூரன்**

# கறை

'செங்கை ஆழியான்'

அம்மாதான் யாருக்கோ கூறிக்கொண்டிருந்தாள்: 'இந்தப் பெட்டையின்ரை தலைவிதியை நினைக்கேக்கை பெரிய வேதனையாயிருக்கு! நேற்றையோடை மூண்டாவது...! அவன்களுக்கும் இந்த ஊர்ச்சனம் கல்லுக் குத்திவிட்டது!... ஒருத்தி ஒருத்தனை விரும்புகிற தில்லையே? அவன் ஒருத்தன் ஏமாற்றிப் போட்டான் எண்டதுக்காக, அவள் பெட்டை வாழுகிறதில்லையே? அதை இந்த அறுந்த சனங்கள் கண் காது வைச்சுக் கதைத்து ஒன்றைப் பத்தாக்கிப்பேசி, வாற சடங்கெல்லாத்தையும் கெடுத்து வைக்கிறதினாலே என்ன பயனோ? '

என் காதுப் பறைகளில் இவை மோதத்தான் செய்தன; இருப்புக்கொள்ளாது தவித்தேன்.

'நேற்றையோடை மூண்டாவது ?'

உண்மைதான், அவளைப் பெண் பார்க்க வந்து, பின் ஊர்ச்சனங்களின் 'கல்லுக் குத்தலா'ல் வேண்டாமென மறுத்தவர்களில் மூன்றாமவர்கள். பாவம், பார்வதி; எவ்வளவோ ஆசைத் துடிப்புகளை மனதிலே வைத்துக்கொண்டு, பெண் பார்க்கவந்த மாப்பிள்ளை வீட்டாரின் மனதைக் கவரக் கூடிய விதமாக அலங்கரித்துக்கொண்டு முன்வருவாள். அப்படி வந்தும் பயனென்ன—

அவள் அழகில் பிழையில்லை; கவரக்கூடிய அழகுடையவள். அவளைப் பார்க்க வந்தவர்கள் போகும்போது முழுச் சம்மதத்தையும் தெரிவித்துவிட்டே போனார்கள். ஆனால், பின் ஊர்ச்சனத்தின் வாயினால் வேண்டாமென்று மறுத்துவிட்டார்கள்; பின் மறுக்க மாட்டார்களா...?

'நீங்கள் இதிலை ஒன்றை நல்லாக் கவனிக்க வேண்டும்! சாதி சனத்திலே குறைசொல்ல முடியாது! நீங்க தேடிவந்து விசாரிக்கிறதாலை, ஒன்றைச் சொல்லாமல் விடுவது நல்லதல்ல! அவள் அதுதான்...அந்தப் பார்வதி முன்பு ... ஒரு ஆறுமாதத்துக்கு முதல்...யாரோ ஒரு பொடியனோடை தொடர்பு வைத்திருந்தவள்! காகிதங்கள்கூட எழுதினவள் எண்டு கேள்வி...!'

இப்படி ஊர்ச்சனம் கூறுவதைக் கேட்டபின் பார்வதி கன்னி கழிவாளா?

பார்வதியை நினைத்தபோது எனக்கும் பெரிய வேதனையாகத்தான் இருந்தது; என் அம்மாவிற்கு மட்டுந்தானா வேதனை ? பார்வதியைப் பெற்றவர்கள் எவ்வளவு வருந்துவார்கள் ?

'தம்பி! என் பார்வதிக்கு வாழ்வே கிடையாதா? '

'அப்படியெல்லாம் கூறாதீர்கள், மாமி! பார்வதியின் தங்கமான குணத்திற்கு ஒருவன் வராமலா போகப் போகின்றான்..?' நான் பார்வதியைப் பெற்றவளுக்கு ஆறுதல் கூறினேன்.

'எனக்குப் பிறந்தவள் இப்படி ஒரு எண்ணம் கொண்டாளே? சாமத்தியப்பட்டபிறகு பொம் பிளயளைப் படிக்க விடக்கூடாது என்று இவருக்கு எவ்வளவோ கூறினேன் கேட்டாரா ? அவ ளின்ரை எண்ணத்திற்குப் படிக்க விட்டதாலேதான் . அவள் ஒருவ னுக்குக் கடிதமும் எழுதி, ஏமா ந்துபோய் நிற்கிருள் ? 'மாமி கண்ணீர் விடுவதைக் காண என் ஞல் சகிக்க முடியவில்லை.

'ஒன்றுக்கும் கவலைப்படாதீர் கள், மாமி! எல்லாம் நல்லவித மாக நடக்கும்!...'

நான் படலையை நோக்கி நடந் தேன்; படலையை அடைந்த நான் ஏதோ ஒருவிதஉந்தலால் திரும்பி வீட்டைப் பார்த்தேன்.

யன்னலிற்குள்ளால் பார்வதி யின் உருவம் தெரிந்தது; தலை மயிரைப் பின்னி, இரண்டாகத் தூக்கி மடித்துக் கட்டியிருப்பா ளே ? தலைமயிர்க் கற்றை காற் றிலேஊசலாடுகிறது. முகத்தைப் பளிங்குபோலக் கழுவிப் பெரி தாகப் பொட்டிட்டிருப்பாளே? முகம் கறுத்துக் களையிழந்து காண ப்படுகிறது. 'ஹெஸ்சிங்கவுண்' அணிந்திருந்தாள் அதுகூட மாற் றிப் பல நாட்களாகின்றன என் பதைப் பறைசாற்றியது, என் னிதயம்.

'நானேன் அவளைப் பார்க் கிறேன்?...'

நான் படலையில் நின்று அவளைப் பார்ப்பதை அவள் கண்டுகொண் டாள்; யன்னல் அருகில் வந்தாள்; யன்னல் கம்பிகளைக் கரங்களாற் பிடித்துக்கொண்டு என்னைப் பார் த்தாள்.

அவள் கரமொன்று கண்களைத் துடைத்ததை நான் கண்டேன்; மறுகணம் என்மீது ஒரு பார்வை யை வீசிவிட்டு, வெடித்துவரும் அழுகையை மறைக்க வேகமாக உள்ளே ஓடிவிட்டாள்.

அந்தப் பார்வை—?

'ஐயோ, பார்வதி!'

என் உள்ளம் ஓலமிட்டது; அப் பார்வை கூறவேண்டியவற்றை எல்லாம் கூறிவிட்டது.

'என் வாழ்வு பாழாகியதற்கு நீயும் ஒரு காரணம், என்று கூறி யதா?


'ஐயோ, பார்வதி! உன் வாழ்வு பாழாகியதற்கு நானும் ஒரு கார ணம் என்கிருயா? உண்மை உனக் குத் தெரியாது, பார்வதி! நான் செய்தது தியாகம் என்றல்லவா, நான் நினைக்கிறேன்? இல்லாவிட் டால் எனக்குச் சொந்தமாக வேண்டிய உன்னை—என் இதயத் தில் நீக்கமற நிறைந்திருந்த உன்னை — இன்னொருவனுக்குத் தாரைவார்த்துக்கொடுப்பேனு! உனக்கு நன்மை செய்வதாகவல் லவா நான் நினைத்தேன்...!

என் நினைவில் கோபி தோன்றி ஞன்; அலையலையான தலை மயிர்; வட்டமான முகம்; கறுவ லானுலும் கம்பீரமான தோற் றம்; செல்வத்தில் வளர்பவன் என்பதை அவனது உருவமும், உடைகளும் பறைசாற்றின.

அவன் என் நண்பன்; ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பில் படித்தோம்; நெருங்கிப் பழகி ஞேம். பல விஷயங்களில் அவன் என்னேடு ஒத்துவந்ததாலும், எதையும் என் எண்ணப்படியே செய்ததாலும் என் நெருங்கிய நண்பனுகிவிட்டான்.

என் சொந்தஇடம் நல்லூர்; சைக்கிலில்தான் நான் பாடசா லைக்கு வருவேன். பாடசாலை விட் டதும் நான் அரசடி வீதியால் வீட்டிற்குப் போகும் போது அவ னும் கூடவே வருவான். போகும் வழியில் எதிர்ப்படுவது மகளிர்

கல்லூரி ஒன்று. அதைக் கடந்து தான் போகவேண்டும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது—அந்தத்தினம்...



மகளிர் கல்லூரியை எங்கள் சைக்கில்கள் நெருங்கிவிட்டன.

'கோபி! அதோ பார், அந்த மரத்தடியின் கீழ் நிற்கிறாளே ஒரு பெண்...'

'யார்...தன் நீண்ட கூந்தலை இரண்டாகப் பின்னிவிட்டு...அவளா?...'

'ஆமாம்! எப்படி ஆள்...?'

அவன் என்னை ஒருவிதமாகப் பார்த்துவிட்டு அவளைப் பார்த்தான்;

'அடேய்...நானிவளை இவ்வளவு நாளும் காணவேயில்லையே? நல்ல அழகியடா!...' என வியந்தான்; 'உனக்கு அவளைத் தெரியுமா?'

'தெரியும்...!'

'ஏன் இவள் மரத்தடியில் காத்து நிற்கிறாள்?...'

'வீட்டிற்குப் போகக் கார் இன்னும் வரவில்லை! பார்த்துக்கொண்டு நிற்கிறாள்...?'

கந்தர் மடச் சந்தி வந்துவிடுகிறது; அவன் ஆனைப்பந்தி போகப் பிரிந்தான்.

'பார்வதி!'

அவள் நினைவு மீண்டும் தலை தூக்குகிறது.

'உன் வாழ்வு பாழாகக் காரணமானவர்களில் நானும் ஒருவன் தான்! அன்றுன்னை மரத்தடியில் கண்ட நான் அவனுக்கு உன்னைக் காட்டி, 'எப்படி ஆள்' என்று கேட்டு வைத்தேன்! அதன்பின்... மறுநாள் ... மறுநாள் ... அடுத்த நாள்...எல்லாம் பாடசாலைவிட்டு வரும்போது அம்மரத்தடியையும், காருக்காகக் காத்து நிற்கும் உன்னையும் அவன் பார்த்த பார்வை? என்னிதயத்தையே பிளந்தெறிந்தது, பார்வதி!...'

'உனக்கு அவளைத் தெரியுமென்றாயே, எங்கிருக்கிறது, அவள் வீடு?'—கோபி என்னிடம் கேட்டான்.

நான் என் திடுக்காட்டத்தைக் காட்டிக் கொள்ளாது வினவினேன்:

'ஏன் அதைக் கேட்கிறாய்?'

அவன் எதையோ கூற வெட்கப்பட்டான்; பின் 'என்னால் அவளை மறக்கவே முடியவில்லை! என் நினைவிலும், கனவிலும் அவள்தான்! அவளின்றி என்னால் எதுவுமே செய்ய முடியாது...!'

'அவளை அவனால் மறக்கமுடியாதாம்! என்னால் மட்டும் மறக்க முடியுமா? அவளின்றி என்னால் மட்டும் எதுவும் செய்ய முடியுமா?'

'ஏன் பேசாதிருக்கிறாய்?...'

'ஐயோ!- கோபி! அவள் என் மச்சாள்! என் இதயத்தில் குடிகொண்டுவிட்டாள்!'—என்று எப்படிக் கூறுவேன்?

'நேற்று அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள்! அதிலிருந்து அவளும் என்னை...'

என் தலையில் மரம் ஒன்று சரிந்து விட்டதா? என் வாய் என்னை அறியாமற் பிதற்றியதா?

'கோபி! அவள் என் மச்சாள்!'

அவன் என் கைகளைப் பற்றிக் கொண்டான்:

'உண்மையாகவா...? அப்படியானால் எனக்கு உதவுவாயர? அவளிடம் அவள் விருப்பைக் கேட்டு...' அவன் ஏதேதோவெல்லாம் கூறிக்கொண்டு போனான்.

'பார்வதி, நீ அவனைப் பார்த்துச் சிரித்ததாக அவன் கூறினான்!

உண்மைதானு? நீயும் அவனை விரும்புகிருயா?... நான் இடையில்...'

அதன் பின் நடந்தவை என் நினைவில் நிழலாடுகின்றன—

கோபிக்காக நான் தூதுவனுனேன்.

இருவரையும் இணைத்துவைக்கும் பாலமானேன்.

இருவரும் கடிதங்கள் பரிமாறிக் கொண்டார்கள்.

சந்தித்தார்கள்; கதைத்தார்கள்.

இவற்றைக் கண்டு முதலில் என் இதயம் வேதனையால் குமைந்தது; பின் என்னையே தேற்றிக் கொண்டேன்.

அதன்பின் இருவருடங்கள் ஓடிவிட்டன; அவனுக்கும் நல்லதோர் உத்தியோகம் கிடைத்துவிட்டது.

ஒரு நாள்—

நான் படித்துக் கொண்டிருந்த போது என் அறைக் கதவு 'படீர்' எனத்திறக்கப்பட்டது; திடுக்கிட்டுத் திரும்பினேன்;

'பார்வதி!'

அவள் தலை விரிகோலமாகக் கண்ணீரோடு நின்றிருந்தாள்.

'பார்வதி, இதென்ன? ..'

'ஐயோ, அத்தான்! நான் ஏமாந்து போனேன்!... அவரென்னை ஏமாற்றி விட்டார்...! அவர்பெற்ருேர் நல்ல சீதனத்தோடு...அவருக்கு எங்கேயோ..கொழும்பில்.. இன்று கலியாணம், அத்தான்!...'

என்னுள் பிரளயமே உருவாகி விட்டதா?

'அடபாவி!'

பார்வதி கண்ணீரோடு நின்ருள்.

நீதி கேட்க அவனைத் தேடிக் கொழும்பு சென்றேன்; அவன் மனைவியோடு என்னை வரவேற்ருன்.

படலையில் நின்றபடி யன்னலையே வெறித்துப் பார்த்தபடி நான் நிற்கிறேன்; யன்னல் சூனியமாகத் தெரிகிறது.

பார்வதியில்லை; ஆனுல், அவள் பார்வையால் என்னைச் சுட்டுவிட்டாள்!

'இனிப் பார்வதியின்வாழ்வு..?'

நேற்றுமாலை நடந்த ஒரு சம்பவம் நினைவு வருகிறது.

'பார்வதி! ' நான் அழைத்தேன்.

அவள் கண்ணீரோடு என்னைப் பார்த்தாள்.

'என்னை மன்னித்துவிடு. பார்வதி! '

'நீங்கள் என்ன தவறு செய்தீர்கள்! தவறு செய்தவள் நான், அத்தான்! இவ்வளவு ஏமாற்றங்களுக்குப்பின்பும் உயிர்வாழ்கிறேனே ?'

'பார்வதி!...'

'அத்தான்! கோழைகளைப் போலச் சாக வேண்டும், என்றெண்ணம் எனக்கில்லை! வாழவேண்டும் என்றஆசை என்னிடமிருக்கிறது! நான்செய்த ஒருதவற்றினுல் பெண் பார்க்க வந்தவர்கள் எல்லாரும் திரும்பி ஓடுகிருர்கள்! நான் எல்லோருக்கும் பாரமாக இருக்கிறேன் '

அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

'இனிப் பார்வதியின் வாழ்வு?'

'வாழ விரும்புகிருள், பார்வதி! வாழ்வளிப்பார் யார்? என்னுல் தானே பார்வதிக்கு இந்த நிலை ?'

படலையில் நின்றபடி யன்னலைப் பார்க்கிறேன்.

யன்னலில் பார்வதியில்லை.

வாசலில் நிற்கிருள் — எதை எதிர்பார்த்து?

கணப் பொழுதில் நான் செய்த முடிவு?

என் கால்கள் பார்வதியை நோக்கி நடக்கின்றன. *

# ஈழத்து இலக்கியமும் இன்றைய விமர்சனமும்

## 2

சென்ற கட்டுரையிலே இலக்கியத்தின் தன்மையைப் பற்றியும், இலக்கிய சிருட்டிக்கும் இலக்கிய விமர்சனத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பினைப் பற்றியும் சுருக்கமாகப் பார்த்தோம். இக்கட்டுரையிலே விமர்சனத்தின் தன்மைகளைச் சிறிது ஆராய்வோம். இன்றைய விமர்சன வளர்ச்சிக்கு இத்தகைய ஆராய்ச்சி பெரிதும் உதவும் என்று எண்ணுகின்றேன்.

புறநானூற்றுப் புலவர் முரஞ்சியூர்முடி நாகரிலிருந்து, புதுமைக் கவிஞர் முருகையன்வரை இலக்கிய கர்த்தாக்களையும் இலக்கியப் பிரச்சினைகளையும் தெளிவாக விளங்கிக்கொள்ளப் பலர் திக்குமுக்காடுவதைப் பார்க்கும் பொழுது விமர்சனம் உண்மையில் நமதுநாட்டில் வளர வில்லை என்பது மேலும் மேலும் உறுதிப்பட்டு விடுகிறது.




உலக இலக்கியங்களிலே, இலக்கிய விமர்சனக் கலை வளர்ந்த வரலாற்றினை உற்று நோக்கும்போது அதிலே **மூன்று** பிரதானமான படிகளைக் காணலாம். அம்மூன்று படிகளும் மூன்று பண்புகளைக் குறித்து நிற்கின்றன என்றுங் கூறலாம். இலக்கிய வளம் நிறைந்த எம்மொழிக்கும் பொருந்துவதாக இவ்வளர்ச்சி முறை அமைந்துள்ளது.

இலக்கிய விமர்சனம் தமிழிற்கு முற்றிலும் புதியது. வ. வே. சு ஐயருடைய நூல்களுக்குப் பின்னரே, அது எமது சொத்தாயிற்று என்று, இலக்கிய விமர்சனத்தின் ஆதியையும் அந்தத்தையும் கண்டு பிடித்து விட்

டவர் போலப் பாசாங்கு செய்யும் கிளிப்பிள்ளைகளும், முக்காலத்திற்கும் பொதுவான விமர்சன உண்மைகளையெல்லாம் தொல்காப்பியனாரே வரையறை செய்து விட்டார் என்று கண்ணை மட்டுமன்றிக் காதுகளையும் மூடிக் கொண்டிருக்கும் தீக்கோழிகளும் ஒருண்மையை உணரத் தவறிவிடுகின்றனர். அண்ட சராசரத்திலுள்ள அத்தனை பொருள்களைப் போலவே இலக்கிய விமர்சனத்திற்கும் தோற்றம், வளர்ச்சி முதலிய இயக்க விதிகள் பொருந்துவனவே. எனவே விமர்சனத்திலும் வளர்ச்சியும் மாற்றமுமுண்டு. அது உருவ வடிவமும், குண இயல்பும் மாறி மாறிப்பெற்றுக் கொண்டிருக்கிறது.

முதனிலையிலே, இலக்கிய விமர்சனமானது இலக்கிய சிருட்டிக்குச் சில விதிகளை விதிப்பதாகவே அமைந்து விடுகிறது. தமிழிலே இதனை விளங்கிக் கொள்வதற்கு வேண்டிய இலக்கண நூல்கள் உள்ளன. யாப்பிலக்கணமும், அணியிலக்கணமும் பொருளிலக்கணமும் புலவனுக்குக் 'கட்டளை' இடும் விமர்சன நூல்களே! ஏனெனில் செய்யுளின் மீது அக்கறையிருந்த காரணத்தினாலேதான் இலக்கணகாரர் அவ்வாறெல்லாம் பல விதிகளைக் கூறிப் போந்தனர். உதாரணமாக ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி முதலிய நாற்பாவிலும் இலக்கியம் சமைக்கலாம் எனத் தொல்காப்பியர் கூறுவது ஒரு விதியாகும், அல்லது 'ஆயிர முகத்தா னகன்றதாயினும், பாயிர மில்லது பனுவலன்றே' என்று கூறுவதும் விமர்சன விதியாகும். அல்லது நன்னூலாசிரியர் சிறப்புப் பாயிரம் செய்தற்கு உரியோர் யாவர் என்று விதிப்பதும் இப்பிரிவிற்குள்ளடங்குவதே. இந்த அடிப்படையிலேயே, அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே என்று நூலின் இலட்சியம் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்று நமது பண்டைய இலக்கிய விமர்சகர்கள் கட்டளைகள் பிறப்பித்தனர். மேனாட்டிலே இதனை (Legislative Criticism) என்பர். இலக்கிய ஆக்க விதிகள் வகுத்த அக்காலத்தவர்கள் இலக்கியம் படைப்பவனை நோக்கியே விதிகளைக் கூறினர். இவ்வுண்மையை நாம் நெஞ்சிலிருத்துதல் தகும், முன்னிலையேவலாக இவ்விதிகள் கூறப்படும் என்பர் மேனாட்டு இலக்கிய விமர்சன வரலாற்றாசிரியர் தமிழிலே ஏவல் வடிவிலும் சாதாரணமாக மகடூ முன்னிலையாகவும் யாப்பணி நூல்கள் அமைந்தமையைக்கவனிக்கலாம். பிற்காலத்திலே இத்தகைய கட்டளையிடும் விமர்சன நூல்கள் அருகின. இக்காலத்து விமர்சன நோக்கத்துடன் எவரும் இத்தகைய நூல்களை எழுதுவதில்லை, 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' 'ரேடியோ நாடகங்கள் எழுதுவதெப்படி?' 'நீங்களும் பாட்டுப் பாடலாம்' முதலிய பெயருடைய நூல்கள் ஆங்காங்கு காணப்படினும் அவை இலக்கிய கர்த்தாக்களைக் கட்டுப் படுத்துஞ் சக்தியுள்ளனவல்ல. புலவரின் புலனெறி வழக்கத்தை வழிப்படுத்த எழுந்த இலக்கண நூல்கள் காலக்கிரமத்திலே சிருட்டிகர்த்தாக்களின் தனித் திறமைகளுக்கேற்பவும், சமுதாய இயக்கங்களுக்கேற்பவும் மாறமாட்டாது வழக்கிழந்தன; சில நெளிந்து கொடுத்தன; சில பெயரளவில் நிற்பன. ஒரு விதத்திற் பார்க்கும்பொழுது நன்னூல் தந்த சமண முனியான பவணந்தியே கவிகளுக்குக் கட்டளையிட்ட கடைசி விமர்சகன் எனலாம். ஆயினும் அவன் புதியன புகுதல் வழுவல; அது கால நியதி என்று போதிய புறனடை வைத்துப் போயினன். விதிவகுக்கும் விமர்சனம் பிறமொழிகள், பலவற்றிலே இறந்து ஒழிந்து

போனதைப்போலவே தமிழிலும் காலவாய்ப்பட்டு இயற்கைமரண மெய்திற்று.

இரண்டாவது நிலையிலே, இலக்கிய விமர்சனமாவது அழகியல் பற்றிய ஆராய்ச்சியாகவே இருந்திருக்கிறது. இலக்கியத்திலே அழகு, உண்மை, நன்மை முதலியன பற்றிய கோட்பாடுகளைப் பற்றிய விசாரமே இது. வடமொழி, கிரேக்கம், ஆங்கிலம், ஜெர்மானிய மொழி முதலியவற்றுடன் ஒப்பிட்டு நோக்கும்போது நமது இலக்கிய விமர்சன மரபிலே இது பண்டைக் காலத்திலே செழித்து வளரவில்லை யென்றே கூறத் தோன்றுகிறது. தமிழ்த் தண்டியலங்காரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையும் இக்கருத்தினையே வலியுறுத்தியுள்ளார். அழகு உத்தி முதலியன பற்றி நமது இலக்கணகாரர் தமது நூல்களிலே இடையிடையே கூறியுள்ளனராயினும், அவற்றைத் தனிச் சித்தாந்த ஆராய்ச்சியாக வளர்த்துவிடவில்லை, மேனாட்டார் வருகையைத் தொடர்ந்தே மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, பரிதிமாற் கலைஞர், பாரதியார், வ. வே. சு. ஐயர் முதலாயினோர் இலக்கியத்திலே அழகியல் எத்தகைய ஸ்தானத்தை வகிக்கிறது என்பதை ஆங்காங்கு தொட்டுக் காட்டியுள்ளனர். மேனாட்டிலே இத்துறைக்கு வித்திட்டவன் கிரேக்க மேதையான அரிஸ்தோத்தல் என்பவன். 'கவிதைக் கலை' என்னும் அவனது அழகியல் நூலை ஒட்டியும் வெட்டியுமே மேனாட்டில் இலக்கியக் கோட்பாட்டு நூல்கள் எழுந்தன. மேனாட்டு இலக்கியங்களிற் பாண்டித்தியம் வாய்க்கப் பெற்றிருந்த வ. வே. சு. ஐயர் தமது நூல்களிலே இத்துறைக்கு முக்கியத்துவம் அளித்தார். உதாரணமாகக் கம்பராமாயண ஆராய்ச்சி என்னும் தமது ஆங்கில நூலிலே காவியத்தின் இலட்சணங்களைப் பற்றியும், துன்பியல் இன்பியல் முதலியனபற்றியும் எழுதியுள்ளார். அரிஸ்தோத்தலரின் மரபிலே வந்தவர் இப்பொழுது இங்கிலாந்திலே வாழ்பவரான ஐ. ஏ. றிச்சாட்ஸ் என்பார். இவர் அழகியல்பற்றி இலக்கிய விமர்சன நூல் எழுதினர். இவரைத் தழுவியும் உள்வாங்கியுமே மாணவருக்கு ஏற்றவகையிலே அ.ச. ஞானசம்பந்தன், மு. வரதராசன், ந. சுப்பு ரெட்டியார், ஆ. முத்துசிவன், வி. செல்வநாயகம் ஆகியோர் கட்டுரைகளும் பாடப் புத்தகங்களும் எழுதியுள்ளனர். இவையாவும், இலக்கியத்தைப் பற்றிச் சிந்தனைகளையும், தத்துவக் கருத்துக்களையும் கூறுவன. அழகு, இன்பம், சுவை, உவமை, உருவகம்பற்றிய இலட்சியவாதக் கோட்பாடுகளை விரித்துக் கூறுவர் இந்நூலாசிரியர்கள். நடைமுறையைக் கவனிக்கும்பொழுது இக் கோட்பாட்டு விமர்சன முறையானது (Theoretical Criticism) இறுதியில், ஒவ்வொரு ஆசிரியரினதும் சமய, தத்துவ ஈடுபாட்டினைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. முதற்கூறிய பிரிவினருக்கும், இவர்களுக்கும் எழுத்தாளன் அல்லது தத்துவம் ஆகியன பற்றியே அக்கறையிருந்தது. படைப்பவனது ஒழுங்கு, படைக்கப்படும் பொருளின் சிறப்பு ஆகிய இரண்டிற்கும் புறத்தே வாசகர் அல்லது நூலைப்படிக்கும் சமுதாயம் என ஒரு மக்கள் கூட்டம் இருக்கிறது என்று சிறிதும் எண்ணினரல்லர். அவர்களைப் பொறுத்தவரையில் உண்மையிலேயே (இலக்கிய) உலகம் உயர்ந்தோருக்கு உரியதாகவே இருந்தது.

மூன்றாவது நிலையிலே அதாவது இன்றைய நிலையிலே இலக்கிய விமர்சனமானது, குறிப்பிட்ட இலக்கியங்களைப்பற்றிய இலக்கிய விளக்கமாக அமைகின்றது.

கவிதை, கதை நாடகம், கட்டுரை முதலாய பல சிருட்டிகளையும் எடுத்துக்கொண்டு, அவற்றை நடுமையமாக வைத்து, படித்தவர், படிப்பவர் ஆகியோருக்கும் அப்பொருள்களுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதே இவ் விளக்க விமர்சன முறையின் அடிப்படைப் பண்பாகும். இதனைப் பொதுவாக ஆங்கிலத்திலே விரிவுரை விமர்சனம் (Descriptive Criticism) என்பர். நவீன வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகவும் பல முகப்பட்டதாகவும் இருப்பதைப் போலவே இவ்விளக்க விரிவுரை-விமர்சனமும் பல உப பிரிவுகளைக் கொண்டதாயுள்ளது. அவற்றையும் நாம் அவதானிக்குமுன், இம் முப்பெரும் முறைகளுக்கும் ஆதாரமாக இருக்கும் வாழ்க்கைத் தத்துவங்களைக் கவனித்தல் தகும். சமயம் பற்றிய வரலாற்றுண்மைகளைக் கவனிப்பதன் மூலம் இலக்கிய விமர்சன வளர்ச்சியை உதாரண விளக்கங்களோடு அறிந்து கொள்ளலாம்.

பண்டைக் காலச் சமயங்களை நோக்குவோமாயின் கரணங்களும், சடங்குகளுமே பிரதான மான சமய ஒழுகலாறுகளாக இருந்தன எனும் உண்மை புலப்படாமற் போகாது. சங்ககாலத்தும் அதனையடுத்தும் 'மந்திர மரபிலே தெய்வம் பேணிய'வர்களும், மறியறுத்துத் தினைபரப்பி வெறியாடி வழிபட்டவர்களும், பிறரும், செயன் முறையில் இவ்வாறு வழிபடல் வேண்டும் என்னும் விதிகள்இருந்தன. வழிபாட்டிற்கும், திருமணத்திற்குமாத்திரம் ஐயர் கரணங்கள் யாத்தனரல்லர். இலக்கிய வடிவங்களுக்கும் விதிவகுத்தனர் 'யாப்பறி புலவர்'. எனவே விமர்சனமும் பிற துறைகளுக்கேற்பவேஇயைந்தும் இணைந்தும் வளர்ந்தது என்பது மனங்கொளத்தக்கது. காலப் போக்கிலே யாகங்கள், சடங்குகள், வேள்விகள் முதலியனபோக தத்துவ விரிவும் சித்தாந்த வளர்ச்சியும் சாத்திர நூலறிவும் ஏற்பட்டனஅல்லவா? மனிதன் யார்? ஆத்மா என்ன? பிரபஞ்சம் எத்தகையது என்னுங் கேள்விகளுடன் பாவ, புண்ணியம் முதலியன குறித்துக் கருத்துக்களும் வளர்ச்சியுற்றமையைப் போலவே, நூலின் இலட்சியம் யாது, நூலின் இயல்புயாது, முனைவன் யார், ஆசிரியன் யாவன், மாணாக்கர் இலக்கணம் எத்தகையது என்பன போன்ற தத்துவ விசாரக் கேள்விகள் எழுந்தன. முதனிலையிலே செய்யுள் மந்திரம் போல இருந்த காரணத்தால் மந்திரச் சடங்குகளுக்குக் கரணம், விதி முதலியன பிரதானமானவையாக விளங்கின; இலக்கியம் வாழ்க்கையின் விமர்சனமாக இருப்பதால் அதன் விமர்சனம் வாழ்க்கையிலே காணப்பட்ட கட்டுப்பாட்டையும் கட்டளைகளின் முக்கியத்துவத்தையும் காட்டுவதாயிற்று. நமது இலக்கணங்கள் இதனையே காட்டும். தத்துவ விசாரத்திலே தருக்கம், தகுதி, பொருண்மை முதலிடம் பெறவே இலக்கியவிசாரத்திலும் கோட்பாடுகள் பிரதானமாயின.

இந்நிலையிலேதான், நமது தமிழிலக்கியத்திலே 'புதுயுகம்' பிறந்தது. அச்சுவாகனப் பெருக்கத்தினைத் தொடர்ந்து, பொது மக்களும் எழுதவும் படிக்கவும் பழகினர். ஆயிரக்கணக்கானோர் நூல்களைப் படிக்கும் நிலைமை தோன்றியது. இப்புரட்சியைப் பலர் சரிவர விளங்கிக்கொள்வதில்லை, விஞ்ஞானக் கருத்துகளும் மெல்ல மெல்ல மக்கள் மத்தியில் இடம் பெறலாயின. சமயத்துறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்படலாயின.

(தொடரும்)




# வானொலி இசை

## — ஆனந்த பைரவி —

**12—1—63 இரவு 9-30—10-30 வரை விஜயலட்சுமி குமாரசுவாமி அவர்களின் கச்சேரி.**

கச்சேரி 'கால கரண' என்னும் சுத்தசாவேரிக் கிருதியுடன் ஆரம்பித்தது. கச்சேரி ஒரு வர்ணத்துடன் ஆரம்பித்திருந்தால் எடுப்பாயிருந்திருக்கும். வானொலிக்குப் பொருந்தக்கூடிய சாரீரத்தையுடைய பாடகர், தாரஸ்தாயிப் பிரயோகங்களில் குரலையடக்கி அமைதியாகப் பாடியிருந்தால் கேட்க நன்றாயிருக்கும். இக் கிருதிக்குப் பாடப்பட்ட ஸ்வரம் சோபிக்கவில்லை.

அடுத்ததாக ராமப்ரியாவில் 'மாதங்கினி ராஜராஜேஸ்வரி' என்னும் கிருதிக்குப் பாடப்பட்ட இராகத்தில் ஒரு சில பிடிப்புகளை திருப்பித் திருப்பிப் பிடித்தமையிலிருந்து கற்பனா சக்தியைக் குறைவாய் மதிப்பிடவேண்டியிருந்தது. தாரஸ்தாயியில் ஸஞ்சாரத்தை முடித்துவிட்டு மத்யஸட்ஜம்வரை சென்று பின் ஹெச்சுஸ்தாயியில் காந்தாரத்தில் நின்று சஞ்சாரம் செய்தமை பாடி வந்த இராகத்தின் அழகைக் கெடுத்துவிட்டது. ஸ்ருதி சுத்தமாக இருக்கிறது என மகிழ்ந்து கொண்டிருக்கும்போது இராகத்தில் மத்யமகாலத்தில் ஸ்ருதியை விலகவிட்டது ஏமாற்றத்தையளித்தது. ஒரே பிடிப்பைப் பலதடவை பிடித்து இராகத்தை விஸ்தரித்துப் பாடியமை இராகத்தினுடைய அழகையும், இரசிகர்களது உற்சாகத்தையும் கெடுத்துவிட்டது. பாடகர் இனிமேல் இப்பிழை நேராதவாறு பார்த்துக்கொண்டால் நன்றாயிருக்கும். சரணத்தில் மத்யமகால ஸாகித்தியத்தில் தாளம் ஆட்டம் கண்டது. ஸ்வரம் சோபிக்கவில்லை. மகுடத்துடன் முடித்திருந்தால் சிறிதளவாவது எடுப்பாயிருந்திருக்கும்.

அடுத்தபடியாக முகாரியில் 'சிவகாம சுந்தரி' என்னும் கிருதிக்குப் பாடப்பட்ட இராகத்தில் 'கமபாதமகரி' 'தநிஸாரிஸ நீதபதம' என்னும் பிரயோகங்களில் பைரவிச் சாயலே பேசியது. மற்றப்படி முகாரி இராகம் பாடகர் சாரீரத்தில் நன்றாகப் பேசியது. தமிழ்ச் சொற்களை வடமொழிக் கலப்புடன் பாடுவது தவிர்க்கப்படல் வேண்டும். உதாரணமாக சிவகாம சுந்தரி என்பது ஷிவகாமஸுந்தரி எனவும், சாமகான என்பது ஷாமகான எனவும் பாடியதை எடுத்துக்கொள்ளலாம். இதைப்போல் இன்னும் பல.

அடுத்ததாக 'சிவேபாஹிமாம்' என்னும் கல்யாணி ராகத்தில் எடுத்தவுடன் கநிதமகரி என்னும் கோர்வை அபஸ்வரமாக ஒலித்தது கேட்கக் கஷ்டமாக இருந்தது. பிரசித்த ராகமும், தீவ்ர ராகமுமான கல்யாணி சோபிக்காமற்போனது பாடகரின் கவலையீனமோ அன்றி காலம் கடந்து பாடுவதால் ஏற்பட்ட அலுப்போ தெரியவில்லை. ஒரு சிறு கச்சேரியில் ஒன்றிற்கு மேற்பட்ட பிரதி மத்யம ராகங்கள் பாடினால் சோபிக்காது. அன்றியும் ஆரம்பத்திலிருந்து அடுத்தடுத்து 3 ராகங்கள் ஆலாபனை செய்தால் கேட்போருக்கு அலுப்பு வந்துவிடும் என்பதைப் பாடகர் யோசிக்கவில்லைப் போலும். இராகத்தின் சாயல் பேசவில்லையேயன்றி ஸ்வரஸ்தானத்தின்படி மத்யமகாஸ் பிரயோகங்கள் நன்றாகப் பேசியது குறிப்பிடத்தக்கது. இக்கிருதிக்குப் பாடப்பட்ட கற்பனாஸ்வரத்தில் கடைசி ஆவர்த்தத்தில் வக்ரதாடு பிரயோகங்கள் ஏதுமின்றி 'ஸநிதபமப' என்னும் பிரயோகமே அடிக்கடி வந்தது பாடகரின் கற்பனாசக்தி அன்று ஓடவில்லை என்பதை எடுத்துக்காட்டியது. ஆனாலும் முதற் பாடிய ஸ்வரங்களிலும் கல்யாணி ராகத்தில் ஸ்வரம் சிறிது சோபித்தது.

கடைசியாக ஸிந்து பைரவியில் பாடப்பட்ட 'நிலையமொன்றெனக் கருள்வாய்' என்னும் பாடல் கச்சேரியைச் சிறிது சோபிக்கச் செய்தது.

பொதுவாக முன்னேறக்கூடிய பாடகர். ஸ்வரம் பாடப் பயிற்சி அதாவது சாதகம் பண்ணவேண்டும். சாரீரம் வானொலிக்கு நன்றாகப் பொருந்துகிறது. அமைதியாகவும், மேற்கூறிய குறைகளை நீக்கியும் பாடினால் முன்னேற இடமுண்டு.

*

நாடகம்:

# "அவமானம்"

இடம்; சரஸ்வதி மண்டபம்.

காலம்: ஜனவரி 26-27, பி.ப. 6.15 மணி.

**கதை:** மணியகாரர் உயர்ந்த சாதி; பொன்னர் தாழ்ந்த சாதி. மணியகாரருக்கு ஒரு மகள்; பொன்னருக்கு ஒரு மகன். வழக்கமான காதல்—வழக்கமான எதிர்ப்பு—வழக்கமான திருமணம்—வழக்கமான ஒன்று கூடல்.

பார்த்துப் பார்த்துச் சலித்த பழைய கதை. என்றாலும், கையாளப்பட்ட பிரச்சினைதான் இன்னும் இருக்கிறதே! எனவே இதை மட்டுமல்ல, இனி வரப்போகும் இத்தகைய கதைகளையும் சகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

**வசனம்:** கோயில் புக்கையில் திராட்சை வத்தல் கடிபடுவதைப் போன்று ஓரோர் சமயம் தித்திக்கத்தான் செய்கிறது — ஆனால், திராட்சையின் தித்திப்பைநம்பிப் புக்கையைக் கைவிடலாமோ?

**தயாரிப்பு:** மேடை அமைப்பு முதல் காட்சிகள் மாறும் கெதி வரை பிரமாதம். தமிழ் நாடகங்களுக்கு நல்லதொரு முன்மாதிரி. பாராட்டுகிறோம்.

**இசை:** எக்கோடியன் வாத்தியம் இனிமையாக இருந்தது. ஆனால் நாடகத்திற்கும் அதற்கும் என்ன சம்...?

**ஒலி-ஒளி:** குறிப்பிடும்படி எதுவும் இல்லாவிடினும், சுமார்.

**நடிப்பு: மணியகாரன்:** *(செ. பரமானந்தன்)* சாதி வெறி பிடித்த தந்தையின் பாத்திரத்தை வெற்றியுடன் செய்திருக்கிறார். நடிப்பிலிருக்கும் மிதமிஞ்சிய துடிப்பை ஓரளவு கட்டுப்படுத்தியிருந்தால், 'சில சமயங்களில் ஓவர்' என்ற பேச்சுக்கு இடமிருந்திருக்காது.

**வசந்தி:** *(விஜயாள் இரத்தினசாமி)* நல்ல நடிப்பு. 'குளோஸ் அப்'பில் பார்த்து ரசிக்க வேண்டிய முகபாவம். காதலுக்கு அனுமதிகோரித் தந்தையிடம் வாதாடும் கட்டமும், தமையனிடம் காதலனை அறிமுகப்படுத்திவிட்டு, 'எப்படி ஆள்?' என்று கேட்கும் கட்டமும் சிறப்பு.

**பத்மநாதன்** *(க. பாலேந்திரா)* காட்சிக்கு ஒரு உடையில், தோன்றுகிறார். கண்ணுக்குக் குளிர்ச்சிதான்; ஆனால் நடி ! மைக்கிற்கும் அவருக்கும் என்னகுரோதம்? ஏனைய நடிகர்கள் அத்தனை பேரினதும் குரல்களையும் வெகு ஒழுங்காகக் கிரகித்து ஒலிபெருக்கிய அது, அவருடைய குரலை மட்டும் மக்கர் பண்ணிவிட்டதே! தந்தையிடம் தங்கைக்காகப் பரிந்துபேசி அடிவாங்கும் கட்டம் நன்று.

**பொன்னர்:** *(சிசு. நகேந்திரா)* நடையிலிருந்து, பார்வை வரைக்கும் தனக்குத் தரப்பட்ட பாத்திரத்தை நுணுக்கமாகச் செய்திருக்கிறார். தனையனைக் கூப்பிட்டு, 'தம்பி, பள்ளிக்கூடத்திலே ஏதோ விளையாட்டு விடுகிறாயாமெடா?' என்று கேட்கும் கட்டம் தத்ரூபம்.

**கணேஷ்:** *(எஸ். பத்மநாதன்)* குறிப்பிட எதுவுமில்லை.

**மங்களம்:** *(கருணேஸ்வரி ராஜாஸ்)* பாத்திரத்தை உணர்ந்த நடிப்பு. படபடென்று பேசுவது சில சமயங்களில் விளங்கவில்லை.

**பியோன்:** *(எஸ். இராஜரத்தினம்)* வழமைபோல் குலுங்கக் குலுங்கச்சிரிப்பூட்டுகிறார். ஏனைய நாடகங்களைவிட, அவரது நடிப்பு இதில் ஒரு படி கூடத்தான். நாடகத்தினிடையில், சபையாரோடு பேசுவது, ஒரு பத்து வருஷத்திற்கு முன்பென்றால் நன்றாயிருந்திருக்கும். அந்த உத்தியை ராஜ் தவிர்த்தாலென்ன?

**தங்கம்:** *(ரதிதேவி சுப்பிரமணியம்)* பியோன் மனைவியாக வந்து சக்கைப்போடு போடுகிறார். பேச்சு, தோற்றம், முகபாவம், சமயோசிதம்...எல்லாமே நன்று. 'அவமானம்' நாடகத்தில் சிறந்த நடிகருக்கு ஒரு பரிசு உண்டென்றால், அதைத் தயங்காது ரதிதேவிக்குக் கொடுக்கலாம்.

**வாச்சர்:** *(எஸ். தில்லைராஜா)*— **கோயில் மணியம்** *(எம். திருநாவுக்கரசு)* இரண்டும் நாடகத்திற்குத் தேவையற்ற, வலிந்து புகுத்தப்பட்ட பாத்திரங்கள்; என்றாலும் மனதில் நிற்கின்றனவே!

**நிர்மலா:** *(நிர்மலா சண்முகநாதன்)* அனுவசியம்!... எதிர்காலத்தில் பயன்படுத்திக்கொள்ள ராஜ் இப்பொழுதே பயிற்சி கொடுக்கிறாரோ என்னவோ!

**நேர்ஸ்:** *(திருமதி இராஜரத்தினம்)* மேடையில் பார்த்ததாக ஞாபகமில்லை.

**மொத்தத்தில்**-'அவமானம்' நாடகத்திற்காக சி. எஸ் ஐ. சபையினர் ராஜ்க்கு ஒரு தங்கப்பதக்கம் வளங்கினர். முற்றிலும் பொருத்தமே!

—நநி.

# பயனற்ற பாண்டித்தியம்

காலஞ் சென்ற கேசவ சந்திர சேனர், ஒருநாள் தக்ஷிணேசுவர ஆலயத்திலிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் வந்து, ''சுவாமி! பண்டிதர்கள் சாஸ்திரங்கள் பலவற்றைப் படித்த போதிலும் உண்மையான ஆத்ம தத்துவத்தைப்பற்றி ஏன் ஒன்றுமே தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்?'' என்று கேட்டார். அதற்குப் பரமஹம்சதேவர் ''பருந்தும் கழுகும் ஆகாயத்தில் வெகு உயரத்தில் பறக்கிறதை நீர் பார்க்கிறீர். ஆயினும் அவைகள், எந்தக் குழிகளில் அழுகிய பிணங்கள் கிடக்கின்றன வென்று கண்களைக் கீழே நோக்கிய வண்ணமாகவே இருக்கின்றன. அதுபோல, பண்டிதர்கள் எனப்படுகிறவர்கள், சாஸ்திரங்களைக் கற்றவர்களாக இருப்பினும் காம காஞ்சனங்களாகிற (காமமும், பண ஆசையும்) உலகப் பற்றுக்களால் பந்தப்பட்ட மனமுடையவர்களாக இருக்கின்றனர். ஆதலால்தான் அவர்கள் மெஞ்ஞானத்தைப் பெறுவதில்லை'' என்று பதில் சொன்னார்.

—**ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்**
உபதேசம்

**கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அரெனின்**

—திருக்குறள்.




# உயர்ரகமான

அலுமினியபபாத்திரங்கள்





## டொலர்

ஆரோக்கியமான சமையல்களைச் செய்வதற்கு "டொலர் மார்க்" அலுமினியப் பாத்திரங்களை பாவியுங்கள்

உணவுப் பதார்த்தங்கள் கெடாமல் சூடாக வைத்திருப்பதற்கு "டொலர் மார்க்" அலுமினிய பாத்திரங்களையே பாவியுங்கள்.

உங்களுடைய சாப்பாட்டு அறைக்கு ஸ்டோர்ரூமுக்கு, உங்களுடைய ருசிக்கு ஏற்றதாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுவது 'டொலர்' அலுமினியப் பாத்திரங்கள்.

Cfa: Ali

**டொலர் கோர்பரேஷன்**

**14. டாம் வீதி கொழும்பு.**

தந்தையின் கரங்களால் உயிர் பெறுந்
திறமைகள்!

தாய்நாட்டு மண்ணிலே வர்ணமொழிகளால்
வளரும் கைவண்ணங்கள்! மாதிரிகள்!

விநாடிக்கு விநாடி விருப்பத்திற்கேற்ப
முன்னேறும் வாழ்க்கையின் சின்னங்கள்!

காலத்தின் செல்வங்கள்! கலையாக - சித்திர
மாக - கைவண்ணமாகப் பின்னி பின்னி
வரும் **கைத்தறிச் சேலைகளையே**
உபயோகியுங்கள்!

# handlooms

GOVT OF INDIA
7 SEA ST. COLOMBO 11.

*Branches*

| 47 MAIN STREET | 69 COLOMBO STREET | 20 BAZAAR ST. |
|---|---|---|
| JAFFNA | KANDY | BADULLA |

WAA/H


Edited and puplished by S. Arunmoli Thever Residing at 441, Bloemendal Road Colombo-13 on February 1st 1963 for the proprietor of the THENARUVI and Printed at Rajeswari Press, 18, Prince Street, Colombo-11